பக்கங்கள் 20

20/=

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

19-25 ஜூன் 2019

வாரஇதழ்



## அகதிகளும் ஆளுநரும்



## திருந்தப் போவதில்லை



## குழப்பத்தை ஏற்படுத்த அந்நிய சக்திகள் சதி!

உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்

# வன்னியின் குரல்

● கருணாகரன்

# மன்னகுளம்: மறமும் மறத்தலும்

மன்னகுளத்தைப் பற்றி இப்ப யாருக்குமே நினைவிருக்காது. ஆனால் சந்திரிகா குமார துங்க வன்னி மீதான படையெடுப்பை நடத்திய ஜெயசிக்குறுக் காலத்தில் மன்ன குளத்தைப்பற்றி எல்லோருக்குமே தெரியும். பத்திரிகைகளில் பல நாட்களில் மன்ன குளம் தலைப்புச் செய்தியாகியிருக்கிறது. அரசாங்கத்தின் செய்திக்குறிப்பிலும் மன்னகுளம் முதலிடத்திலிருந்தது.

அப்போது புலிகளின் படையணிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையிலான சண்டையில் மன்ன குளம் பெரியதொரு சமர்க்களம். “மன்னகுளம் சண்டை” என்று குறிப்பிட்டுச் சொல்லுமளவுக்கு அங்கே பெரிய சண்டை நடந்தது. முக்கியமாக இலங்கை இராணுவத்தின் “கிறீன் பரேட்” என்ற சிறப்புப் பயிற்சி பெற்ற படையணியைப் புலிகள் தாக்கிச் சிதறடித்திருந்தனர். இலங்கை இராணுவத்தின் டாங்கி ஒன்றும் அங்கே தாக்கியழிக்கப்பட்டது. விமானப்படையின் உலங்குவானூர்தி ஒன்றும் சேதமாக்கப்பட்டது என்று நினைவு. இதைவிடப் பல படையினர் அங்கே கொல்லப்பட்டனர்.

ஜெயசிக்குறு நடவடிக்கையை முறியடிப்பதற்காகப் புலிகள் நடத்திய ‘ஓயாத அலைகள் - 02’ இலும் மன்ன குளம் முக்கியமான களமே. மன்னகுளத்திலிருந்த படை முகாமைத் தாக்கிப் பெருமளவு ஆயுதங்களைப் புலிகள் அள்ளினார்கள். மன்னகுளம் சண்டையைப்பற்றி அதிலீடுபட்ட போராளிகளிடம் கேட்டால் இப்போதும் கதை கதையாகச் சொல்வார்கள்.

இப்படி நவீன போர் வரலாற்றில் மன்னகுளம் தன்னைச் சரித்திர முக்கியத்துவமுடையதாகப் பொறித்துக் கொண்டது.

இவ்வளவுக்கும் மன்னகுளம் மிகச் சிறிய கிராமம். வடக்கு வவுனியாவில், நெடுங்கேணிப் பிரதேச செயலர் பிரிவில் கனகராயன்குளம், மதியாமடு ஆகியவற்றுக்கு அண்மையில் உள்ள காட்டுக் கிராமம். அடிப்படை வசதிகளே இல்லாத கிராமம். அப்போது மட்டுமல்ல, இப்போதும்தான்.

150 குடும்பங்களுக்குள்தான் அங்கே இருக்கின்றன. எல்லோருக்கும் ஒரே தொழில் விவசாயமே. ஆனால் செழிப்பான விவசாயம் என்று சொல்ல முடியாது. ஏதோ வாழ்க்கையை ஓடுகிறது என்று சொல்லிக்கொள்ளக் கூடிய அளவுக்கு நாளாந்த வாழ்க்கையை ஓட்டுமளவுக்கான விவசாயம். இதற்கு மேல் வருவாயைப் பெறக் கூடிய அளவுக்கு விவசாயத்தைச் செய்யலாம். அதற்கு ஏற்பாடுகள் வேணும். திட்டங்கள் வேணும். அடிப்படை வசதிகள் வேணும். இவற்றையெல்லாம் உருவாக்க வேண்டும். இப்போதிருக்கிற மன்னகுளத்துக்கு ஒழுங்கான ஒரு தெருக்கூடக் கிடையாது. இந்தச் சீரில் எப்படி திட்டங்களும் வசதிகளும் கிடைக்கும்? குறைந்த பட்சம் அங்கே உள்ள பள்ளிப்பிள்ளைகளுக்கு என்ன வசதியிருக்கும் என்று எண்ணிப் பாருங்கள். வன்னியின் எல்லா ஆழக்கிராமங்களின் விதிதான் மன்னகுளத்துக்கும்.





காட்டையும் வீதியோரப்பற்றைகளையும் அவற்றிலிருக்கிற பூக்களையும் காட்டுப்பழங்களையும் தும்பி, புறா, கிளி, மயில், ஓணான், பாம்புபோன்றவற்றையும்தான் படித்துக் கொண்டிருக்கிறார்கள் இங்குள்ள பிள்ளைகள். சூழலே இவர்களுடைய கல்வி. ஒழுங்காகப் பாடம் சொல்லிக் கொடுப்பதற்கு ஆசிரியர்கள் வருவதே ஆச்சரியம். அப்படி வந்தாலும் அது பாரதிராஜாவின் ஆரம்பகாலப் படங்களில் வருகிற கிராமத்து ஆசிரியர்களைப்போலவே இருக்கும். பள்ளிக்கூடங்களின் நிலையும் அங்கே படிக்கின்ற பிள்ளைகளின் நிலையும் கூட அப்படித்தான்.

ஆனால் மன்னகுளத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க அம்மன் கோயிலுண்டு. முதிய மரங்களுண்டு. பட்டி நிறைய மாடுகளுண்டு. பாலும் தயிருமுண்டு. மானாவாரிச் செய்கையுண்டு. வேட்டையும் காடுமறிந்த ஆட்களுண்டு. கூத்தும் பாட்டுமுண்டு. இன்னும் வெட்கத்தைத் தங்களுடைய இதயத்தில் நிரப்பி வைத்திருக்கும் பெண்களுண்டு. ஆளுக்கு ஆள் உதவும் பழக்கமுண்டு. எல்லோரும் கூடிக் கொண்டாடும் கிராமத்துப் பண்பாடுண்டு. காட்டுப்பழங்களுண்டு. இரவும் பகலும் வழியிலும் தெருவிலும் வயலிலும் வளவிலும் பிணைந்து புரள்கிற பாம்புகளுண்டு.

இப்படி ஆயிரம் சிறப்புச் சங்கதிகளிருந்தாலும் யாரும் மன்னகுளத்திற்குக் குடியிருக்கப்போவதில்லை. ஏன் அங்கே உத்தியோகத்தின் நிமித்தமாகக் கூட யாரும் போக விரும்புவதில்லை. அப்படிப் போகத்தான் வேணுமென்றாலும் ஏதோ நரகத்துக்குப் போவதைப்போல வேண்டா வெறுப்புடனேயே போகிறார்கள். லட்சக் கணக்கில் செலவழித்துக் கனடா, லண்டன், பாரீஸ், போன்ற நாடுகளுக்குப் போவதற்காக அலைகிறார்கள். ஏன் படகேறிப் பசுபிக் சமுத்திரத்திலே பல பத்து நாட்கள் ஆபத்தான வழியில் பயணம் செய்து அவுஸ்திரேலியாவுக்குப் போக முயற்சிக்கிறார்களே தவிர, வரலாற்று முக்கியத்துவமும் பண்பாட்டுச் சிறப்பும் வளமும் உள்ள மன்னகுளத்துக்குப் போவதற்கு யாரும் தயாராக இல்லை. தாய் மண்பற்றும் தாயக விடுதலையும் இந்த அளவில்தான் இருக்கிறதா? என்று உங்களுக்குள் ஏதாவது ஒரு வில்லங்கமான கேள்வி எழுந்தால் பேசாமல் அதை அப்படியே அமுக்கிக் கொன்று விடுங்கள். இது நாடக உலகம் என்று உங்களுக்கும் தெரியும்தானே.

மன்னகுளத்தில் வாழ விதிக்கப்பட்டவர்கள் அங்கே வாழட்டும். மண்ணோடு மண்ணாக அவர்களுடைய வாழ்க்கை இருக்கட்டும். அவர்கள் அங்கே வாழ்ந்தால்தான் அந்த மண் பாதுகாக்கப்படும். அவர்களுக்கு அங்கே வாழ்வதொன்றும் பிரச்சினையில்லை. பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து பழகிவிட்டார்கள் என்றெல்லாம் சொல்லிக் கொள்வதற்கு நமக்கு ஏராளம் நியாயங்களுண்டு.

ஆனால், மன்னகுளத்திலுள்ள சனங்களுக்கும் அரசியல் தீர்வு வேணும். அவர்களுக்கும் அபிவிருத்தியில் பங்குண்டு. அவர்களுக்கும் அபிலாஷைகளிருக்கின்றன. அவர்களும் வரலாற்று நாயக, நாயகிகளே. அவர்களும் விடுதலைப்போராட்டத்தில் பங்களித்திருக்கிறார்கள். அவர்களும் பாடுகளைச் சுமந்திருக்கிறார்கள். அவர்களும் அகதிகளாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களும் இந்த மண்ணுக்கும் விடுதலைக்கும் உரித்தானவர்களே.

அப்படியென்றால் யாழ்ப்பாணத்தைப்போல, வவுனியாவைப்போல, கிளிநொச்சி, மன்னாரைப்போல மன்னகுளத்தையும் நாங்கள் பார்க்க வேண்டுமல்லவா!

“மாங்குளத்துக்கே மாகாணசபையைக் கொண்டு போகத் தயாரில்லாமல் இருக்கும்போது நீங்கள் வேறு மன்னகுளத்தைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறீங்கள்” என்கிறார் நண்பர் ஒருவர்.

“அதிகாரப் பகிர்வுக்கும் பரவலாக்கத்துக்குமாகக் குரலெழுப்பிக் கொண்டிருக்கும் ஒரு சமூகம் இதைப் புரிந்து கொள்ளும்” என்கிறேன் நான்.

நண்பர் சிரிக்கிறார்.

ஜெயசிக்குறு நடவடிக்கையை முறியடிப்பதற்காகப் புலிகள் நடத்திய ‘ஓயாத அலைகள் -02’ இலும் மன்னகுளம் முக்கியமான களமே. மன்னகுளத்திலிருந்த படை முகாமைத் தாக்கிப் பெருமளவு ஆயுதங்களைப் புலிகள் அள்ளினார்கள். மன்னகுளம் சண்டையைப்பற்றி அதிலீடுபட்ட போராளிகளிடம் கேட்டால் இப்போதும் கதை கதையாகச் சொல்வார்கள்.

“கற்பனை உங்களுக்கு அதிகம்தான். குருட்டு நம்பிக்கையில் கண்டதைப்பற்றியெல்லாம் கண்டபாட்டுக்குக் கணக்குப் போட்டுக்கொண்டிருக்கிறீங்கள்” என்கிறார் நண்பர்.

நியாயம் எப்படிக் கற்பனையாகும்? அது எப்படிக் குருட்டு நம்பிக்கையாக இருக்க முடியும்?

ஆனால், இன்று நம்முடைய சூழலும் பொது வெளியும் அப்படித்தான் இருக்கிறது.

(17ஆம் பக்கம் பார்க்க)

எதிரொலி
Ethiroli

அம்பலம் பதிப்பகம்,
இல. 241, கைதடி - மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
ethirolimedia@gmail.com, 0212243818

# திருந்தப் போவதில்லை

நல்ல மாட்டுக்கு ஒரு சூடு என்பார்கள். ஆனால் சில மாடுகள் எத்தனை சூடு பட்டாலும் திருந்துவதில்லை. அதனையே இலங்கை அரசியல் அடிக்கடி உணரவைத்துக் கொண்டு இருக்கிறது.ஈஸ்டர் நாளில் ஒட்டுமொத்த இலங்கையும் குண்டுவெடிப்புக்களால் அதிர்ந்து கொண்டிருந்த போது, இலங்கை ஜனாதிபதி நாட்டில் இருக்கவில்லை. அதுவும், தாக்குதல் நடக்கப் போவதாகப் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்தபோதும், அதைக் குப்பைத் தொட்டிக்குள் போட்டு விட்டு , வெளிநாட்டுச் சுற்றுலாவுக்குப் பறந்து விட்டார். இந்த அலட்சியமே, இவ்வளவு அழிவினை ஏற்படுத்தும் அடிப்படைக் காரணியாகவும் அமைந்து விட்டது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம், சாட்சியமளிப்போரின் வாக்குமூலங்கள் "சஹ்ரானை விடவும் ஜனாதிபதி மைத்திரியே , குண்டுத்தாக்குதல்களுக்கு காரணி" என்பதையே சொல்கின்றன. சஹ்ரானை மைத்திரிக்கு தெரிந்திருக்கிறது. அவரது தேர்தல் வெற்றிக்காக சஹ்ரான் உழைத்திருக்கிறார். சஹ்ரான் கும்பல் மீதான விசாரணைகளை இடைநிறுத்துமாறு மைத்திரி ஆணை பிறப்பித்திருக்கிறார். தாக்குதல் குறித்த புலனாய்வுத் தகவல் கிடைத்தும் அது குறித்த எச்சரிக்கையை உரிய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தத் தவறியிருக்கிறார். 'இந்த நாடும் நாட்டு மக்களுக்கும் நாசமாகப் போகட்டும்' என்கிற பாணியில் விட்டேத்தியாக, வெளிநாட்டுக்குப் பறந்திருக்கிறார். ஆக, குற்றவாளிக்கூண்டில் இறந்து போன சஹ்ரானை நிறுத்துவதை விட, மைத்திரியை அந்தக் கூண்டில் ஏற்றுவதே சாலப்பொருத்தம்.

இத்தனை நடந்த பின்னும் இனியாவது திருந்தி நல்லபிள்ளையாக இருக்கிறாராவென்றால், அதுவுமில்லை. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவைக் கலைக்க விட்டால், அமைச்சரவைக் கூட்டங்களை நடத்த விடமாட்டேன் என்று அடம்பிடிக்கிறார். தெரிவுக்குழு முன்னால் எந்தவொரு அதிகாரியும் சாட்சியமளிக்கக் கூடாது என மிரட்டுகிறார். ஒக்ரோபர் சதியைப் போல, இன்னொரு முறை அரசைக் கவிழ்க்க, உள்ளக ரீதியாகக் காரியங்கள் செய்கிறார். ஒரு பொறுப்பான ஜனாதிபதி செய்ய வேண்டிய வேலைகளா இவை?

சீர்கெட்டுப் போயுள்ள இன நல்லிணக்கத்தை உண்டுபண்ணல், இழிபுள்ளிநிலையை அடைந்துள்ள இலங்கையின் சுற்றுலாத்துறையை நிமிர்த்த வழி பார்த்தல், சர்வதேச உதவிகளைப் பெற்று பொருளாதாரத்தை உறுதிப்படுத்தல், இழுபட்டுக் கொண்டே செல்லும் தேர்தல்களை உடனடியாக நடத்துதல் எனச் செய்ய வேண்டிய காரியங்கள்மலை போல குவிந்து கிடக்கையில், வலிந்து புதிய பிரச்சினைகளை உருவாக்கி, தானும் குழம்பி, நாட்டையும் குழப்பும் பணியை மட்டுமே மைத்திரி செய்து வருகிறார்.

4 வருடங்களுக்கு முன்னர் ஒரு தேவதூதனைப் போல பார்க்கப்பட்ட மைத்திரி, இப்போது ஒட்டுமொத்த மக்களுக்கும் கோமாளியாகி விட்டார். எஞ்சியிருக்கும் பதவிக்காலத்திலாவது நல்லபேர் வாங்குவதை விடுத்து, தன்னுடைய குறளிவித்தையைக் காட்டி விட்டு, மலேசியா, சிங்கப்பூர், தஜகிஸ்தான், கம்போடியா என்று உலாத்தல் வேறு. இனிமேல் கடவுளே வந்து பிரசாரம் பண்ணினாலும், மைத்திரிக்கு வாக்குப்போட மாட்டோம் என்ற மனநிலைக்கு மக்கள் வந்துவிட்டார்கள். வந்துவிட்டார்கள் என்று சொல்வதை விடவும் தன் கோமாளித்தனத்தால் மைத்திரியே அப்படியான நிலையை உருவாக்கிவிட்டார் என்பதே களயதார்த்தம்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"



# அரசியலும் தொண்டர் ஆசிரியரும்

■ ச.லலீசன்

யாழ்ப்பாணத்துக்கு கடந்த வாரம் வந்திருந்த 'உண்ணாவிரதம்' புகழ் அத்துரலிய ரத்தின தேரரின் காலில் வீழ்ந்த தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் எடுத்துத் தருமாறு கோரியிருக்கின்றனர்.

நான் அறிய 1990களில் இருந்து இந்தத் தொண்டர் ஆசிரியரை . நிரந்தரமாக்கும் படலம் அரங்கேறிய வண்ணம் இருக்கின்றது.

இன்று வடபுலத்தில் உள்ள 16 ஆயிரம் ஆசிரியர்களுள் ஏறத்தாழ 5000 ஆசிரியர்கள் வெவ்வேறு காலப் பகுதிகளில் நியமனம் பெற்ற தொண்டர்கள் என்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

தொண்டர் ஆசிரியரின் நிரந்தர நியமனம் இன்று முற்றுமுழுதாக அரசியல் மயப்பட்ட செயற்பாடாகவே நடைபெறுகின்றது.

வடபுலத்தை மையப்படுத்திச் செயற்படுகின்ற அத்தனை அரசியல் கட்சித் தலைவர்களும் (தங்கள் இருப்பைத் தக்கவைப்பதற்காக) வெவ்வேறு காலப்பகுதிகளில் இத்தகைய நியமனங்களைச் செய்துள்ளனர்.

ஆயினும் அவ்வாறு நியமனம் பெற்றவர்களில் பலர் அத்தகைய நியமன அரசியலாளர்களுக்கு விசுவாசமாக நடந்து கொண்டனரா என்பதுவும் கேள்விக்குரியது.

சாதாரண தரத்தில் கணித பாடத்தில் திறமைச் சித்தி (சி) பெற்ற ஒருவர் உயர்தரத்தில் கலைப்பாடங்களைக் கற்று தொண்டர் ஆசிரியர் நியமனத்தின் ஊடாகக் கணிதபாட ஆசிரியராக முடியும். ஓ எல் வரையான வகுப்புக்களுக்குக் கணிதம் கற்பிக்க வேண்டிய கடப்பாட்டிற்கும் உள்ளாக முடியும். இது கல்வித்துறை சார்ந்த பலரும் அறிந்த இரகசியம்.

வடக்கு கிழக்கு மலையகம் உள்ளிட்ட தமிழர் பிரதேசங்கள் கல்வியில் வரிந்து கட்டிக்கொண்டு கடைசி இடங்களைப் பெற்று நிற்பதற்கு தரமான ஆசிரிய தகுதிக்கான பற்றாக்குறையும் பிரதான காரணமென கல்வியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்த இடத்தில் - இத்தகு ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கின்ற ஆசிரிய கலாசாலைகள் என்ன செய்கின்றன என்ற கேள்வியைச் சிலர் முன்வைப்பர். சமையலில் கறுப்பன் அரிசியைத் தந்தால் கறுப்பன் சோறு என்பதுவும் கோறாவைத் தந்தால் கோறாச் சோறு என்பதுவும் யதார்த்தமான உண்மை.

நாம் அறியும் படியாகக் கல்வியில் கடைசியில் இருந்த அம்பாந்தோட்டை இன்று முன்னிலை பெற்று நிற்கின்றது. நாங்கள் அவர்கள் முன்பிருந்த இடத்தைப் பிடித்து வைத்திருக்கின்றோம்.

தென்பகுதியைச் சேர்ந்த கல்விசார் உயர் அதிகாரிகள் சிலர் நிகழ்வொன்றில் கருத்துரைத்தனர். தமது ஜனாதிபதி மகிந்தவே தொண்டர் ஆசிரியர் நியமனத்தைத் தங்கள் பிரதேசத்தில் நிறுத்தியவர் எனப் பெருமை சாற்றினர்.

**"**

**தொண்டர் ஆசிரியரின் நிரந்தர நியமனம் முற்றுமுழுதாக அரசியல் மயப்பட்ட செயற்பாடாகவே நடைபெறுகின்றது. வடபுலத்தை மையப்படுத்திச் செயற்படுகின்ற அத்தனை அரசியல் கட்சித் தலைவர்களும் (தங்கள் இருப்பைத் தக்கவைப்பதற்காக) வெவ்வேறு காலப்பகுதிகளில் இத்தகைய நியமனங்களைச் செய்துள்ளனர்.**

வடக்குக் கிழக்கில் நியமனம் கொடுத்து எம்மைப் புறக்கணிக்கலாமா என அவர்களில் சிலர் மகிந்தரிடம் கேட்டனராம். அது அவர்களின் அரசியலாளர்கள் கேட்கின்றனர். அதன் நன்மை தீமைகள் அவர்களைப் பொறுத்தது என்றாராம்.

இருப்பினும் தொண்டர் நியமனம் பெற்று பிரகாசிக்கும் ஆசிரியர்களும் உள்ளனர். ஆசிரியத் தொழில் என்பது ஒரு தவம். அவர்கள் பிறப்பில் ஆசிரியர்கள். இது எல்லா தகுதியினருக்கும் பொருந்தும்.

இலங்கையில் ஆசிரிய நியமனம் பல்வேறு வகையான உள்ளீடுகளைக் கொண்டிருக்கின்றது. பட்டதாரி தொடங்கி தொண்டர் வரை இதில் அடக்கம். ஒவ்வொரு தகுதி சார்ந்த ஆசிரியர்களதும் வினைத்திறன்களும் மதிப்பீட்டிற்குட்படுத்தப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். இது உயர்கல்வி நிறுவனங்களின் பணியாகும்.

பாமசியில் மருந்து கொடுத்தவரை டொக்டர் ஆக்கும் வழக்கும் இல்லை. (கடந்த மாகாண சபையில் எதிர்க்கட்சித் தலைவர் சொல்லக் கேட்டது) ஆனால் உயிரோடு உறவாடும் இத்தொழிலில் இவை எல்லாம் நடந்தேறுகின்றன.

எல்லோரும் ஆளாளுக்குத் தம்பணியைச் செய்து விட்டனர். இனித் தேரரும் செய்யட்டும்.

விதியே விதியே தமிழச் சாதியை என்செய நினைத்தாய்? ....

# அகதிகளும் ஆளுநரும்



● எஸ். ரத்னஜீவன் எச். ஹூல்

### பின்னணி

அட்பாஸ்அகமதி(வயது-33), அவருடைய மனைவி ஹக்கிமா (வயது-30) மற்றும் 12 தொடக்கம் 6 வயது வரையிலான நான்கு பிள்ளைகள் ஆகியோர் 5 வருடங்களுக்கு முன்னர் ஆப்கானிஸ்தானிலிருந்து இலங்கைக்கு அகதிகளாக வந்தார்கள். அவர்களுடைய அகதி அந்தஸ்துக்கான விண்ணப்பங்கள் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளர் அலுவலகத்தினால் (UNHRC) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பதுடன், அவர்களை மீளக் குடியேற்றுவதற்கான ஒரு நாட்டை தேடிக் கண்டுபிடிக்கும் வரையில் இங்கு வாழ்வதற்கான ஆவணங்களை அவர்கள் தம் வசம் வைத்துள்ளார்கள். இவை அனைத்தும் வெளிநாட்டு அமைச்சின் ஒப்புதலுடனேயே இடம்பெற்றுள்ளன. அவர்கள் இலங்கையில் சட்ட ரீதியான விதத்திலேயே தங்கியிருக்கின்றார்கள்.

### தலைகீழ் மாற்றம்

ஆனால் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களை அடுத்து அவர்களுடைய உலகம் தலைகீழாக மாறியது. வன்முறைக் கும்பல்கள் முஸ்லிம் அகதிகள் மீது தாக்குதல் தொடுத்ததுடன், அந்த அகதிகள் தற்போது தங்கியுள்ள பிரதேசங்களிலிருந்து வெளியேறிச் செல்ல வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தார்கள். அவர்களுடைய இந்த வெளியேற்ற நடவடிக்கைக்கு பொலிஸார் தூண்டுதல் அளித்ததாக நம்பகமான அறிக்கைகள் தெரிவிக்கின்றன. அகதிகள் மீது தாக்குதல் தொடுப்பதற்கு வன்முறைக் கும்பல்கள் வந்த பொழுது, அவர்களைக் கைது செய்யவோ அல்லது அந்த வன்முறைக் கும்பல்களின் செயற்பாடுகளைத் தடுப்பதற்கோ பொலிஸார் எதையும் செய்யவில்லை. அதற்குப் பதிலாக, அவர்கள் பொலிஸ் நிலையங்களிலும், பள்ளிவாசல்களிலும் அமைக்கப்பட்ட முகாம்களுக்கு அந்த அகதிகளை அழைத்துச் சென்றார்கள். தேசிய கிறிஸ்தவப் பேரவை ஒரு சில அகதிகளை தமது கட்டடத்துக்குள் எடுத்த பொழுது, பௌத்த பிக்குகளின் தலைமையிலான வன்முறைக் கும்பல்கள் அவர்களைத் துரத்தியடித்தன. சர்வோதய இயக்கத்தினால் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கும் இதே கதியே நிகழ்ந்தது.

வட மாகாணம் மட்டுமே இது தொடர்பாக அமைதியாக இருந்து வருவது போல் தெரிந்தது. இந்த அகதிகளை செட்டிகுளத்துக்கு அழைத்து வருவதற்கு அரசாங்கம் திட்டமிட்ட போதிலும், ஒரு சில தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். கொழும்பில் வாழ்ந்து வரும் ஏனைய சமூகங்களுக்கு மத்தியில் தமிழர்கள் இருந்து வருவது ஆபத்தானது எனக் கூறி கோத்தபாய, 2007ஆம் ஆண்டில் தமிழ் மக்களை கொழும்பிலிருந்து வெளியேற்றிய சம்பவத்தை இந்தத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மறந்திருப்பார்கள் போல் தெரிகிறது. ஏனென்றால், இப்பொழுது அவர்கள் முஸ்லிம்கள் தொடர்பாகவும் அதே விதத்திலான ஒரு கருத்தைக் கூறுகின்றார்கள். இந்த முஸ்லிம்கள் இங்கிருப்பதைப் போலவே பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் வேறு நாடுகளில் வாழ்ந்து வருகின்றார்கள் என்ற விடயத்தையும், அவர்கள் நல்ல விதத்தில் நடத்தப்பட்டு வருகின்றார்கள் என்ற விடயத்தையும் நாங்கள் மறந்து விடுகின்றோம். அஹமதியா முஸ்லிம்கள் இலங்கையில் தற்காலிகமாக மட்டுமே தங்கியிருப்பதுடன், அந்த நிலைமையிலும் கூட அவர்களின் இருப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

### ஆளுநரின் எண்ணம்

அதனை அடுத்து, வட மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் இந்த அகதிகள் அனைவரையும் பூந்தோட்டம் முகாமில் தங்க வைக்க வேண்டும் என்ற மனப்பிரமையுடன் இருந்து வந்தார். போர் முடிவடைந்த பின்னர் முட்கம்பி வேலிகள் சூழ்ந்த இந்த முகாமில் தான் சரணடைந்த போராளிகள் புனர்வாழ்வு என்ற பெயரில் அடைத்து வைக்கப்பட்டார்கள். ஆளுநரின் நியமன அதிகாரியான ஜனாதிபதி இந்த அகதிகளை வேறு நாடுகள் எடுத்துக்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டிருப்பதனை அடுத்து, ஆளுநர் பின்பற்றும் இந்தக் கொள்கை அவருடைய தொழில் நலன் சார்ந்த ஒரு கொள்கையாக இருந்து வருவது போல் தெரிகின்றது.

### அங்லிக்கன் தேவாலயம்

கிறிஸ்தவ மக்களைப் பொறுத்தவரையில், அகதிகளின் இந்த துயர நிலையை - குறிப்பாக பிள்ளைகளின் துயர நிலையை - வெறுமனே தட்டிக் கழித்து விட முடியாது. எமது நாட்டில் தங்கியிருக்கும் விதவைகள், பிள்ளைகள், வழிப்போக்கர்கள் ஆகியோரைப் பராமரிக்க வேண்டிய விடயத்தை வேதாகமம் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. ஒவ்வொரு குடும்பமும் குறைந்தது ஒரு அஹமதியா குடும்பத்தையாவது தமது வீட்டில் தனிப்பட்ட முறையில் தங்க வைக்க வேண்டும் என யாழ்ப்பாண அதிமேற்றிராணியார் மக்களிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். நானும் எனது மனைவியும் இதற்கு உடன்பட்டோம். ஆனால், ஆச்சரியமூட்டும் விதத்தில் சிவசேனை இயக்கத்தைச் சேர்ந்த மறவன் புலவு சச்சிதானந்தம் இந்த அகதிகளுக்கு அனுதாபம் தெரிவிக்கும் விதத்தில் கருத்துக்களை தெரிவித்திருந்தார். கிறிஸ்தவர்களுக்கு வாக்களிக்க வேண்டாமெனக் கேட்டு சிவசேனை இயக்கம் முன்னர் யாழ்ப்பாணத்தில் சுவரொட்டிகளை ஒட்டியிருந்தது என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். ஆனால், இந்துத்துவ பத்திரிக்கை ஒன்றின் ஆசிரியர், வட பிரதேசத்திற்கு அகதிகள் அழைத்து வரப்பட்டு, அவர்களுக்கு ஏதேனும் ஒன்று நடந்தால், அவர்களை அழைத்து வருபவர்கள் அதற்குப் பொறுப்புக்கூற வேண்டியிருக்கும் என ஓர் ஆசிரியர் தலையங்கம் எழுதியிருந்தார். அகதிகளுக்கு தீங்கிழைக்கப்பட முடியும் என்ற ஓர் அச்சுறுத்தலாகவே அது நோக்கப்பட்டது. இந்த அகதிகளை வரவேற்று, ஏற்றுக் கொள்ளும் விடயத்தில் விருந்தோம்பும் குடும்பங்கள் உறுதியாக நின்ற போதிலும், அகதிக் குடும்பங்கள் பின்வாங்கத் தொடங்கின.

### அகதிகளுக்கு நிராகரிப்பு

இறுதியாக 2018 மே 19ஆம் திகதி எனது வீட்டுக்கு ஓர் அஹமதியா முஸ்லிம் பிரிவைச் சேர்ந்த குடும்பம் ஒன்று வந்தது. நாங்கள் அவர்களை உடனடியாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று, அங்கு பதிவு செய்தோம். தலைமை நிலையப் பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெர்ணான்டோ அந்தப் பதிவை ஏற்றுக்கொண்டார். அடுத்த நாள் காலையில் பொலிஸ் நிலையத்துக்கு வர வேண்டுமெனக் கேட்டு இரவு 9 மணிக்குப் பிறகு எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. நான் நிரப்பிக் கொடுத்திருந்த ஆவணங்களை பெர்ணான்டோ திருப்பியனுப்பியிருந்தார். தீவிரவாத இந்துக்கள் அகதிகள் மீது தாக்குதல் தொடுக்க முடியும் எனப் புலனாய்வுப் பிரிவு அறிக்கைகள் எடுத்துக் காட்டுவதாக அவர் குறிப்பிட்டார். எமது சந்திப்பு முடிவடைந்தது என்பதைக் காட்டும் விதத்தில் அவர் எழுந்து நின்றார். அஹமதியா அகதிகள் பூந்தோட்ட முகாமுக்குச் செல்ல வேண்டும் என்ற விடயத்தை ராகவன் வலியுறுத்தி வருவதாக யாழ்ப்பாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் சுட்டிக்காட்டினார். இந்த நிராகரிப்பை எழுத்து மூலம் தர வேண்டுமென நாங்கள் வேண்டுகோள் விடுத்த போதிலும், அந்த வேண்டுகோள் நிறைவேற்றப்படவில்லை.

அன்று மாலை எம்மைத் தனது அலுவலகத்துக்கு அழைத்த ராகவன் அங்கு மிகவும் அநாகரிகமான முறையில் நடந்து கொண்டார். அந்தச் சந்திப்பு அநேகமாக ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டும் இயல்பிலான ஒரு சந்திப்பாகவே நிகழ்ந்தது.

அஹமதியா அகதிகள் தம்வசம் ஆவணங்களை வைத்திருந்த போதிலும், இந்தியா ஊடாக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்தியாவில் தஞ்சம் கோருவதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்கத் தவறியதன் மூலம் அவர்கள் சட்டத்தை மீறியிருந்தார்கள் என ராகவன் வலியுறுத்திக் கூறினார். அது உண்மையாக இருந்திருந்தால், இலங்கை அரசாங்கம் அவர்களை கைது செய்து நாடு கடத்தியிருக்க வேண்டும் என்ற விடயத்தை இங்கு பொய் பேசி மழுப்பும் ஆளுநரும் அறிவார்.

அஹமதியா அகதிகள் பூந்தோட்ட முகாமுக்குச் செல்ல வேண்டும் என்ற விடயத்தை ராகவன் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். இது தொடர்பாக சட்டத்தரணிகளுடன் கலந்தாலோசிக்க வேண்டும் என நான் கூறியதனையடுத்து, அவர் எனக்கு வெள்ளிக்கிழமை வரையில் கால அவகாசம் வழங்கினார். இந்த கருணைக் காலப் பிரிவு முடிவடையும் வரையில் எந்தவொரு பொலிஸ் உத்தியோகத்தரோ அல்லது இராணுவத்தினரோ எனது வீட்டிற்கு வரமாட்டார்கள் என்பது குறித்த உத்தரவாதத்தை தர வேண்டுமென நான் அவரிடம் கேட்டேன். ஐந்து சாட்சிகளுக்கு மத்தியில் அவர் எனக்கு இந்த உத்தரவாதத்தை வழங்கினார்.

### நாஜி பாணியில் அச்சுறுத்தல்

தம்மீது தாக்குதல் தொடுப்பதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன என்ற விடயத்தை தெரிந்து கொண்ட அஹமதியாக்கள் ஏற்கனவே கலவரமடைந்திருந்தார்கள். இரவு சுமார் 8மணியளவில் ஒரு பொலிஸ் ஜீப் வந்து எனது வீட்டுக்கு அருகில் நின்றது. ஜீப் வந்திருப்பதை அறிந்து, நான் வீதியோரத்துக்குச் சென்று பார்த்த பொழுது அது அந்த இடத்திலிருந்து கிளம்பிச் சென்றது. அப்பொழுது அஹமதியாக்கள் பெருமளவுக்கு பீதியடைந்திருந்தனர். நிச்சயமாக தாக்குதல்கள் இடம்பெற முடியும் என்பது குறித்த பெர்ணான்டோ மற்றும் ராகவன் ஆகியோரின் பேச்சுக்களை எவரும் நம்பவில்லை. எம்மைப் பயமுறுத்துவதற்கும், வெளியேறிச் செல்வதற்கு அஹமதியாக்களை தூண்டும் நோக்குடனும் அவர்கள் இவ்விதம் கதை கட்டியிருந்தார்கள் என நாங்கள் கூறினோம். எப்படியிருந்தாலும், இந்த அச்சுறுத்தல்கள் உண்மையாக இருந்தால் என்ன நடந்திருக்கும்? இரவு 9.00 மணியளவில் வெளியேறிச் செல்வதற்கு அஹமதியாக்கள் தீர்மானித்தார்கள். அவர்கள் அவ்விதம் வெளியேறிச் சென்ற போது இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் அங்கு வந்து அவர்கள் அந்த இடத்திலிருந்து வெளியேறிச் செல்லும் வரையில் 9.20 வரையில் தரித்து நின்றார்கள்.

(17 ஆம் பக்கம் பார்க்க)

எதிரொலி
Ethiroli



# ‘காக்கா கொத்திய காயம்’: மெல்லத் திறந்த டயரி

அனோஜன் பாலகிருஷ்ணன்

**(உமாஜி எழுதிய ‘காக்கா கொத்திய காயம்’ நூல், கனடாவின் ‘இயல்’ விருதை வென்றுள்ளது. அத்தருணத்தில் நூல் குறித்த , வாசிப்பனுவக் குறிப்பு பொருத்தம் கருதித் தரப்படுகின்றது)**

அ. முத்துலிங்கத்தின் “உண்மை கலந்த நாட்குறிப்புகள்” புத்தகத்தை வாசிக்கும் போது அது நாவல் என்று கூறப்பட்டு இருந்தாலும் சுயபுனைவு என்றே புரிந்து கொள்ள முடிகிறது. தடுக்கிச் சரியும் ஒவ்வொரு அத்தியாயமும் அவரது பால்யத்தை எள்ளலுடன் புன்னைக்கும் வகையில் சொல்லிச் சென்றிருக்கும். இந்தப் புன்னகைக்க வைக்கும் தன்மைதான் அப்புத்தகத்தின் வெற்றியோ என்று கூட தோன்ற வைக்கும். பால்யத்தை மீட்டிப் பார்க்கும் போது இனிமையான சம்பவங்கள் சட்டென்று முதலில் நினைவுக்கு வரும் பின்னர் மெல்ல மெல்ல அந்த நினைவுகளைக் கடந்து கசப்பான நினைவுகள் சுற்றிப்பிடித்து விழுங்க ஆரம்பிக்கும். இதனைச் சமநிலை குலையாமல் எழுதும் போதே சுயபுனைவுக்கான வடிவம் கூடிவருகிறது. இவற்றை சுயசரிதையாக வெறுமே கருத முடிவதில்லை. ஊகங்களாகக் கடந்து செல்ல வேண்டியவற்றைக் கூட சம்பவங்களாக எழுதி ஆசிரியரால் இட்டு நிரப்பப்படுகிறது. புனைவுக்கான முடிச்சுகளுடன் கச்சிதமாக முடிக்கப்படுகின்றன.

இதே போல் ‘காலம்’ செல்வம் அவர்கள் எழுதிய “எழுதித் தீராப் பக்கங்கள்” புத்தகமும் சுய எள்ளல் கலந்த நகைச்சுவை நடையுடன் அகதி வாழ்க்கையின் கசப்பான பக்கங்களை எழுதிச் சென்றிருக்கும். கடந்து வந்த துயரை தள்ளி நின்று பார்க்கும் போது ஒருவித கிண்டல் கூடவே கைவந்து விடுகிறது. கசப்பின் மேல் பூசப்பட்ட தேன்சாற்றை விலக்கிவிட்டு சுவைக்க நுனி நாக்கு கசப்பது போல் அவற்றுக்குள் மடிந்திருக்கும் துயர் உயிர் வாழ்தலின் அவலத்தை சொல்வதை புரிந்து கொள்ள இயலுகிறது.

ஈழத் தமிழர்களின் வாழ்க்கை, ஆர்மினியர்களின் வாழ்க்கை போல் இனப்படுகொலையாலும், அகதி வாழ்க்கையாலும் நிறைந்த துயரால் நுரையாகத் ததும்புவது. இந்த நுரையை விலக்கி விட்டுப் பார்க்க அந்தந்த காலப்பகுதியில் வாழ்ந்த எழுத்தாளர்களின் சுய புனைவுப் புத்தகங்களே உதவக்கூடியன. அங்கிருக்கும் ஆசிரியனின் கோணம் கருத்தியல் நிலைபாடுகளைத் தாண்டி, தன் வாழ்க்கைக்குள் நுழைந்து தன் அலைக்கழிப்பை அந்த மண்ணுக்குள் தேடும். இதனாலே உணர்வுக்கு நெருக்கமாக அவை சென்று விடுகின்றன.

ஜே.கே எழுதிய “கொல்லைப்புறத்துக் காதலிகள்” புத்தகமும் யாழ்ப்பாணத் தமிழர்களின் 95ம் ஆண்டு இடப்பெயர்வுக்கு முன்னரும் பின்னரும் உள்ள பதின் பருவத்திலுள்ள இளைஞர்களின் உள்ளத்தை பாசாங்கில்லாமல் பேசுவது. மின்வெட்டு, ஊரடங்கு, எறிகணை வீச்சு என்று புறவய உலகம் இருக்கும் போது, சைக்கிள் மிதித்து டைனமோவில் இளையராஜா பாடல் கேட்டு ரசிக்கும் இளைஞர்களின் இன்னுமோர் பக்கத்தை அசலாக பதிவு செய்திருக்கும் புத்தகம் அது.

காலவரிசையில் உண்மை கலந்த நாட்குறிப்புகள், எழுதித் தீராப் பக்கங்கள், கொல்லைப்புறத்துக் காதலிகள் என்று பார்க்கும் போது யுத்தம் அற்ற சூழல், யுத்தம் பிளக்க அகதிச் சூழல், புலிகள் வெளியேற்ற இராணுவத்திடம் சிக்காமல் யாழ்ப்பாணத்தை விட்டு அகலும் மக்களின் சூழல் என்று மாறும் ஓர் உலகத்தின் நுட்பமான மாறுதலை நோக்கலாம். அடிப்படையாக உயிர் வாழ்தலின் தேவையும் அதன் ஆதாரன விருப்பங்களும் இந்த அலைக்கழிப்பிலும் ஈழத் தமிழர்களிடம் எவ்வாறு இருந்தன என்பதை அடிநாதமாக ஒலிக்கக் கூடியவை.

உமாஜி எழுதிய ‘காக்கா கொத்திய காயம்’ ஓர் வாலிபனின் நிலம் மீதான நினைவுகளின் தொடர்ச்சி என்று கொள்ளலாம். ஈழப் போரின் இறுதிப் போர் ஆரம்பித்த பின்னர் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் நிகழ்ந்த மக்களின் வாழ்வியலைப் பேசுகிறது. உமாஜி என்ற இளைஞனின் கண்ணோட்டத்தில் சம்பவங்களாக விரிபவை. ஒரு வகையில் ஆசிரியர் தன் வாழ்க்கையை வேடிக்கையாகப் பார்ப்பது போலத் தோன்றினாலும் ஒவ்வொரு அத்தியாயத்திலும் ஆழமாகக் கீறப்பட்டிருக்கும் மனக் காயங்கள்தான் அவ்வாறு எழுத வைக்கின்றன என்பதை ஊகித்துக் கொள்ள இயலுகிறது.

பால்யத்தை நினைத்தவுடன் பிறந்து வளர்ந்த மண்ணும் அச்சூழலும் அயலில் வசித்தவர்களும் தான் நினைவுக்கு வருவார்கள். அந்த மண்ணுடனே மனதின் ஆழத்துள்ளே தொன்மங்களும் படிமங்களும் சென்று சேர்கின்றன. தனக்கும் அயலிலுள்ளவர்களுக்கும் இடையிலான பரஸ்பர சம்பவங்களே முதலில் கதைகளாக விரிகின்றன. சிறுவயதில் சந்தித்த மனிதர்கள், சந்தியில் ஒன்றாக நின்ற நண்பர்கள் என்று ஒவ்வொரு வயதிலும் நண்பர்கள் மாறிக் கொண்டே இருக்கிறார்கள். நிலையாக எவரும் இல்லை. இடப்பெயர்வுகள் முளைக்க முளைக்க வெவ்வேறு பிரதேசங்களுக்கு மாறிக்கொண்டே இருக்க நேர்கிறது. சுற்றி வாழும் மக்களும் மாறுகிறார்கள். ஒரு பதினைந்து வருடம் . கடந்து இவர்களை பார்க்கும் போது பலர் இல்லை, பலர் அடையாளம் தெரியாமல் மாறியிருக்கிறார்கள்.




ஆனால் கண்டவுடன் உள்ளார்ந்து அடையாளம் கண்டு கொள்கிறார்கள். சிநேகமாக புன்னகைத்துக் கொள்கிறார்கள் உடனே விட்ட இடத்திலிருந்து பேச ஆரம்பிக்கிறார்கள். இடையில் காணாமல் போன பல வருடங்களை வெறுமே இரண்டு வரியில் பேசிக் கடந்து செல்கிறார்கள். யானை விழுங்கிய வாழைப்பழம் போல் சட்டென்று ஒரு பத்து வருடத்தை தாண்டிச் செல்கிறார்கள். இரண்டு தலைமுறையின் வாழ்க்கை இப்படித்தான் இருந்தது. எண்ணற்ற பள்ளிக்கூடங்களில் மாறி மாறிப் படித்து நினைவுச் சுழற்சிகளும் பால்யத்தின் ஈர வாசமும் மாறியவாறே இருந்தன. உங்கள் பால்யகால சிநேகிதர்கள் யார் என்று கேட்டால், யார் என்று உடனே சொல்ல முடிவதில்லை. சில சமயம் யாருமே இல்லை போல என்று கூட தோன்றக்கூடியது. ஆனால் , இருந்தார்கள், இருந்து அடையாளம் அற்றுப் போனவர்கள்.

ஓர் ஐந்து வருடங்களுக்கு முன்னர் ரயில் என்றாலே வடபகுதி மக்களுக்கு கனவுதான், அதுவும் சிறார்களுக்கு. ஏறக்குறைய இரண்டு தலைமுறை ரயில் என்றாலேஎன்னவென்று தெரியாமலேவளர்ந்திருக்கின்றது. வெறுமே சினிமாவில் மட்டுமே அந்தப் பாரிய வாகனத்தை பார்த்திருப்பார்கள். அநேகமாக தொண்ணூறுகளில் பிறந்த பலருக்கு ரயில் பயணம் என்பதே ஓர் ரகசியக் கனவாக இருந்தது என்பது உண்மைதான். பல நண்பர்களுக்கு அதெப்படி இத்தனை பெரியதாக ஓர் வானகம் இருக்கும் என்ற வியப்பு இறுதிவரை இருந்தது. எண்பதுகளின் பின்னர் புலிகளால் தண்டவாளங்கள் வடபகுதியில் அகற்றப்பட்ட பின்னர் வவுனியாவுடன் புகையிரத சேவை மட்டுப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் வந்த தலைமுறைக்கு ரயில் என்பதே கனவுதான்.

உமாஜிக்கும் இந்த ரகசிய ஆசை இருக்கத்தான் செய்கிறது. ஆனால், எண்பதுகளில் பிறந்தவர்களின் நினைவுகள் ஊடாக அதனை நினைவு கொள்கிறார். முதன் முதலில் காங்கேசன் துறை வரை தண்டவாளங்கள் இடப்பட்டு ரயில் ஓடத் தொடங்கியபோது ரயில் எப்படி இருக்கும் என்ற விம்பம் அவர்களை ஆட்டுவிக்கிறது. மெல்ல மெல்ல அதன் மீதான ஆச்சர்யம் கரைகிறது. ஆனால், பயணம் செய்த அனுபவம் மட்டும் களையவில்லை. காரணம் பயணத்தில் சந்திக்கும் பயணிகள் மட்டுமல்ல, ஒவ்வொரு பிரதேசமும் மாறும் போது ரயிலில் விற்கப்படும் உணவுகள் தான். அதன் ருசியும் நினைவுகளும் இப்போதும் கிளர்ந்து வருகிறது. சிறாராக இருக்கும் போது அப்பாவிடம் அடம்பிடித்து வாங்கிதரச் சொல்லிக் கேட்பவற்றை இப்போது நிதானமாக இரைமீட்க முடிகிறது.

தமிழர்களின் கிராமங்கள் முடிவடைந்து சிங்கள மக்களின் கிராமங்கள் ஆரம்பிக்கும் வவுனியாவின் எல்லைப்புறத்திலிருந்து உணவின் தன்மைகள் மாற ஆரம்பிக்கும். மாலுபாணும் மதவாச்சி இறால்வடையும் இன்று அப்பிரயாணங்களில் பிரபல்யமானது. சீவிய அன்னாசிப் பழங்களும் பெரிய ஆனைக் கொய்யா பழங்களும் உப்புத் தூள் தடவிக் கிடைக்கும். சிலசமயம் ரம்புட்டான் பழங்களும் கிடைக்கும். அதோடு கட்ட சம்பல் எனப்படும் உறைப்பான சம்பலுடன் ரொட்டியைத் தின்ன மிக ருசியாக இருக்கும். இதோடு தடினமான பால் கலக்கப்பட்ட கிரிக் கோப்பியும் குடித்தால் அந்தப் பயணம் பூரணம் அடைந்துவிடும்.

இரண்டாயிரத்தியாறில் இறுதியுத்தம் ஆரம்பித்த பின்னர் யாழ்ப்பாணமும் தெற்கும் மறுபடியும் துண்டிக்கப்பட்டன. இதில் கவனிக்க வேண்டியது, இரண்டாயிரத்தி இரண்டில் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட் பின்னர் ஏற்படுத்தப்பட்ட பேருந்து போக்குவரத்தைத் தான். பேருந்துப் பயணம் ஆரம்பிக்க சிறிய பயணச் செலவில் யாழிலிருந்து கொழும்புக்குச் செல்ல முடிந்தது. அங்கு வேலை பார்த்தவர்கள் சனி ஞாயிறுகளில் யாழிலுள்ள வீடுகளுக்கு வருகிறார்கள். ஏறக்குறைய, எஸ்.பொ சடங்கில் காட்டிய யாழ்ப்பாண வாழ்கை. பிறகு மீண்டும் திடீரென்று தெற்கிலிருந்து யாழ்ப்பாணம் துண்டிக்கப்பட்ட பின்னர் இவ்வாறு யாழ்ப்பாணம் வந்து மீள கொழும்பு செல்ல முடியாதவர்கள் எக்கச்சக்கமானவர்கள். அவர்களில் ஒருவராக உமாஜியும் இருக்கிறார். கொழும்பிலுள்ள அலுவலகத்துக்குச் செல்ல இயலாத நிலை. வழமை போல வீட்டிலே யாழில் முடங்க நேர்கிறது.

இதில் இன்னும் சுவாரஸ்யமானது பாதை மூடிய சமயம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பேருந்து ஒன்றில் உமாஜியும் பயணித்து இருக்கிறார். அந்த நேரத்தில் எல்லைகளுக்கு இடையிலான பதற்றம் எப்படி இருந்தது என்பதை சாமானியனின் பார்வையில் கடந்து செல்கிறார். முகமாலைக்கு அருகே சூனியப் பிரதேசம் புலிகளும் சரி, இராணுவமும் சரி அங்கே நிலைகொள்ள முடியாது் சர்வதேச செஞ்சிலுவை சங்கம்தான் அதற்குப் பொறுப்பாக இருந்தது. அந்தப் பிரதேசத்தில் பல மணிநேரம் காத்து நிற்க நேர்கிறது. ஏதோ சிக்கல் என்று புரிய ஆரம்பிகிறது. கேற்றைத் திறந்துவிடும் புலி உறுப்பினர் கேற்றைத் திறக்க மறுக்கிறார். அதைக் கடந்து சென்றால் இராணுவத்தின் கட்டுப்பாடு பிரதேசத்துக்குச் சென்றுவிடலாம். பின்னர் போக்குவரத்துக்கு கிடைக்கும். எப்படி அதற்குள் செல்வது என்று பொறுமையை இழக்கிறார்கள். வந்திருந்த பயணிகள் கூட்டு மனநிலையில் கொஞ்சம் இளகி தங்களுக்குள் அரசியல் நாட்டு நடப்புகளை பேசிக்கொள்கிறார்கள்.

‘இப்ப ஷெல் அடிச்சால் இங்கதான் விழும்’ - யாரோ ஒருவர் பயத்தை சூழ்நிலைக்கு ஏற்ப கச்சிதமாகக் கிளப்புகிறார். இன்னுமொரு பெண்மணி இனிமேல் சண்டை வந்தால் கொழும்பில் தான் அடிவிழும் என்கிறார். உண்மையில் கொழும்பிலுள்ளவர்கள் அடிவாங்க வேண்டும் என்பது ரகசிய ஆசையாக வடக்குப் பகுதியில் வசிப்பவர்களுக்கு இருக்கிறது. எவ்வளவு நாட்கள்தான் நாம் மட்டும் இடப்பெயர்வுக்குள் அல்லல்படுவது் அவர்களும் வாங்கிப் பார்க்கட்டுமே என்ற ஆசைதான் அது. யாழ்ப்பாண சனத்துக்கு அடிச்சால் தான் அவர்களுக்கு புத்தி வரும் என்று கொழும்புத் தமிழர்கள் பேசுவதையும், கொழும்பு சனத்துக்கு அடி விழுந்தால்தான் அவர்களுக்கு தெரியும் என்று யாழ்ப்பாணத் தமிழர்கள் பேசுவதின் பின்னே இருக்கும் ஓர் அந்தரங்க மனக் கிளர்ச்சியை உமாஜி தொட்டு எடுத்து வேடிக்கையாகச் சம்பவங்கள் ஊடக சித்தரிக்கிறார்.

இறுதியில் புலி உறுப்பினர் கேற்றைத் திறந்துவிட, சூனியப்பிரதேசத்தை நடந்தே கடந்து செல்கிறார்கள். இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் வேகமாக செக்கிங் நடக்கும். இன்று இன்னும் விரைவாக நடக்கிறது. மறுபடியும் வேறொரு பேருந்தில் தொத்திக் கிளம்ப, அன்று மாலையே ஒரு பெரும் போர் வெடிக்கப் போகிறது என்பது தெரியாமல்ஏன் இத்தனை இராணுவம் வீதியின் இருபுறமும் குமிகிறது ஏதும் பயிற்சியோ என தனக்குள் எண்ணியபடி கடந்து செல்கிறார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)



## சுட்டிகளுக்கு குட்டிக்கதை

# கதை கதையாம் காரணமாம்.

ஒரு பூந்தோட்டத்தில் ஏராளமான வண்ணங்களில் பூக்கள் பூத்துக் குலுங்கின. அவற்றில், குட்டி மஞ்சள் வண்ணப் பூ மட்டும் அழுதபடியே இருந்தது. அதைச் சிரிக்க வைக்க தாய் மஞ்சள்செடி எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. அப்போது அந்தப் பூந்தோட்டத்துக்கு அருகில் வசித்து வந்த எலி, மஞ்சள் பூவின் அழுகையால் உறக்கம் கலைந்து வெளியே வந்து, "என்ன உன் பிள்ளை இப்படி அழுது கொண்டிருக்கிறது" என்று கேட்டது.

"என்ன காரணமோ தெரியவில்லை. நானும் எவ்வளவோ முயன்று பார்த்து விட்டேன். அழுகை, நிற்கவேயில்லை." என்றது, மஞ்சள் செடி.

"கவலைப்படாதே. உன் பிள்ளையின் அழுகையை நான் நிறுத்துகின்றேன்" என்று சொன்ன எலி, அங்கும் இங்கும் துள்ளிக் குதித்து வேடிக்கை காட்டியது. எலியின் சேட்டைகளால் குட்டி மஞ்சள் செடியின் அழுகை அதிகரித்ததே தவிர, நிற்கவில்லை. அப்போது சோளக்கதிர்களின் மத்தியில் குடியிருந்த குருவி, குட்டி மஞ்சள் செடியின் அழுகை கேட்டு ஓடி வந்தது. "என்ன நடந்தது? ஏன் உன் பிள்ளை இப்படி அழுகிறது..." என்று கேட்டது. "நானும் எவ்வளவோ சமாதானம் செய்து பார்த்து விட்டேன். அழுகை நின்றபாடில்லை" என சோகத்துடன் கூறியது தாய் மஞ்சள் செடி. "கவலைப்படாதே. பாட்டு ஒன்று பாடுகின்றேன் " என்றவாறே குட்டி மஞ்சள் செடியின் முன்னே அங்குமிங்கும் பறந்தபடி பாடியது குருவி. ஆனால், குருவியின் பாட்டு எந்தப் பலனையும் கொடுக்கவில்லை. குட்டி மஞ்சள் செடி முன்பை விட அதிகமாகவே அழுதது.

அழுகைச் சத்தம் கேட்டுச் சற்றுத் தூரத்திலிருந்த பச்சோந்தி ஓடி வந்தது." உன்பிள்ளைக்கு என்னவாகிற்று." என்று அக்கறையோடு, கேட்டது. "தெரியவில்லை பச்சோந்தி. எலி, குருவி எல்லோரும் முயற்சி செய்துவிட்டார்கள் அழுகை நின்றபாடில்லை. நீயாவது குட்டி மஞ்சள் செடியின் அழுகையை நிறுத்த முயன்று பார்." என்றது தாய் மஞ்சள் செடி. "இதோ ஒரு நொடியில் உன் பிள்ளையின் அழுகையை நிறுத்தி விடுகின்றேன்" என்று சொன்ன பச்சோந்தி, குட்டி மஞ்சள் செடியின் முன்னே வந்து நின்றது. தன் பச்சை நிறத்தைப் பழுப்பு நிறமாக மாற்றியது. அடுத்த நொடியே செம்மஞ்சள் நிறத்துக்கு மாறியது. பின், அடுத்த நொடியே சிவப்பு நிறமாக மாற்றிக் காட்டியது. ஆனால், என்ன பயன்? பச்சோந்தி நிறத்தை மாற்றிக் கொண்டே இருந்தது தான் மிச்சம். குட்டி மஞ்சள் செடியின் அழுகை நின்றால் தானே. அதன் அழுகை தீவிரமாகியது.

அப்போது அருகிலுள்ள தோட்டத்தில், வெள்ளரிக்காய் பறித்துச் சாப்பிட வந்த நரி, அழுகை கேட்டு ஓடி வந்தது. "நான் இந்தக் காட்டையே சுற்றி வருபவன். என்னால், உன் குழந்தையின் அழுகையை நிறுத்த முடியும் என்று தோன்றவில்லை. அதோ, கிழக்கு வானில் சூரியன் உதிக்கிறான். அவனிடம் கேட்டுப்பார். சூரியனால் நிச்சயம் குட்டி மஞ்சள் செடியின் அழுகையை நிறுத்த முடியும்." என யோசனை சொன்னது நரி. மஞ்சள் செடிக்கும், நரியின் யோசனை சரியென்றே தோன்றியது. எலியும், குருவியும், ஆமோதித்தன.

"சூரியனே வெகுநேரமாக, என் குழந்தை அழுகிறது நீ ஏதேனும் கதை சொல்லி அழுகையை நிறுத்துவாயா?" என்று கேட்டது மஞ்சள் செடி. குட்டி மஞ்சள் செடியை அழைத்து கதை சொல்லத் தொடங்கியது சூரியன். என்ன ஆச்சரியம். குட்டி மஞ்சள் செடி அழுகையை நிறுத்தி, சூரியனைத் திரும்பிப் பார்த்துக் கவனிக்கத் தொடங்கியது. சூரியனும், நகைச்சுவையோடு கதையைத் தொடர்ந்தது. குட்டி மஞ்சள் செடி ஆர்வத்துடன் கேட்டது. கதை நீண்டு கொண்டே போனது. சூரியன் வானத்தில் நகர்ந்தபடியே கதை சொல்ல, குட்டி மஞ்சள் செடி முகத்தைத் திருப்பி சூரியனைப் பார்த்தபடியே கதை கேட்டது. கதை கேட்கும் சுவாரஸ்யத்தில் குட்டி மஞ்சள் செடி அழுகையை மறந்தது. காலையில் தொடங்கிய கதை மாலை வரை நீண்டது. மாலையில் சூரியன் மறையும் வேளை வந்தது. ஒருவழியாகக் கதையை முடித்தது சூரியன். மீதிக் கதையை மறுநாள் காலை சொல்வதாகவும், அதுவரை அழக்கூடாது என்று கேட்டுக் கொண்டது சூரியன். "நீ நாளை வரும்வரை நிச்சயம் அழ மாட்டேன்." என்றது குட்டி மஞ்சள் செடி. சூரியன் மறைந்த பின் குட்டி மஞ்சள் செடி அழவில்லை. மறுநாளிலிருந்து குட்டி மஞ்சள் செடிக்குத் தினமும் கதை சொன்னது சூரியன். முகத்தைத் திருப்பிக் கதை கேட்டது குட்டி மஞ்சள் செடி. சூரியனுக்கு நன்றி செலுத்தும் வகையில் மஞ்சள் செடி, தன் குழந்தைக்கு 'சூரிய காந்தி' என்று பெயர் சூட்டியது. குட்டி மஞ்சள் செடிக்குப் பல தங்கைகள் பிறந்தனர். அவர்களும், சகோதரியைப் போல, மலர்ந்த முகங்களைத் திருப்பி, சூரியன் கூறும் கதைகளைக் கேட்பர். சூரியன் மறைந்ததும் உறங்கி விடுவர்.

## ஓடி விளையாடு

## கிளித்தட்டு



கிளித்தட்டு தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்று. சிறுவர் தொடக்கம் பலரும் இதை விளையாடுவார்கள். இடத்துக்கிடம் இதன் பெயர், விளையாட்டு முறை என்பன வேறுபட்டுள்ளன. "யாட்", "தாச்சி" என்றும் இவ்விளையாட்டைச் சில கிராமங்களில் அழைப்பார்கள்.

மைதானம் பற்றிய அளவுகள், மைதான நிலையங்களின் பெயர்கள் "கோடு ஏறல்", "பழம் எடுத்தல்","கிளி பாய்தல்", "காத்தல்", "புகுதல்" முதலிய சொற்களின் விளக்கமும் பயன்பாடும் இடத்துக்கிடம் வித்தியாசமாக உள்ளன. விவசாயிகளின் கலாசாரத்தை கிளித்தட்டு பிரதிபலிகின்றது. நெல் விதைத்த காலங்களில் வயல் நிலத்தில் நெல் விதையைப் பொறுக்க வரும் கிளிகளைக் கமக்காரன் வரம்புகளில் ஓடிக் கலைத்து வயலைக் காக்கும் செயற்பாட்டை கிளித்தட்டு காட்சிப்படுத்துகின்றது. இவ்விளையாட்டில் காப்போர் கமக்காரர்களாகவும், புகுவோர் கிளிகளாகவும், தட்டுக்கள் வயல்களாகவும், சுவடுகள் வரம்புகளாகவும் பாவனை செய்யப்படுகிறது.

இவ்விளையாட்டில் "புகுதல்", "காத்தல்" என இரண்டு முக்கிய திறன்கள் உண்டு. சில அணியினர் "புகுதலை", "காத்தலிலும்" திறமையாகச் செய்வர். இவர்கள் "புக" ஆரம்பித்தால் தொடர்ந்து புகுந்து கொண்டே இருப்பர். காக்கும் அணியினர் கூடுதலான நேரம் காக்க வேண்டி நேரிடும். இதனைத் தவிர்த்து ஒவ்வொரு அணியினருக்கும் "புகவும்". "காக்கவும்" சமநேரத்தைக் கொடுப்பதற்காக "ஆட்டம்" (innings) முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த விளையாட்டால் உடலுக்கு மட்டுமல்லாமல் மூளைக்கும் பயிற்சி கிடைக்கின்றது. குழு ஒத்துழைப்பு, முடிவெடுத்தல், ஒருங்கமைப்பு, தலைமைப்பண்பு போன்ற நற்பண்புகள் உங்களுக்குள் மலரும்.

**(இன்னும் விளையாடுவோம்)**

## அறியலாம் வாங்கோ

## இலங்கை



**நாணயம் :**
இலங்கை ரூபா

**அரசாங்கம் :**
சட்டவாக்க அதிகாரம் நாடாளுமன்றத்துக்குரியது. விகிதாசார தேர்தல் முறையிலான மக்கள் வாக்களிப்பின் மூலம் நாடாளுமன்றம் தெரிவு செய்யப்படுகின்றது. நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும் மக்கள் வாக்கெடுப்பின் மூலமே தெரிவு செய்யப்படுகின்றார். பாதுகாப்புத்துறை உட்பட்ட நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதியிடம் உள்ளது. பல கட்சிமுறையைக் கொண்ட இலங்கையில் அரசாங்கம் ஆறு வருடங்களுக்கு ஒரு தடவை தெரிவு செய்யப்படுகின்றது.

**தேசியக் கொடி:**
இலங்கையின் தேசியக் கொடி வலது பாதத்தில் வாளுடன் கூடிய பொன் நிறத்தினாலான சிங்கத்தின் உருவத்துடன் சிவப்பு நிற வர்ணப் பின்னணி,மஞ்சள் நிறம் என்பனவற்றைக் கொண்டது. இதன் நான்கு முனைகளிலும் உள்நோக்கிச் சாய்ந்ததாக நான்கு அரச மர இலைகள் உள்ளன. நாட்டின் சிறுபான்மை இனக் குழுக்களைப் பிரதிபலிக்கும் வகையில் பச்சை மற்றும் செம்மஞ்சள் நிறம் காணப்படுகின்றது.

**ஆயுள்**
பெண்கள்- 74, ஆண்கள்- 64

**இன விகிதம்:**
சிங்களவர் - 74%
தமிழர்கள் - 18%
முஸ்லிம்கள் - 07%
பறங்கியர் (டச்சு மற்றும் போர்த்துக்கேயர்களின் வழித்தோன்றல்கள்), ஏனையவர்கள் - 01%

**சமயம்:**
பௌத்தம் , இந்துமதம் ,கிறிஸ்தவம், இஸ்லாம்

**தொழில்**
இறப்பர்,தேயிலை,தென்னை என்பன பிரதான தொழில் துறைகள் அத்தோடு விவசாய உற்பத்திகள், ஆடைத்தொழில், சீமெந்து, பெற்றோலியம் சுத்திகரிப்பு, புகையிலைத் தொழில் துறைகள்.

**விவசாய உற்பத்திகள்:**
அரிசி, கரும்பு, தானியங்கள், பருப்பு வகைகள், எண்ணை விதைகள், கிழங்கு வகைகள், நறுமணத்திரவியங்கள், தேயிலை, இறப்பர், தென்னை, பால், முட்டை, மிருகத்தோல் மற்றும் இறைச்சி வகைகள்.



திராவிடம் என்று வடமொழியில் அழைக்கப்பட்ட தமிழ் மக்களின் அறிவுத் திறமைக்கு, கற்களால் கட்டப்பட்ட திரை. காலம் அழிக்க முடியாத சான்றிதழ். காவிரிக்கரை மனிதர்களின் சூட்சம குணத்தின் வெளிப்பாடு. விதவிதமான கலைகளின், மனித நுட்பத்தின் மனத் திண்மையின் ஒருமித்த சின்னம். முப்பத்தாறு அடி உயர ஒற்றைக்கல், இருவர் கட்டிப்பிடிக்க முடியாத அகலம். இதுபோல பல கற்கள், முன்பக்க கோபுரங்களிலும் தாங்கு பகுதியாக இருக்கிறது.

# தஞ்சைப் பெரிய கோயில்: மலைக்க வைக்கும் உழைப்பு

■ எழுத்துச்சித்தர் பாலகுமாரன்

அந்தக் கோவில் கட்டுமானத்தில் சுடு செங்கல் இல்லை. மரம் இல்லை. சொறிகல் என்ற பூராங்கல் இல்லை. மொத்தமும் கருங்கல். நீலம் ஓடிய, சிவப்பு படர்ந்த கருங்கல். உயர்ந்த கிரானைட். இரண்டு கோபுரங்கள் தாண்டி, விமானம் முழுவதும் கண்களில் ஏந்திய அந்தக் கோவிலின் நீளமும், அகலமும், உயரமும் பார்க்கும்போது, வெறும் வண்டல் மண் நிறைந்த அந்தப் பகுதிக்கு இத்தனை கற்கள் எங்கிருந்து வந்தன, எதில் ஏற்றி, இறக்கினர், எப்படி இழுத்து வந்தனர், எத்தனை பேர், எத்தனை நாள், எவர் திட்டம், என்ன கணக்கு.?

இந்தக் கருங்கற்களை செதுக்க என்ன உளி, என்ன வகை இரும்பு, எது நெம்பி தூக்கியது, கயிறு உண்டா, கப்பிகள் எத்தனை, இரும்பு உண்டெனில், பழுக்கக் காய்ச்சி உரமேற்றும் உத்தி (Heat Treatment) தெரிந்திருக்க வேண்டுமே. இரும்பை சூடாக்கி எதில் முக்கினர். தண்ணீரிலா, எண்ணெயிலா? நெருப்பில் கனிந்த இரும்பை எண்ணெயில் முக்கும் கலை, (oil quenching) ஆயிரம் வருடங்களுக்கு முன்பே உண்டா? எத்தனை பேருக்கு எவ்வளவு சாப்பாடு? அரிசி, காய்கறி எங்கிருந்து? சமையல் பாத்திரம் எத்தனை. படுத்துறங்க எங்கு வசதி? மறைவு வசதிகளுக்கு நீர்த்துறை எது?

மனிதருக்கு உதவியாய், யானைகள், மாடுகள், குதிரைகள், கழுதைகள் உண்டெனில், அதற்கு உணவும், அவற்றைப் பழக்கி உபயோகப்படுத்துவோரும் எத்தனை பேர்? அத்தனை பேரும் ஆண்கள் தானா? கோவில் கட்டுவதில் பெண்களுக்கும் பங்குண்டா? தரை பெருக்கி, மண் சுமந்து, பளு தூக்குவோருக்கு மோர் கொடுத்து விசிறிவிட்டு, இரவு ஆட்டம் ஆடி, நாடகம் போட்டு, பாட்டு பாடி, அவர்களும் தங்கள் பங்கை வழங்கியிருப்பரோ. இத்தனை நடவடிக்கையில், உழைப்பாளிகளுக்கு காயம் படாதிருந்திருக்குமா. ஆமெனில், என்ன வைத்தியம். எத்தனை பேருக்கு எவ்வளவு வைத்தியர். இத்தனை செலவுக்கும், கணக்கு வழக்கென்ன, பணப்பரிமாற்றம் எப்படி. பொன்னா, வெள்ளியா, செப்புக்காசா. ஒரு காசுக்கு எத்தனை வாழைப்பழம். என்னவித பொருளாதாரம். உணவுக்கு எண்ணெய், நெய், பால், பருப்பு, மாமிசம், உப்பு, துணிமணி, வாசனை அணிகலன்கள் இருந்திருக்குமா. பாதுகாப்பு வீரர்கள் உண்டா. வேலை ஆட்களுக்குள் பிரச்சினையெனில், பஞ்சாயத்து உண்டா. என்ன வகை சட்டம். எவர் நீதிபதி. இவை அத்தனையும், ஒரு தனி மனிதன், ஒரு அரசன் நிர்வகித்தானா. அவன் பெயர் தான் அருண்மொழி என்ற ராஜராஜனா?

யோசிக்க யோசிக்க, மனம் மிகப் பெரிதாய் விரிவடைகிறது. இது கோவிலா. வழிபாட்டுத் தலமா. வெறும் சைவ சமயத்துக்குண்டான கற்றளியா. இல்லை. இது ஒரு ஆற்றங்கரை நாகரீகத்தின் வரலாற்றுப் பதிவு.

திராவிடம் என்று வடமொழியில் அழைக்கப்பட்ட தமிழ் மக்களின் அறிவுத் திறமைக்கு, கற்களால் கட்டப்பட்ட திரை. காலம் அழிக்க முடியாத சான்றிதழ். காவிரிக்கரை மனிதர்களின் சூட்சம குணத்தின் வெளிப்பாடு. விதவிதமான கலைகளின், மனித நுட்பத்தின் மனத் திண்மையின் ஒருமித்த சின்னம். முப்பத்தாறு அடி உயர ஒற்றைக்கல், இருவர் கட்டிப்பிடிக்க முடியாத அகலம். இதுபோல பல கற்கள், முன்பக்க கோபுரங்களிலும் தாங்கு பகுதியாக இருக்கிறது.

திருச்சிக்கு சற்று தெற்கே உள்ள கீரனூர் தாண்டி இருக்கிற நார்த்தாமலையிலிருந்து வந்திருக்கிறது. கிட்டத்தட்ட அறுபது கிலோ மீற்றர். எப்படி கொண்டு வந்தனர் இவ்வளவு பெரிய கற்பாறைகளை. பல்சகடப் பெரு வண்டிகள். பல சக்கரங்கள் பொருத்தப்பட்ட வண்டிகள், மாடுகள் இழுத்தும், யானைகள் நெட்டித் தள்ளியும் வந்திருக்கின்றன. அந்த வழியில் ஒரு ஆறு கூட இல்லை. மலை தாண்ட வேண்டாம். மணல் பகுதி இல்லை. சரியான, சமமான பாதை. வழியெல்லாம் மரங்கள். அந்த நார்த்தாமலையில், ஆயிரம் வருடத்துக் கோவிலும் இருக்கிறது. வெட்டிய இடத்திலேயே வேண்டிக் கொள்ள கோவில் கட்டியிருக்கின்றனர்.


எப்படி மேலே போயிற்று. இத்தனை உயரம். விமானம் கட்டக்கட்ட, வண்டிப்பாதையை கெட்டியான மண்ணால் அமைத்திருக்கின்றனர். இரண்டு யானைகள் எதிரும், புதிருமாய் போவதற்கான அகலத்தில் கற்பலகைகள், மனிதர்களாலும், மிருகங்களாலும், மேலே அந்த சுழல் பாதையில் அனுப்பப்பட்டன. உச்சிக் கவசம் வரை வண்டிப்பாதை நீண்டது. அதாவது, கலசம் பொருத்தும்போது, விமானம் வெறும் களிமண் குன்றாய் இருந்திருக்கும். பிறகு...? மெல்ல மெல்ல மண் அகற்றப்பட்டிருக்கும். ஆயிரக்கணக்கானவர்கள் தினமும் மண் அகற்றி, தொலைதூரம் போய் குவித்திருக்கின்றனர். குவிக்கப்பட்ட இடம் இப்போதும் இருக்கிறது. "சாரப்பள்ளம் என்ற இடத்திலிருந்து சாரம் அமைத்து' என்று சொல்கின்றனரே... வாய்ப்பே இல்லை. அத்தனை உயரம் சாரம். கற்பாறைகளைத் தாங்கும் கனத்தோடு கட்டப்பட்டிருக்காது. சாத்தியமே கிடையாது. நொறுங்கி விழுந்திருக்கும். அப்படியானால் சாரப்பள்ளம். சாரம் போட, அதாவது மண் பாதை போட மண் தோண்டப்பட்ட இடம் பள்ளமாயிற்று. சாரம் போட தோண்டப்பட்ட போது உண்டான பள்ளம் சாரப்பள்ளம். இத்தனை மனிதர்கள் எப்படி. உழைப்பாளிகள் எங்கிருந்து.

வேறெதற்கு போர்? பாண்டிய தேசம், சேர தேசம், இலங்கை, கீழ சாளுக்கியம், மேல சாளுக்கியம் என்று பரவி, எல்லா இடத்திலிருந்தும், மனிதர்களும், மிருகங்களும், பொன்னும், மணியும், மற்ற உலோகங்களும், அதற்குண்டான கைவினைஞர்களும் இங்கே குவிக்கப்பட்டிருக்கின்றனர். கோவில் கட்ட போரா? போர் செய்து ஜெயித்ததால் கோவிலா? இரண்டும் தான். சோழர்கள் போர் செய்யப் போகவில்லை எனில், பாண்டியர்கள் மேலை சாளுக்கியர்கள் போர் துவக்கி ஜெயித்திருப்பர். (வெகு காலம் கழித்து ஜெயித்தனர்.) எனவே, எதிரியை அடக்கியது போலவும் ஆயிற்று, இறைபணி செய்தது போலவும் ஆயிற்று. இது சோழ தேசத்து அரசியல் சாணக்கியம். கல் செதுக்க விதவிதமான சிற்பிகள். மேல் பகுதி நீக்க சிலர். தூண், வெறும் பலகை, அடுக்குப்பாறை செய்ய சிலர். அளவு பார்த்து அடுக்க சிலர். கருவறைக் கடவுள் சிலைகள் செய்ய சிலர் என்று பலவகையினர் உண்டு. உளிகள், நல்ல எக்கு இரும்பால் ஆனவை. பெரிய கல் தொட்டியில் எண்ணெய் ஊற்றி, பழுக்க காய்ச்சிய உளிகளை சட்டென்று எண்ணெயில் இறக்க, இரும்பு இறுகும். கல் செதுக்கும் கோவிலுக்குள், இப்படிப்பட்ட கல்தொட்டி இன்னும் இருக்கிறது. கயிறு, கம்பிகள் சிறிதளவே பயன்பட்டன. உயரப் பலகைகள் போட மண் உபயோகப்பட்டது.

எல்லா ஊரிலிருந்தும், தஞ்சைக்கு உணவு தானியங்கள் வந்திருக்க வேண்டும். ஆடுகள் அனுப்பப்பட்டிருக்க வேண்டும். ஆடுகள் வளர்ப்பது ஒரு கலையாக, கடமையாக இருந்திருக்கிறது. "சாவா மூவா பேராடுகள்' என்ற வாக்கியம் வழக்கத்தில் இருந்திருக்கிறது. 96 ஆடுகள் இருப்பினும், அந்த ஆட்டுக் கூட்டம் குறையாது. குட்டி போட்டு வளரும். வளர்க்கப்பட வேண்டும். நல்ல மருத்துவமனைகள் கட்டப்பட்டிருக்கின்றன. விதவிதமான மருந்துப் பெயர்கள் பட்டியலிடப்பட்டிருக்கின்றன. அறுவை சிகிச்சை தெரிந்தவர்கள் இருந்திருக்கின்றனர். மருத்துவமனை சார்ந்த தொழிலாளர்கள் உண்டு. மருந்துக் கிடங்கு உண்டு. மூலிகை தேடி சேகரிப்போர் உண்டு. நீர் ஊற்றுபவர் உண்டு. கணக்கு வழக்குகள், ஓலைச் சுவடிகளில் பதிவு பெற்றிருக்கின்றன. துல்லியமான கணக்கு வைக்கப்பட்டிருக்கிறது. தானங்கள் கல்வெட்டாய், குன்றிமணி தங்கம் கூட பிசகாமல் செதுக்கப்பட்டிருக்கின்றன. இதைச் சொல்ல ஒரு ஆள். செதுக்க ஒரு ஆள். நேர் பார்க்க ஒரு ஆள். வீரர்களுக்குள் சண்டை நடந்ததெனில், பஞ்சாயத்து நடந்ததற்கான கல்வெட்டுகள் உண்டு.

மாமன்னர் ராஜராஜன் கண்ட விற்போர் உண்டு. ஒண்டிக்கு ஒண்டி சண்டை செய்ய விட்டிருக்கின்றனர். (Duel). இதில் ஒருவன் தப்பாட்டம் ஆடி இருவருமே இறந்ததால், இருவரின் மனக்கேதமும் தீர்க்க, கோவில் விளக்கெரிக்க வேண்டி, யார் மனஸ்தாபத்திற்குக் காரணமோ, அவர்களுக்கு அபராதம் விதித்திருக்கின்றனர். 96 ஆடுகள் அபராதம். அதாவது, சாவா மூவா பேராடுகள். தஞ்சையிலுள்ள ஒரு கோவிலில் இக்கல்வெட்டு இருக்கிறது. (19 ஆம் பக்கம் பார்க்க)


வேதநாயகம் தபேந்திரன்



# நூறடி உலாவு!

அவருக்கு வயது 86. ஓய்வுபெற்ற உபாத்தியாயர் (ஆசிரியர்). அதிகாலை வேளையில் கையில் மண்வெட்டியுடன்தோட்டத்துக்குப் புறப்பட்டார்.

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் மறித்தனர். இவ்வாறு மறிப்பது அவர்களது நாளாந்தக் கடமை.

"ஐயா, நல்ல வசதியாக இருக்கிறம். ஏன் தோட்டம் செய்து கஸ்ரப்பட வேண்டும். வீட்டில ஓய்வா இருங்கோ "

"இல்லை நான் உடலை வருத்தித் தோட்டம் செய்து உழைத்து தான் உங்களை எல்லாம் வளர்த்து ஆளாக்கினான். இப்ப உடம்பில ஒரு வருத்தமும் இல்லாமல் இருக்கிறன். விரும்பினதைச் சாப்பிடுறன். என்னை என்ர பாட்டுக்கு விடுங்கோ " என்றார்.

இந்தாளை ஒன்றும் செய்ய முடியாது என விட்டு விட்டனர். இப்படியான மனிதர்கள் தான் நடந்து போகச் சக்தி இருக்கும்போதே இறந்து போகின்ற நல்ல சாவைக் காண்கின்றனர்.

நாளாந்தம் தேகம் களைக்க வேலை செய்யும் ஒருவருக்கு வியர்வை,மலம், சலம் ஆகிய கழிவுகள் உடலில் இருந்து ஒழுங்காக வெளியேறும்.

அவ்வாறான மனிதர்களை நோய்கள் அணுகுவது குறைவு. உடல் பயிற்சி தரும் விளையாட்டுக்கள், மண்வெட்டி பிடித்து வேலை செய்தல், கோடரி கொண்டு விறகு கொத்துதல், பிக்கான் கொண்டு கிடங்கு வெட்டுதல் எல்லாம் மிகவும் உடற்பயிற்சியைத் தரும் வேலைகள்.

இவற்றை வாராந்தம் சில மணித்தியாலங்கள் கடைப்பிடித்து வரும் மனிதர்கள் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருப்பார்கள். உத்தியோகமும் பார்த்து தோட்டம், வயல் செய்து வாழும் மனிதர்களின் எண்ணிக்கை சுருங்கி வருகிறது. தோட்ட நிலங்கள் வயல் நிலங்கள் பல மனிதக் குடியிருப்புகளாகவும்,வணிகக்கடைத்தொகுதிகளாகவும் மாறும் நிலை தான் இன்று.

ஒரு காலத்தில் பணக்கார வருத்தங்கள் எனப்பட்ட நீரிழிவு, இரத்த அழுத்தம், மாரடைப்பு எல்லாம் இன்று யாவருக்கும் பொதுவான வருத்தங்கள் எனும் சொல்லக் கூடிய வாழ்க்கைச் சுற்றோட்டத்தினுள் வந்து விட்டோம். தொற்றுநோய்கள் மனித குலத்துக்கு அச்சுறுத்தல் விடுத்த ஒரு காலம் இருந்தது. நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் அவற்றுக்கு விடை கொடுத்தன.

நவீன கண்டுபிடிப்புகளால் மனிதன் சொகுசாக வாழும் நிலை வந்தது.

இப்போது தொற்றா நோய்களின் வசப்பட்டு நோயாளியாகிய மனிதர்களின் எண்ணிக்கை தான் அதிகம்.

சீனி போட்டுத் தேநீர் குடிக்க வழியில்லாமல் இருந்த காலத்தில் உள்ளங்கையில் சிறிதளவு சீனியை வைத்திருந்து அதை நக்கிக் குடித்த போது உடல் ஆரோக்கியம் இருந்தது.

அரைவயிறு உணவு, கால்வயிறு தண்ணீர், கால்வயிறு வெறும் வயிறு என்று கடைப்பிடித்த முன்னோர்களிடம் ஆரோக்கியம் நிறையவே இருந்தது. கந்தசஸ்டி விரதம் பிடித்துப் பாருங்கள். அருமையான விரதம். ஆறு நாள்கள் இரவு ஒருநேர உணவு. வயிறு காய்ந்து உடலில் உள்ள கொழுப்புகள் கரைந்து தேகம் மெலிந்து புத்துணர்வு பெறும்.

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்" என வள்ளுவன் கூறியது போல உண்ட உணவு சமிபாடு அடைந்தமையை அறிந்து உண்பவரிடம் உடல் ஆரோக்கியம் இருந்தது. உணவை அளவறிந்து உண்பவரின் உடல் நோயற்று இருந்தது. உணவை அளவாக உண்டால் உணவை நாம் உண்போம். மூக்குமுட்ட வயிறு நிறைய உண்டால் உணவு தான் எம்மை உண்ணும். உணவு நஞ்சாகி நோய் வந்து பீடிக்கும்.

உலகில் பட்டினியால் இறந்தவர்களை விட அளவுக்கு மீறி உணவு உண்டு நோய் வந்து இறந்தோர் தொகை தான் அதிகம்.

மால்தூஸ் எனும் மேற்கத்தைய அறிஞர் இப்போதுள்ள சனத்தொகையை விட பல மடங்கு சனத்தொகைக்கு உணவு கொடுக்கக் கூடிய அளவுக்கு உலகில் உணவு வளங்கள் உள்ளது.

ஆனால் அதன் பங்கீடு சரியாக இடம் பெறாமையே பட்டினி நிலைமைக்குக் காரணம் - என்றார்.

மண்பானை, மண்சட்டி சமையலில் நிறையவே உடல் நலம் இருந்தது.

மண்பானையில் சோறு சமைத்து மிஞ்சிய சோற்றில் இரவு தண்ணீர் விட்டு அதிகாலை அந்தச் சோற்றுத் தண்ணீரைக் குடிக்கும் பழக்கம் இருந்தது. அந்தப் பழக்கம் இருந்த காலத்தில் காலைக்கடன்களை இலகுவாகக் கழிக்க முடிந்தது. நோய்கள் பலவற்றுக்கு மூலகாரணம் மனச் சிக்கல், மலச்சிக்கல். இந்த இரண்டு சிக்கலும் இல்லாத மனிதனை நோய்கள் அண்டாது.

இயற்கையில் கிடைத்த இரசாயனம் கலக்காத உணவு வகைகள் எமக்கு நற்சுகத்தைத் தந்தன. அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும். வேகமாக உற்பத்தி செய்ய வேண்டுமென மனிதர்கள் பேராசைப்பட இரசாயன உலகம் எம்மை ஆக்கிரமித்துக் கொண்டது.

இயற்கையுடன் பகைத்துக் கொண்டோம். செயற்கையுடன் உறவாடினோம்.

புறொய்லர் இறைச்சி உண்டு மனிதரும் புறொய்லர் ஆகிப் போனார்கள்.

விளைவு இயற்கை எம்மைப் பகைத்துக் கொண்டது. புதுப்புது நோய்கள் எம்மைச் சொந்தம் கொண்டாட நாளாந்தம் 3 வேளையும் 100 கிராம் குளிசை போட்டால் தான் நடக்கலாம். இருக்கலாம். நித்திரை கொள்ளலாமென்ற புதிய வாய்ப்பாட்டு வாழ்க்கை வசப்பட்டது.

இதிலுள்ள விசித்திரம் என்னவென்றால் புலம்பெயர் தேசங்களில் கடுமையான உழைப்பாளிகளாக இருந்து அனுப்பும் பணம் இங்கு கடுமையான சோம்பேறிகளை உருவாக்கி விட்டது .

சோறு சாப்பிட்டு கொகோகோலா குடித்தால் தான் செமிக்குமென்ற புதிய வாய்ப்பாடுகளும் வந்து விட்டன. பல்தேசியக் கம்பனிகள் விளம்பர உலகம் எமது பாரம்பரியங்களைப் பிழையென்று எம்மை நம்ப வைக்கின்றன. எமது பணத்தைச் சுரண்டுகிறது.

சில வருடங்களுக்கு முன்பாக ஓர் பத்திரிகையின் வாரமலரில் "சுட்டாறிய தண்ணீர் உடல் நலத்திற்குக் கேடானது. என்னென்ன வழிகளில் கேடு வருமென்பதை ஒரு விஞ்ஞானி தனது ஆய்வின் மூலமாகக் கண்டறிந்ததாக " ஒரு சிறு கட்டுரை வந்தது.

அதனை வாசிப்போர் சுட்டாறிய தண்ணீரை ஒரு போதும் அருந்தக் கூடாதெனத் தான் முடிவுக்கு வருவார்கள்.

உண்மை அதுவல்ல. போத்தல் தண்ணீர் எனப்படும் மினரல் வோட்டரை விற்க முற்பட்ட ஒரு பல்தேசியக் கம்பனிக்கு கிணற்றுத் தண்ணீர், சுட்டாறிய தண்ணீர் யாவும் தீங்கானது என மக்களை நம்ப வைத்தால் தான் வியாபாரம் எடுபடும். அதனால் மக்களால் பெரிதும் வாசிக்கப்படும் குறித்த பத்திரிகையுடன் பல இலட்சம் ரூபாவுக்கு விளம்பர ஒப்பந்தங்களைச் செய்து கொண்டது. அந்தப் பத்திரிகையும் மக்களின் மண்டையைக் கழுவும் வேலையாக இது போன்ற செய்திக் கட்டுரைகளைப் பிரசுரித்தது.

இன்று போத்தல் தண்ணீர் வைத்திருப்பவர்கள், வைத்திருக்கப்படும் விழாக்கள் நவ நாகரீகமானதென்ற நிலைப்பாடு வெற்றிகரமாகக் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

தென்னிந்தியத் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றில் "உங்களுக்கு உடல் பயிற்சி செய்ய நேரமில்லையா? இதோ இந்தப் பால்மாவைக் குடியுங்கள் உடலுக்கு நன்மைஏற்படும் " என ஒரு விளம்பரம் வந்தது. பாருங்கள் எவ்வளவு மோசமாக மிகவும் பகிரங்கமாக ஏமாற்றுகிறார்கள்.

நொருங்கத் தின்றால் நூறாண்டு வாழலாம் என்றனர் மூத்தோர்கள். உண்ணும் உணவை வாயில் பற்களால் நன்றாக அரைத்து உண்டால் உணவு நன்றாகச் சமிபாடு அடையும் என்றார்கள்.

ஆனால் பற்களால் . அரைத்துச் சாப்பிட்டால் சத்தம் கேட்கும். அது ஸ்ரைல் இல்லையெனப் புறக்கணித்து விழுங்கி விழுங்கி உண்பது செமியாக் குணத்தை உண்டாக்கி நோயைக் கொண்டு வரும். உண்டபின் நூறடி உலாவு என்றனர் முன்னோர். அதாவது உணவு உண்ட பின் நூறடி தூரம் உலாவினால் உணவு வயிற்றில் நன்றாக அரைபட்டுச் சமிபாடு அடையும். ஆரோக்கிய வாழ்வு தானாக மலரும். தொலைக்காட்சி அல்லது கணனி பார்த்துக் கொண்டே இருந்த இரையில் உணவு உண்டு அப்படியே கையைக் கழுவிக் கொண்டு இருந்தால் வண்டி (தொந்தி) விழுந்து நோய்ஓடி வரும்.

இரவு உணவு உண்டு இரண்டு மணித்தியாலங்களுக்குப் பின் நித்திரைக்குப் போவது தான் உடல் ஆரோக்கியம் என மூத்தோர் வகுத்திருந்தார்கள்.

ஆனால் இரவு உணவு உண்டவுடன் கையைக் கழுவி விட்டு மல்லாந்து நித்திரை கொண்டால் நோய்கள் தானே தேடி வரும். தொப்பை பெருத்து குனிந்து முழங்காலைத் தொட முடியாத மனிதர்கள் தான் அதிகமாகி வருகின்றனர்.

மண் வீடு, திண்ணை வாழ்வைத் தொலைத்து விட்டோம். பூட்டிய வீட்டினுள் மின்விசிறிக் காற்றுடனான வாழ்க்கை தான் யாவருக்கும் பொதுவாகி விட்டது.

அதனால் நோய்.நோய்க்கு மருந்து. மருந்தினால் பக்க விளைவு. அதனால் நோய். அதற்கு மருந்தெனச் சுற்றோட்டம் தொடர்கிறது. வருடத்தில் இரு நாள் பேதி குடித்து வயிற்றைத் தூய்மைப்படுத்திய வாழ்வைக் கைவிட்டதும் பலவித நோய்களுக்கு காரணம்.

ஆடிஅமாவாசைக்குக் காத்தோட்டியம் காய் கறிகளுக்குச் சேர்ப்பார்கள். அந்தக் காய் வயிற்றிலுள்ள பூச்சிகளைக் கொல்லும். ஆரோக்கியம் கிடைக்குமென எமது முன்னோர் வகுத்துள்ளார்கள்.

உடற்பயிற்சி உள்ள வாழ்க்கை முறையே அவசிய தேவை. கிடைக்கின்ற ஒவ்வொரு துண்டு நிலத்தையும் வளப்படுத்த வேண்டும். நடைப் பயிற்சியாவது செய்து நலம் பேண வேண்டும். தொற்றா நோய்களற்ற அழகிய உலகைக் கட்டியெழுப்ப எமது முன்னோர் வாழியின் நல்ல பண்புகள் குறித்த விழிப்புணர்வே அவசரத் தேவை. ■

# ஈரநிலம்

நிலம் 20

● ஆத்மீ

கையில் கிடைத்ததை அள்ளிச் சுருட்டிக்கொண்டு அவசர அவசரமாக ஆங்காங்கே கிடந்த கூடாரங்களைக்கடந்து ஓடிக்கொண்டிருந்தவர்களையே, தீரன் நிறுத்துவதற்காக ஓடினான்.

நட்சத்திரன் அவசரப்பட்டதற்கு என்னவோ காரணமிருக்கிறது என்று தோன்றியது் கட்டிக் கிடந்த கொட்டகைகள் எல்லாம் கடந்து ஓடிப்போனவன், " இதில வசந்தன் யார்?" விழிகளால் துழாவினான்.

"ஓமண்ணை, நான் தான்!" தடுமாறி தயங்கிக்கொண்டே தன்னை சூட்டிக்கொண்டான் வந்திருந்தவர்களில் ஒருவன். கூட இருந்த பெண்கள் கொஞ்சம் தயங்கினார்கள். மிரள மிரளப் பார்த்தார்கள். எண்ணங்களில் பயம் கொஞ்சம் ஓடிக்கொண்டிருந்தது. எதற்காக மறிக்கிறார்கள் என்று தெரியவில்லை. உள்ளூர பயமும் ஒட்டிக்கொள்ள, என்ன என்பதுபோல விழித்தார்கள்.

"ஒண்டுமில்ல.. கொஞ்சம் கதைக்கோணும், எங்கட மெடிசின் வரைக்கும் வந்துட்டுப் போங்கோ.." என்றபடி தான் முன்னே நடந்தான். அவர்களைத் தன் பின்னே வரும்படி சைகை செய்துகொண்டு வேகமாய் மெடிசினை நோக்கி ஓடினான்.

நட்சத்திரன், கதிரையை விட்டு எழுந்து, வருகின்றவர்களை ஆவலோடு ஆரத்தழுவ எத்தனித்




தான். முடியவில்லை. உடல் நிலை ஒத்துழைக்கவில்லை. மெதுவாக சோகம் படர அமர்ந்து கொண்டான். அந்தநேரம்பார்த்து, தீரன் அவர்களை அழைத்து வந்துவிட்டான். எதற்காக வந்திருக்கிறோம். ஏன் இவர்கள் அழைத்திருக்கிறார்கள் என்பது வசந்தனுக்கும் கூட வந்திருக்கிறவர்களுக்கும் புரியவில்லை. இன்னும் ஒன்றுமே புரியாமல் பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

"தீரா... கொஞ்சம் என்னை பிடி, அவங்க உள்ளே வர வேண்டாம். நான் வெளிய போய் கதைக்கிறேன்.." என்றபடி, தீரனின் உதவியோடு எழுந்து அவர்களை நோக்கி நகர்ந்தான்.

"'நட்சத்திரா.... டேய்.. " வசந்தன் வாய்விட்டுக் கத்திவிட்டான். கூட வந்திருந்தவர்களும் "தம்பி என்னடா நடந்தது" என்று ஒருமித்து அழ ஆரம்பித்து விட்டார்கள்.

வசந்தன் ஓடிச்சென்று நட்சத்திரனை ஆரத்தழுவிக்கொண்டான். "என்னடா ஆகிட்டு உனக்கு... " மேலே எதுவும் பேச முடியவில்லை. கண்ணீரோடு அவனை மேலிருந்து கீழாக தடவி தன் பாசத்தை போர்த்திப் பார்த்தான். "எப்பிடி ஆகிட்ட.. என்ன நடந்தது இது.. காயங்களா இருக்கு? ஏன் நொண்டிக் கொண்டிருக்க? "ஒன்றுமே புரியவில்லை. என்னாகிட்டு இவனுக்கு என்ற கேள்வியோடு அவனை நோக்கினான் வசந்தன்.

"இல்லைடா, கடைசியா பச்சைபுல்மோட்டையில நடந்த சண்டையில ஷெல்லால போட்டுப் பிடிச்சிட்டான். அதுல தான் இந்தக் காயங்கள். சரி விடு விடு.. எங்க போறீங்க இப்போ எல்லாரும்? எங்க இருந்தனீங்க இவ்வளோ நாளும்? " கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனவன், "டேய்!! அம்மாக்கள் எங்க இருக்காங்க? எங்கையாவது கண்டனியா?" கேட்டுவிட்டு ஆர்வமாய் அவனை நோக்கினான் நட்சத்திரன்.

அந்தக் கேள்வி அவனை நிலைகுலைய வைத்தது. என்ன பதில் சொல்வதென்று தெரியாமல், அவனை பார்க்கவும் முடியாமல் பரவி எங்கோ நிலைகுத்தியது.

(நனையும்...)

# குண்டுவைப்பாங்களே! விளங்கிக் கொள்ளுங்கோடா!!

இப்ப பாக்கேக்கை எல்லாரும் கள்ளர் கூட்டமாவெல்லே கிடக்கு. என்னடா அப்பா! எட்டரைக்குக் குண்டு வைக்கப் போறாங்கள் எண்டு தெரிஞ்சிருந்தும் கண்ணை மூடிக் கொண்டு இருந்திருக்கிறாங்களே? உவங்களை நம்பி அரசாங்கத்தை குடுத்திட்டு இளிச்சவாயா நாங்கள் இருக்கிறம், என்ன?

ஜப்பானிலை பூகம்பம் வரப்போகுதெண்டு தெரிஞ்ச உடனை அதற்குரிய ஆயுத்தங்களைச் செய்துபோட்டு பூகம்பத்தைப் பாத்துக்கொண்டு இருந்திருக்கிறாங்கள். வந்த உடனை கட..கட எண்டு கூட்டி அள்ளிப்போட்டு சனத்தையும் ஆசுவாசப்படுத்திப் போட்டு கொஞ்ச நாளைக்குள்ளை நாட்டைத் திருப்பிக் கொண்டு வந்துவிட்டாங்கள். அவங்கள் ஜப்பானியர்.

இது குண்டு வைச்சு ஆக்களைச் சாக்காட்டப் போறாங்கள் எண்டு வடிவாப் புலனாய்வு சொன்னதுக்குப் பிறகும், மைத்திரியும், ரணிலும் தங்கடை அலுவலைப் பாத்திருக்கினம்.

"வைக்கிறதுதான் வையுங்கோ. தமிழ்ச் சனம் போற இடத்தைப் பாத்து வையுங்கோ" எண்டு சொல்லிக் குடுத்ததும் இவையோ? தெரியாது!

இப்ப "நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின்ரை விசாரணைக்குப் போகப் பிடாது. அவைக்கு உண்மை சொல்லப்பிடாது. அவை என்ன கேட்டாலும் வாயை மூடிக் கொண்டு நிக்க வேணும்" எண்டு மைத்திரி ஆக்களுக்கு வகுப்பெடுத்திருக்கிது. உதை முன்னம் செய்திருக்கலாமே? அவன் 'நானா'வை வடிவா அந்தாளுக்குத் தெரியும். அவனைக் கூப்பிட்டு,

"எட மேனை! குண்டு வையாதை. வெடிச்சுச் சிதறிச் சனம் செத்துப்போகும். நாட்டிலை குழப்பம் வந்திடும். அதாலை மற்றவையளிலும் விட உங்கடை நானாமாருக்குத்தான் இட்டிடைஞ்சல் வரும். ஏற்கனவே என்ரை ஆக்கள் உங்களிலை கறாரா இருக்கிறாங்கள். உங்கடை பெண்டுகளை முகத்தை மூடிக் கொண்டு திரியப்பிடாது எண்டு வேறை நெருப்பெடுத்திருக்கிறாங்கள். தேரர்மாரும் அம்பாறையிலை கொத்து றொட்டிக்கை கருத்தடை மருந்தைக் கலந்து உங்கடை ஆக்கள் வித்தவை எண்டதையும் சொல்லிக் கடைக்குள்ளை உள்ளிட்டு அடிச்சு நொருக்கிக் கலாட்டா பண்ணினவங்கள். அப்ப இப்பிடி இருக்கேக்கை நீ குண்டை வைச்சுக் குழப்பிப்போடாதை. வேணுமெண்டால் கொஞ்ச சீன வெடி வாங்கக் காசு தாறன். போய் எங்கையும் ஒதுக்குப்புறமா நிண்டு கொண்டு கொளுத்தி விளையாடு. அப்பிடி இல்லை எண்டு சனத்தைக் கொல்ல வேணுமெண்டு கை துரு துருத்தால் கொஞ்சச் செம்மறி ஆடுகளை வாங்கக் காசு தாறன் போய் எங்கையும் பள்ளிவாசலுக்கு முன்னாலை வைச்சு அறுத்துக் கொட்டு. கடைசி நீ குர்பான் செய்தனி யெண்டாவது நினைக்கட்டும். என்ரை அப்பு குண்டை மட்டும் வைச்சிடாதை"

எண்டு அவனுக்குப் புத்தி சொல்லி இருக்கலாமே!

அதை விட்டிட்டு சிங்கப்பூரிலை போய் நிண்டிருக்கிறார் ஜனாதிபதி. சீனனிட்டைப் போய் நிக்கிறாய். ஏன் அவசர அவசரமாப் போனனீ எண்டு கேட்டால் "நாரிக்கை பிடிச்சுக் கொண்டிது. அதுக்கை அக்குபஞ்சர் செய்ய வந்தனான்" எண்டு கதை விடுகிறாய். நீ அக்குபஞ்சர் போடப்போய் நிண்ட நேரம், சஹ்ரான் நாட்டைப் பஞ்சகராக்கிப் போட்டுச் செத்துப்போனான்.இப்ப எத்தினைபேர் இதுக்கு விளக்கம் சொல்ல வேண்டிக் கிடக்கு.

ஆனாலும், குண்டு வைச்சாலும் வருங்காலத்திலை வெடிக்க வேண்டிய பல குண்டுகளைப் பற்றின தகவல்களை வெளிக்காட்டிப் போட்டான் சஹ்ரான் எண்டும் சனம் கதைக்கிது. வெடிக்கக் கிடந்த குண்டுகளிலை ஆகலும் பெரிய மாண்டான் குண்டு ஹிஸ்புல்லா எண்ட மிதி வெடி. உது ஆக்களை இல்லை நாட்டையே பிளந்துபோடும் எண்டமாதிரிக் கிடக்கு அவரைப் பற்றிச் சனம் சொல்லுற கதை.

இஞ்சை எங்கடை ஐயர்மார் சமஸ்கிருதத்தைப் படிச்சுப் போட்டுப் பூசை செய்யினமே ஒழிய பெண்டில் பிள்ளையளோடை சமஸ்கிருதத்திலை கதைக்கிறேல்லை. அதைத் தங்கடை தாய் மொழி எண்டும் கொண்டாடுறேல்லை. அதைப் போலை சிங்கள பௌத்த ஆக்கள் பாளியைப்படிச்சு பூசைபுனர்க்காரத்தைச் செய்யிறாங்களே ஒழிய அதைத் தங்கடை தாய் மொழி எண்ணுறேல்லை. கிறிஸ்தவ ஆக்களும் லத்தீனிலை பூசை செய்யினம். அவையளும் அதைத் தாய் மொழி எண்ணுறேல்லை. இவைதான் அரபுப் பாஷையிலை குர்ஆனைப் படிச்சிட்டு அதைத் தங்கடை தாய்மொழி எண்டுகினம்.பாகிஸ்தான், பங்களாதேஷ் எண்டு எல்லா இடத்திலையும் இருக்கிறவை பூசை பண்ணுறதோடை சரி அரபுப் பாஷை. பிறகு அவையள் உருது,



வங்காளம் எண்டு தங்கடை தாய் மொழியைத்தான் பேசிறவை. இது இஞ்சை மட்டுந்தான் ஹிஸ்புல்லாவுக்கு அரபு மொழியிலை காதல் வந்திருக்கிது.

இப்ப நானாமார் பலரும், மௌலவியளும் அதுக்குப் பலவிதமாக் கதை சொல்லிப் போட்டினம் சஹ்ரானை நரகத்துமுள்ளு எண்டு கூட ஒரு மௌலவி பேசிப் பேப்பரிலை வந்திருந்ததைப் பாத்தன். அப்ப தமிழிலை படிச்சுக் கொண்டு, தமிழைப் பேசி, தமிழருக்கு எண்டு ஒதுக்கிற எல்லாக் கோட்டாவையும் அனுபவிச்சுக் கொண்டு அதாலை தமிழ் சனத்தின்ரை வயித்திலை அடிச்சுக் கொண்டு.. நீங்கள் தமிழரா? இல்லாட்டிச் சிங்களவரா? எண்டு கேட்டால்... நாங்கள் முஸ்லிம் எண்டுறியள். எட முஸ்லிம் எண்டது ஒரு மத அடையாளமெண்டதை விளங்கிக் கொள்ளுங்கோடா, குண்டு வைப்பாங்களே....!!!

– வில்லங்கம் விநாசி

# குழப்பத் ஏற்படுத் அந்நிய சக்திக சதி!

இலங்கையில் நடந்த ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுவெடிப்பு துயரங்களின் தாக்கம் இன்னும் தொடர்கிறது. இதன் பின்னர் முஸ்லிம் மக்கள் அனுபவித்துவரும் உளவியல் சித்திரவதைகள் ஏராளம். குண்டுவெடிப்பு சம்பவம் முஸ்லிம் சமூகத்தின் கலாசாரத்தில் மட்டுமன்றி அரசியலிலும் அதிகார மையங்களிலும் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியிருக்கிறது. இதன் எதிரொலியாகவே இலங்கையின் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான ரவூஃப் ஹக்கீம் தலைமையில் ஒன்பது அமைச்சர்கள் தங்களது பதவியை ராஜினாமா செய்திருக்கிறார்கள். இந்த நிலையில், தமிழகம் சென்றிருந்த ரவூஃப் ஹக்கீம், ஆனந்தவிகடன் சஞ்சிகைக்கு வழங்கிய நேர்காணல் மறுபிரசுமாகின்றது.

● நேர்காணல்: ஐஷ்வர்யா

**கேள்வி:** தொடர் குண்டுவெடிப்புகளுக்குப் பிறகான இலங்கை எப்படி இருக்கிறது?

**ஹக்கீம்:** சில அந்நிய சக்திகள், 'இலங்கையில் மீண்டும் குழப்பநிலையைக் கொண்டு வர வேண்டும். அதில் குளிர் காய வேண்டும்' என்று நினைக்கின்றன. அதற்கு இலங்கை முஸ்லிம் சமூகத்தை அவர்கள் பலிக்கடா ஆக்குகின்றனர். எங்கள் சமூகத்தைச் சேர்ந்த எட்டு பேர் மூளைச்சலவைச் செய்யப்பட்டு தற்கொலைத் தாக்குதலில் ஈடுபடுத்தப் பட்டார்கள் என்பது விசனமாகவே இருக்கிறது. ஐ.எஸ்.ஐ.எஸ் இலங்கையில் ஊடுருவிவிட்டதாக ஒரு பிம்பம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், ஐ.எஸ்.ஐ.எஸ் வெறும் பெயர் மட்டுமே. அதை, சில ஏகாதிபத்திய சக்திகள் தங்களுடைய சொந்த அரசியல் ராஜ தந்திரங்களைச் செயற்படுத்துவதற்காக உபயோகிக்கின்றன. அதற்கு எங்களைப் பலியாக்குவதற்கு, நாங்கள் தலையசைக்க முடியாது.

**கேள்வி:** குண்டுவெடிப்புச் சம்பவம் நியூசிலாந்து மசூதித் தாக்குதலுக்குப் பழிவாங்க நடத்தப்பட்டதாகவும் அதில் சீனா மற்றும் பாகிஸ்தானுக்குப் பங்கு இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இதைப் பற்றிய உங்கள் பார்வை என்ன?

**ஹக்கீம்:** இல்லை, இது நியூசிலாந்து தாக்குதலுக்குப் பழி வாங்க நடத்தப்பட்ட தாக்குதலாகத் தெரியவில்லை. உண்மையான குற்றவாளிகளிடமிருந்து பார்வையைத் திருப்புவதற்காகவே இப்படிச் சொல்கிறார்கள். இது, வேண்டுமென்றே திணிக்கப்பட்ட தீவிரவாதம். சர்வதேச ராஜதந்திரங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இது தொடர்பாக ஒரு தெளிவு கிடைக்கும். சில ஏகாதிபத்திய சக்திகள் மத்திய கிழக்கு நாடுகளில் ஜனநாயகத்தை நிலைநாட்டுகிறேன் என்று சொல்லி அந்த நாடுகளைச் சின்னாபின்னமாக்கியது எல்லோருக்கும் தெரியும். அப்படித்தான் இலங்கை மீதான தாக்குதலையும் பார்க்கிறேன்.

அதேசமயம் வெறும் யூகத்தின் அடிப்படையில் மட்டும் காரணத்தைச் சொல்வது, பிரச்சினைக்கு மேலும் திரியைக் கொளுத்துவதாகவே இருக்கும். ஆனால், ஒரு விஷயத்தை உறுதியாகச் சொல்லிக் கொள்கிறேன். இலங்கையின் ஒருமைப்பாட்டுக்குக் களங்கம் விளைவிப்பவர்களை, இலங்கை முஸ்லிம் சமூகம் இன்னும் ஆத்திரத்துடனும் உக்கிரமாகவும் எதிர்கொள்ளும்.

இலங்கையில் தேவாலயங்களில் தாக்குதலில் ஈடுபட்ட தற்கொலைத் தீவிரவாதக் குற்றவாளிகளுக்கு இஸ்லாமிய சமய ஆராதனையுடன் நல்லடக்கம் செய்வதற்குக்கூட நாங்கள் இடம் கொடுக்கவில்லை. அவர்கள் இஸ்லாமியர்களாக இருக்கவே தகுதியற்றவர்கள் என்று ஒதுக்கிவிட்டோம். இப்போதாவது எங்கள் சமூகம் இலங்கைமீது கொண்டிருக்கும் நாட்டுப் பற்றைப் புரிந்து கொள்வீர்கள் என்று நினைக்கிறேன்.

**கேள்வி:** 2020ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலை இந்தச் சம்பவம் எந்த அளவுக்குப் பாதிக்கும்?

**ஹக்கீம்:** தற்போதைய எதிர்க் கட்சிகளுக்குப் பெரிய ஆதாயம் இருக்கிறது. மக்களின் பதற்ற நிலையைத் தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்கிறார்கள். அப்பாவி இஸ்லாமிய மக்கள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். 29 இஸ்லாமிய மசூதிகள் தாக்கப்பட்டிருக்கின்றன. இஸ்லாமிய மக்களின் நடை, உடை, பாவனையில்.. கலாசாரத்தில் பெரும் மாற்றம் திணிக்கப்பட்டிருக்கிறது. புர்கா அணியத் தடைசெய்யப்பட்டிருக்கிறது. அரசின் அசமந்தப்போக்கினால் ஏற்பட்ட சம்பவத்தை, ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் மக்கள்மீது மட்டும் திணிப்பது நியாயமற்றது. அதனால்தான் கட்சி பேதமின்றி ஒன்பது அமைச்சர்கள் பதவி விலகினோம். சமூகத்தின் பாதுகாப்பு பிரதானமானது என்பதைச் சகல தரப்பினருக்கும் வலுவாகத் தெரிவிக்கவே இதைச் செய்திருக்கிறோம். வரும் தேர்தல்களில் இஸ்லாமிய மக்கள், யாரையும் நம்பி வாக்களிக்கத் தயாராக இல்லை. தனித்தே தேர்தலைச் சந்திக்கவும் தயாராக இருக்கிறார்கள்.

**கேள்வி:** இலங்கைச் சம்பவம் தொடர்பாக இஸ்லாமியச் சமூகம் ஒன்றிணைந்து, ஏன் சர்வதேச அளவில் குரல் எழுப்பவில்லை?

**ஹக்கீம்:** நிச்சயம் பாரிய எதிர்ப்பு முஸ்லிம் சமூகத்தில்வெளிப்படுகிறது. இஸ்லாத்தின் மதபோதனைகளில் இல்லாத தீவிரவாதம், இஸ்லாத்தின் பெயரால் இறக்குமதி செய்யப்படுகிறது. ஆனால், இஸ்லாம் ஒரு சாந்தி மார்க்கம். பிற மதத்தவர்களை இம்சிக்கக் கூடாது என்று எங்கள் மதம் கூறுகிறது. தலையெடுக்கும் மதத் தீவிரவாதம் அனைத்தும் களையெடுக்கப்பட வேண்டும் என்பதில் எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை.

**கேள்வி:** சுற்றுலாவை நம்பியிருக்கும் இலங்கையின் பொருளாதாரம், இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவங்களால் எந்த அளவுக்குப் பாதிக்கப் பட்டிருக் ?

**ஹக்கீம்:** 99 சதவிகிதம் பாரிய தாக்கம் ஏற்பட்டிருக்கிறது. வெளிநாட்டு முதலீடுகளிலும் நிறையப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதை ஏற்படுத்திய அந்நிய சக்திகளும் இதைத்தான் விரும்பின. அதன் வழியாகக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கை அரசியலில் அவர்கள் தலையிடலாம் என்பதுதான் அவர்களின் எண்ணம்.


**கேள்வி:** ஈழத்தமிழர்களை ஒடுக்க எடுத்துக்கொண்ட அக்கறையை, நாட்டின் பாதுகாப்பை மேம்படுத்துவதில் இலங்கை அரசு மேற்கொண்டதா?

**ஹக்கீம்:** ஈழத்தமிழர்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே நடந்தது ஒரு சிவில் போராட்டம். தமிழர்களின் போராட்டத்தில் இருந்த நியாயத்தை உணர்ந்திருக்கிறோம். தமிழர்களுக்காக ஆயுதம் ஏந்தி ஒரு வலுவான இயக்கக் கட்டமைப்பை விடுதலைப் புலிகள் உருவாக்கியிருந்தார்கள். ஆனால், அவர்களையே அசைத்துப் பார்த்த அளவுக்கு, இலங்கையின் பாதுகாப்புத்துறை சிறப்பாகவே இருந்தது. விடுதலைப்புலிகளுக்கு வலுவான காரணமும் சமூக ஆதரவும் இருந்தது. ஆனால், இலங்கை பாதுகாப்புத் துறைக்கு காரணமும் இல்லை சமூக ஆதரவும் இல்லை.

> தற்போதைய எதிர்க் கட்சிகளுக்குப் பெரிய ஆதாயம் இருக்கிறது. மக்களின் பதற்ற நிலையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.



தை
த்த
ய
கள்
!



**கேள்வி:** முள்ளிவாய்க்கால் படுகொலை அரங்கேறி 10 ஆண்டுகள் கடந்துவிட்டன. இன்னும் சர்வதேச விசாரணை சாத்தியப்படாமலேயே இருக்கிறதே?

**ஹக்கீம்:** நீதித்துறையின் மீது நம்பிக்கை இல்லை. சர்வதேச விசாரணையில் ஒரு கூட்டுப் பொறிமுறை வேண்டும். இதைத்தான் தமிழ்ச் சமூகம் தொடர்ந்து நிர்ப்பந்தித்து வருகிறது. சார்பெடுக்காத வகையில் நீதி விசாரணை நடைபெற வேண்டும். தமிழ்ச்சமூக மக்களின் சந்தேகங்களும் தெளிவு பெறும் வகையில் நீதி விசாரணை அமைய வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**கேள்வி:** இந்தியாவில் மீண்டும் மோடி பிரதமராகப் பதவி ஏற்றிருக்கும் நிலையில், இலங்கையுடனான உறவு எப்படி இருக்கும்?

**ஹக்கீம்:** இந்தியாவுடன் தொப்புள் கொடி வழி உறவு கொண்டது இலங்கை. பிரதமர் மோடி பதவி ஏற்றதும் மாலைதீவுக்கும் இலங்கைக்கும்தான் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். இதைவைத்தே இலங்கையுடனான இந்திய உறவு எப்படி இருக்கும் என்பதை யூகிக்கலாம். மற்றபடி மோடியின் உள்நாட்டு அரசியலை நாங்கள் விமர்சிக்க முடியாது.

**கேள்வி:** இந்தியாவில் காங்கிரஸின் தோல்வி குறித்து...?

**ஹக்கீம்:** என்னைப் பொறுத்தவரை தமிழகத்தில் மாநிலக் கட்சியான தி.மு.க திட்டமிட்டுச் செயற்பட்ட அளவுக்குக் கூட தேசியக் கட்சியான காங்கிரஸ் நாடு முழுவதும் செயற்படவில்லை. அதனால் அமித்ஷா - மோடி மந்திரம் பலித்திருக்கிறது. விரும்பியோ, விரும்பாமலோ அதனை நாங்கள் வரவேற்றுத்தான் ஆகவேண்டும்

**கேள்வி:** இலங்கைத் தமிழர்கள் இன்னும் தமிழகத் தலைவர்கள் மீது நம்பிக்கையுடன் இருக்கிறார்களா?

**ஹக்கீம்:** கருணாநிதியைப் போல இலங்கைத் தமிழர்களுக்காகப் பேசிய ஒருவரைப் பார்க்க முடியாது. பிரிவினைப் போராட்டத்தின் தொடக்கக் காலத்தில் முதன்முதலாக இலங்கைத் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்தவர் அவர்தான். ஈழப் போராட்டத்துக்காக அவர் கொடுத்த விலை அதிகம். ராஜீவ் காந்தி கொலைக்காகப் பழி சுமத்தப்பட்டார். ஈழத்துக்காக அவர் இழந்ததை எல்லாம் தமிழர்கள் மறந்துவிட முடியாது. ■



# நீர் இன்றி அமையாது உலகு

● மு.சுகதாஸ்
(ஊடகத்துறை, யாழ் பல்கலைக்கழகம்)

எமது நாட்டில் நிலவும் பயங்கரவாதத் தாக்குதல் மற்றும் அச்சுறுத்தல் காரணமாக அனைத்து பகுதிகளிலும் சரமாரியான தேடுதல்கள் இடம் பெற்றுவரும் நிலையில் ஊடகங்களின் பார்வை தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகள் மீதும் அரசியல் விளம்பரம் செய்கின்ற அரசியல் வாதிகன் மீதும் விழுந்துள்ளது. மாறாக உலகலாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள் காலநிலை மாற்றம் எமது நாட்டின் சில பாகங்களிலும் செல்வாக்கு செலுத்துகின்றதனை ஊடகங்கள் காண்டுகொள்ளாது செயற்படுகின்றமை மனவேதனை அளிக்கின்றது.

"நீர் இன்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு"

எவ்வகையிலும் உயர்ந்தவர்கள் எவரும் நீர் இல்லாமல் இவ்வுலகில் உயிர் வாழ முடியாது. அதுபோல தண்ணீரின் இடைவிடாத ஓட்டமும் மழை பெய்யவில்லை என்றால் இல்லாது போய்விடும் என திருவள்ளுவர் எடுத்துரைத்ததன் அடிப்படையில் நீரின்றி தவிக்கும் அடிநிலை மக்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். இன்றைய நவீன உலகில் மனிதன் அனைத்து வளங்களையும் வென்றுவிட்டதாகவும் எல்லாவற்றையும் சொந்தமாக்கிக் கொண்டதாகவும் கருதுகின்றான் ஆனால் இயற்கைக்கு முன்னால் மனிதன் ஒன்றும் இல்லை என்பது அவனுக்கு தெரியாதுள்ளது. பருவநிலை மாற்றமே மனித குலத்தின் மிகப் பெரிய அச்சுறுத்தலாகிவிடுகின்றன. இவ் அச்சுறுத்தலை ஏற்படுத்துவதும் மனிதனே அச்சுறுத்தலின் விளைவுகளை எதிர்நோக்குவதும் மனிதனே ஆகின்றான்.

இலங்கையின் வட கிழக்கு மற்றும் தென் மாகாணங்களில் நிலவும் தொடர் வறட்சி காரணமாக நீரின்றி மக்கள் பல இன்னல்களை எதிர் நோக்கி வருகின்றனர். ஐந்தறிவு ஜீவன்களான கால்நடைகள் அருந்துவதற்கு நீர் இல்லாமலும் உண்பதற்கு செழிப்பான புற்கள் இல்லாமலும் ஆங்காங்கே இறந்து கிடக்கும் நிலமை தென்படுகின்றது. இதனால் கால்நடைகளை ஜீவனோபாயமாகக் கொண்டுவாழும் மக்களின் நிலைமை இப்பொருளாதார உலகில் கேள்விக்குறியாகவே உள்ளது. மேலும் மழை நீரினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் பயிற்செய்கைகள் இன்று போதிய நீர் இன்றி கருகிய நிலையில் தென்படுவதனைக் காணக் கூடியதாய் உள்ளது. குறிப்பாக நெற்செய்கையினை மேற்கொள்ளும் விவசாயிகள் போதியளவு நீர் இல்லாமல் விவசாயத்தினை கைவிட்டு வேறு சுயதொழில்களைத் தேட ஆரம்பித்துவிட்டனர். நாம் கால் மேல் கால்போட்டுக்கொண்டு உண்ணும் உணவு கூட விவசாயியின் வழிவந்ததுதான் .

இன்றைய சூழலில் மக்கள் குடி நீர் இன்றி பரிதவித்து வரும் நிலையில் தமது அன்றாடத் தேவைகளுக்காக நீரினைப் பயன்படுத்திக் கொள்ள முடியாமல் அரசாங்கம் கொடுக்கும் பவுசர் தண்ணீரினையே எதிர்பார்த்தபடி காத்திருக்கின்றனர் சிலர். குடும்ப நபர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தண்ணீர் அளந்து கொடுக்கப்படும் துர்ப்பாக்கிய நிலைமையும் தற்போது சில பகுதிகளில் நிலவி வருகின்றது. கொடிய யுத்த சூழலினையும் வாழ்ந்து கழித்த எம் மக்கள் இன்று குடி நீர் இல்லாது தண்ணீருக்காகப் போராட வேண்டிய நிலமையில் தமது வாழ்நாளினைக் கழித்து வருகின்றனர். எனவே தொடர் வறட்சி நிலவும் சூழலில் நீரினை சிக்கனமாக பயன்படுத்த வேண்டிய அவசியம் எம் அனைவரினதும் கடமையாகும். சிறு பராயத்திலிருந்தே நீரினை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என பாடப்புத்தகங்களிலும் வகுப்பறைகளிலும் படித்துள்ளோம். ஆனால் நாம் படித்தமைக்கிணங்க அதனைக் பயன்படுத்துகின்றோமா என்றால்,பதில் இல்லை என்பதே. இருப்பினும் காலத்தின் தேவைகருதி நாம் உயிர்வாழ்வதற்கும் நம்மை அண்டிய தாவரங்கள் மற்றும் விலங்குகள் உயிர் வாழ்வதற்கும் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றிக் கொள்ளத்தான் வேண்டியிருக்கின்றது.

1. சமையலறை மற்றும் குளியலறையில் காணப்படும் தண்ணீர்க் குழாய்களில் நீர் கசியாமல் பார்த்துக் கொள்ளுங்கள்
2. குழாய் நீரினைப் பயன்படுத்திவிட்டு மறக்காமல் நிறுத்திவிடுங்கள்
3. தேவைக்கு ஏற்ற நீரினை மட்டும் பயன்படுத்திக் கொள்ளுங்கள்
4. உங்களது நீரளவு மானியின் வாசிப்பின் படி நீர் பயன்படுத்தப்படுகின்றதா என அடிக்கடி கண்காணித்துக்கொள்ளுங்கள்
5. குழந்தைகளிடமிருந்து தண்ணீரினைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்
6. தானியங்கி தண்ணீர் வழங்கும் முறை பற்றி கண்காணிப்பாய் இருங்கள்
7. மழை நீரினை சேமிக்கும் பழக்கத்தினை கற்றுக் கொள்ளுங்கள்
8. வேறு தேவைக்கு பயன்படுத்திய நீரினை தாவரங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.
9. கழிவறையில் போதியளவு நீரினை மாத்திரம் பயன்படுத்துங்கள்
10. சமையலறையில் நீரினை சிக்கனமாக பயன்படுதிக் கொள்ள கற்றுக்கொள்ளுங்கள்
11. பூந்தோட்டங்களுக்கு நீர் ஊற்றும் போது முறையான நீர் பாசன முறையினைக் கையாளுங்கள்.
12. வீட்டில் உள்ள சிறுவர்களுக்கு குழாயை மூடக் கற்றுக் கொடுங்கள்.
13. வாகனங்கள் கழுவுவதற்கு பயன்படும் நீரினை வேறு தேவைகளுக்காக பயன்படுத்திக் கொள்ளுங்கள்.
14. அருகில் இருக்கும் நீர் நிலைகளைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்
15. புவி வெப்பமாதல் மற்றும் காடழிப்பு என்பவற்றால் மழை நீரினை இழக்கின்றோம் என்பதனை மனதில் இருத்திக் கொள்ளுங்கள்

நீர்ச் சிக்கனத்தைப் பேணுதல் மூலம், உலகின் ஆயுளையும், நம் வாழ்வியலையும் இன்னும் நீட்டிக்க முடியும். ■



இந்தியத் தொன்மங்களில் கிரீஷுக்கு ஈடுபாடு ஏற்பட கவிஞர் ஏ.கே.ராமானுஜன் ஒரு காரணம். கதைகளுக்கு வற்றாத மூலம் நமது தொன்மங்கள், மரபு வழிக்கதைகள் என்பார் கிரீஷ். தளரா இளமையை வரமாகக் கேட்கும் ஒருவனைப் பற்றிய 'யயாதி' கிரீஷின் முதல் நாடகம். கிரீஷின் நாடகக் கதைகளுக்கு வரலாறும் ஒரு ஊற்றுக்கண்ணாக இருந்தது. அடுத்து கிரீஷ் எழுதிய 'துக்ளக்' நாடகம் அவருக்குப் பெரும் புகழைப் பெற்றுத்தந்தது. நேருவின் மீதான கிரீஷின் விமர்சனம் இது என்று சொல்வார்கள். பின்னர் அவர் எழுதிய 'திப்புவின் கனவுகள்' என்ற நாடகத்துக்காக காலனியாட்சிக் காலத்தை ஆராய்ந்தார். மெக்கென்சியின் ஆவணங்களைப் பற்றி கிரீஷ் மிக விரிவாகப் பேசுவார்.

# கலைஞனின் தார்மீகக் குரல்

■ தியடோர் பாஸ்கரன்,

**(இந்தியாவின் பிரபல நாடக, சினிமா ஆளுமையான கிரீஷ் கார்னாட் இம்மாதம் 10 ஆம் திகதி காலமானார். அவருக்கான அஞ்சலியாக இக்கட்டுரை பிரசுமா கின்றது)**

கிரீஷ் கார்னாட் இறந்த செய்தி காலையில் வந்த உடனே அவரது அந்திமக் கிரியைகள் அரசு மரியாதையுடன் நடத்தப்படும் என்று கர்நாடக முதலமைச்சர் அறிவித்துவிட்டார். ஆனால், அவரது குடும்பத்தார் அதைத் தவிர்த்து தனிப்பட்ட முறையில் நடத்த விருப்பம் தெரிவித்தனர். இறந்து சில மணி நேரங்களிலேயே அவரது உடல் எரியூட்டப்பட்டது. அந்தஸ்தின் அடையாளங்களையும் படாடோபத்தையும் பொருட்படுத்தாத கலைஞனின் விடைபெறல் அவரது இயல்பிற்கேற்ப, எந்த ஒரு மத, சாதி சடங்காச்சாரமும் இல்லாமல் எளிமையானதாக நடந்தேறியது.

1938இல் மகாராஷ்டிரத்தில் உள்ள மாதெரென்னில் பிறந்த கிரீஷ், அடிப்படையில் ஒரு கணித மாணவர். தார்வாரில் கல்லூரிப் படிப்பை முடித்த உடனே அவருக்கு ஒக்ஸ்போர்டில் மேல் படிப்புக்கு நல்கை கிடைத்தது. பெற்றோர் இருவருமே மராத்தி நாடகத்தில் ஈடுபட்டிருந்ததால் படிக்கும்போதே அவருக்கு நாடகத்தில் ஆர்வம் உண்டானது. தனது 23-வது வயதிலேயே முதல் நாடகமான 'யயாதி'யை கன்னடத்தில் எழுதி வெளியிட்டார். இந்தியா திரும்பிய பின் அவர் சென்னையில் 'ஒக்ஸ்போர்ட் யுனிவெர்சிடி பிரஸ்' பதிப்பகத்தில் பணியில் அமர்ந்தார். ஏ.கே.ராமானுஜன், யு.ஆர்.அனந்தமூர்த்தி, எஸ்.எல்.பைரப்பா என்று கன்னடத்தின் இலக்கிய ஆளுமைகள் ஆங்கிலம் வாயிலாக உலகளாவிய அறிமுகம் பெற்றதிலும் கிரீஷுக்கு முக்கியமான பங்குண்டு.

சென்னையில் ஆங்கில நாடகங்களை மேடையேற்றிக்கொண்டிருந்த 'மெட்ராஸ் ப்ளேய்ர்ஸ்'நாடகக்குழுவின் நாடகங்களில் நடிக்கும் அனுபவம் அந்த சமயத்தில்தான் அவருக்குக் கிடைத்தது. பெங்களூரில் யு.ஆர். அனந்தமூர்த்தியின் 'சம்ஸ்காரா' நாவலைப் படமாக்க பட்டாபிராம ரெட்டி திட்டமிட்டுக்கொண்டிருந்தார். கிரீஷின் சினிமாப் பிரவேசம் 'சம்ஸ்காரா' (1971) படத்தில் முக்கிய பாத்திரமேற்று நடித்ததின் மூலம் நடந்தது. இதே சமயத்தில்தான் எஸ்.எல்.பைரப்பாவின் 'வம்சவிருக்ஷா' நாவலை பி.வி.காரந்துடன் இணைந்து இயக்கினார் கிரீஷ். 'வம்சவிருக்ஷா'(1972) படத்தில் இளம் பேராசிரியரின் பாத்திரத்தில் நடிக்கவும் செய்தார். நாடகம், சினிமா தவிர தூர்தர்ஷனுக்காக தொலைக்காட்சி தொடர்களிலும் நடித்திருக்கிறார். கணிதம், இலக்கியம், பதிப்பு, மொழிபெயர்ப்பு, நடிப்பு, நாடக மற்றும் திரைப்பட இயக்கம் என்று பன்முக ஆளுமையாக விளங்கி ஒவ்வொன்றிலும் தனது முத்திரைகளைப் பதித்தவர் கிரீஷ்.

அறுபதுகளில் இந்தியாவில் உருவான புதிய சினிமா அலையின் முக்கிய காரணகர்த்தாவாக கிரீஷ் இயங்கினார். குமார் சாகினி, அடூர் கோபாலகிருஷ்ணன், கிரீஷ் காசரவல்லி போன்றோர் இந்திய சினிமாவுக்குப் புதிய பரிமாணத்தைக் கொடுத்து, உலகளவில் அதைக் கொண்டுசென்ற காலம் அது. சத்யஜித் ரே படங்கள் யதார்த்த பாணியைக் கையாண்டுகொண்டிருந்த காலகட்டத்தில், கிரீஷ் அதைத் தாண்டி தொன்மங்கள், மரபு வழிக் கதைகளை நாடினார். அவரது படங்களில் அற்புதங்களும் அசாதாரண நிகழ்வுகளும் இருக்கும். கிரீஷ் சில படங்களை இயக்கியது மட்டுமல்லாமல் 'நிஷாந்த்' (1975), 'மாந்த்தன்' (1976) போன்ற முக்கியமான படங்களில் நடித்தார்.

இந்தியத் தொன்மங்களில் கிரீஷுக்கு ஈடுபாடு ஏற்பட கவிஞர் ஏ.கே.ராமானுஜன் ஒரு காரணம். கதைகளுக்கு வற்றாத மூலம் நமது தொன்மங்கள், மரபு வழிக்கதைகள் என்பார் கிரீஷ். தளரா இளமையை வரமாகக் கேட்கும் ஒருவனைப் பற்றிய 'யயாதி' கிரீஷின் முதல் நாடகம். கிரீஷின் நாடகக் கதைகளுக்கு வரலாறும் ஒரு ஊற்றுக்கண்ணாக இருந்தது. அடுத்து கிரீஷ் எழுதிய 'துக்ளக்' நாடகம் அவருக்குப் பெரும் புகழைப் பெற்றுத்தந்தது. நேருவின் மீதான கிரீஷின் விமர்சனம் இது என்று சொல்வார்கள். பின்னர் அவர் எழுதிய 'திப்புவின் கனவுகள்' என்ற நாடகத்துக்காக காலனியாட்சிக் காலத்தை ஆராய்ந்தார். மெக்கென்சியின் ஆவணங்களைப் பற்றி கிரீஷ் மிக விரிவாகப் பேசுவார்.

புனே திரைப்படக் கல்லூரியில் இயக்குநராக இருந்தபோது கிரீஷை நான் முதன்முதலில் சந்தித்தேன். பத்து ஆண்டுகள் கழித்து பெங்களூருக்குப் பணிபுரிய சென்றபோதுதான் அவருடன் பழக்கம் ஏற்பட்டது. மருத்துவராக அவரது மனைவி சரஸ்வதியும் என் மனைவி திலகாவும் ஒரே மருத்துவக் கல்லூரியின் ஆய்வுத் துறையில் பணியாற்றியதால் நாங்கள் அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. கிரீஷுக்கு நெருங்கிய நண்பரான ஓவியர் வாசுதேவ் வீட்டிலும் சில மாலைகளில் ஒன்றுகூடுவது உண்டு.

ஏ.கே.ராமானுஜன் பெங்களூருக்கு வரும் சமயங்களில் நாங்கள் அடிக்கடி சந்திப்போம். ஆர்.கே. நாராயணுக்கு கிரகாம் கிரீன் வாய்த்தாற்போல ராமானுஜனின் கவிதைகள் முதன்முதலாக அச்சேறுவதற்கு கிரீஷின் உதவி முக்கியமாக இருந்தது என்று சொல்வார்கள். அப்போது அவர் 'ஒக்ஸ்போர்ட் யுனிவெர்சிட்டி பதிப்பக'த்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். புனே திரைப்படக் கல்லூரி இயக்குநராக இருந்த ஆண்டுகளை கிரீஷ் நன்றியுடன் நினைவுகூர்வார். "அங்கு நான் இயக்குநர் என்பதைவிட ஒரு மாணவனாகத்தான் இருந்தேன்" என்பார். அவர் இயக்கிய 'ஒந்தான காலதள்ளி' (1978) படத்தில் சினிமாவின் மீது அவர் கொண்ட பிடிப்பைக் காண முடிகிறது.

சினிமாவிலும் நாடகத்திலும் ஒரு முக்கிய ஆளுமையாக விளங்கியது கிரீஷின் சிறப்பு. இரண்டு ஊடகங்களின் தனித்துவங்களை நன்கு அறிந்திருந்ததால் அவர் படைப்புகளில் குழப்பம் ஏதும் இருந்ததில்லை. ஆனால், தான் முதலில் ஒரு நாடகாசிரியர் பின்புதான் திரைப்பட இயக்குநர் என்பார். சமணத் தொன்மத்தை ஆதாரமாகக் கொண்ட 'ஹிட்டின ஹுஞ்சா' என்ற நாடகம் உருவான சமயத்திலேயே 'ஒந்தான காலதள்ளி' வெளியானது. இப்படம் அகிரா குரோசவாவுக்கு கிரீஷ் செய்த மரியாதை.



ஆட்சியாளர்களை எப்போதும் விமர்சனக் கண்ணோட்டத்தோடு அணுகிய கலைஞர் கிரீஷ். புனே திரைப்படக் கல்லூரியின் இயக்குநராக இருந்த காலகட்டத்தில் இந்திரா காந்தியின் நெருக்கடி நிலைப் பிரகடனத்துக்கு எதிராகத் தன்னுடைய பதவியை ராஜினாமா செய்தார். கருத்தரங்குகளிலும் தொலைக்காட்சி விவாதங்களிலும் மட்டுமே பங்கெடுத்துக்கொள்கிற அறிவுஜீவியாக அவர் இருந்ததில்லை. கருத்துரிமைக்காக வீதியில் இறங்கிப் போராடியவர் அவர். பெங்களூருவில் கருத்துரிமைக்கான போராட்டங்கள் நடக்கிறபோதெல்லாம் அங்கு கிரீஷையும் கண்டிப்பாகப் பார்க்க முடியும். முஸ்லிம்களைப் பசுக் குண்டர்கள் தாக்கியபோது 'என் பெயரால் கூடாது' என்று நாடு முழுவதும் போராட்டங்கள் நடந்தன. மூச்சுத்திணறல் குறைபாட்டால், ஒரு சிறிய சிலிண்டர் - மூக்கில் ரப்பர் குழாய்களைப் பொருத்தியபடி, 79 வயதான கிரீஷ் பெங்களூரில் நட்ந்த போராட்டத்தில் கொட்டும் மழையிலும் கலந்துகொண்டார். 2018 செப்ரெம்பரில் நடந்த போராட்டம் ஒன்றில் 'நானும் நகர்ப்புற நக்சல்தான்' என்று கன்னடத்திலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்ட அட்டையைக் கழுத்தில் தொங்கவிட்டபடி கலந்துகொண்டார். சமூகத்தின் தார்மிகக் குரலாக ஒரு கலைஞன் எப்போதும் இருக்க வேண்டும் என்று எண்ணியவர் அவர். அப்படியே வாழ்ந்தார். ■

எதிரொலி
Ethiroli







# பதற்றம்

கொழும்புக்கு வந்த மாலைதீவு சபாநாயகருக்கு இரவு விருந்து அலரி மாளிகையில் நடந்ததாம்.

"பிரதமர் இப்போ ரொம்ப 'டயர்ட்' ஆகிட்டிங்களே.. கொஞ்சம் ஓய்வெடுத்தா நல்லது தானே.." என்று கதையோடு கதையாகச் சொன்னாராம் மாலைதீவு சபாநாயகர்..

அதைக் கேட்டதும் தான் தாமதம், உடனேயே "என்னது ஓய்வா?" என பதறியடித்தாராம் ரணில்..

"இல்ல.. இப்போ நள்ளிரவாகிட்டுதே.கொஞ்சம் ரெஸ்ட் பண்ணுங்க" என்று விளக்கமாக மாலைதீவு சபாநாயகர் நஷீட் சொன்ன பின்னர் தான் ரணிலின் பதற்றம் குறைந்ததாம்.

(அரசியல்ல ஓய்வெடுங்கள் என்று சொன்னாரென்று நினைச்சுட்டாராம் ரணில்..)

# கடுப்பு

தற்போது ஊடகத்துறை அமைச்சின் கீழ் உள்ள இலத்திரனியல் ஊடகம் ஒன்றை ஜனாதிபதி தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரவிருக்கிறாராம்.

அண்மையில் அந்த ஊடகம் ஜனாதிபதி தொடர்பாக வெளியிட்ட செய்தி ஒன்று தொடர்பில் அவர் கடுப்பில் உள்ளார்.

இதற்காக அந்த ஊடகத்தின் பிரதானியை அண்மையில் அழைத்து கடுமையாக எச்சரித்ததாகவும் கூறப்படுகிறது.

இந்தச் செய்தி குறித்த விசாரணைக்காக அவர் அந்த ஊடகத்தைத் தனது கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்ளும் எண்ணத்தில் உள்ளார்.

# சவாரி

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் விளையாடச் சென்ற வேகப்பந்து வீச்சாளர் லசித் மாலிங்க தனது மாமியார் மரணமடைந்ததையடுத்து அதில் கலந்து கொள்ள கொழும்பு வந்திருந்தார். பின்னர் லண்டன் திரும்பி அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் விளையாடினார்.

இப்போது அதுவல்ல பிரச்சினை. மாமியாருக்கு தானம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொள்ள அவர் மீண்டும் இலங்கை வந்துள்ளாராம்.

கிரிக்கெட் அணி இக்கட்டான நிலையில் இருக்கும் போது பயிற்சிகளை மேற்கொள்ளாமல் 24 மணி நேரத்துக்குள் இப்படி இவர் இலங்கைக்கும், லண்டனுக்குமாக மாறி மாறிச் சவாரி செய்வது சரிதானா என்று உள்ளுக்குள் புகைச்சல் ஏற்பட்டுள்ளதாக தகவல்.

அதை பேசப்போய் அதனால் சர்ச்சைகள் ஏற்பட்டால் இந்த நிலைமையில் நல்லதல்லவென அமைதி காத்து வருகிறதாம் ஸ்ரீ லங்கா கிரிக்கெட் நிர்வாகம்.

# புகைச்சல்

அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டாரவுக்கும் பிரதமர் ரணிலுக்கும் இடையேயான உறவுநிலை அவ்வளவு நன்றாக இல்லையாம். அண்மையில் இடம்பெற்ற அமைச்சரவை மறுசீரமைப்பில் மேலதிக அமைச்சுப் பொறுப்பான கிராமிய அபிவிருத்தி அமைச்சு - அமைச்சர் ரஞ்சித்துக்கு வழங்கப்பட்டது.

ஆனால் புதிதாக வெளிவந்த வர்த்தமானியில் - அந்த அமைச்சின் கீழ் வரும் பெரும்பாலான இலாகாக்கள் முந்தைய அமைச்சர் ஹரிசனின் கீழ் இருப்பதை அறிந்த அமைச்சர் ரஞ்சித் விசனமடைந்தார்.

உடனே பிரதமரின் செயலாளரை தொடர்பு கொண்ட அமைச்சர் ரஞ்சித் ,இப்படியான நிலையில் அமைச்சுப் பதவியை தொடர்வதா என்பதுபற்றி யோசிப்பதாக தெரிவித்துள்ளார்.

அதேபோல பிரதமர் ரணிலிடமும் தனது கடும் அதிருப்தியை ரஞ்சித் வெளிப்படுத்தியுள்ளாராம்.

# இந்த வாரம் உங்களுக்கு...

## மேடம்

மேச ராசியினருக்கு இந்த வாரத்தில் கிரக நிலை சற்று சிரமத்தைத் தரும். அஷ்டமத்து குருவால் நினைத்த காரியங்கள் தடைப்படும். நம்பியிருந்தவர்கள் கைவிடுவதாக உணர்வீர்கள். அடுத்தவர்களின் சூசகமான வார்த்தைகளைப் புரிந்து கொள்வதில் சிரமப்படுவீர்கள். மறைமுகமாகப் பேசுபவர்களைத் தவிர்த்து நேரடியாகப் பேசுபவர்களோடு மட்டும் நட்புறவு கொள்ளுங்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். பேசும் வார்த்தைகளில் உங்களையும் அறியாமல் தத்துவ சிந்தனைகள் அதிகமாக இடம்பிடிக்கும்.

## இடபம்

இந்த வாரத்தில் பொருளாதாரச் சிரமம் வெகுவாகக் குறையும். சிறப்பான பண வரவினால் கடன்சுமைகளைச் சுலபமாகச் சமாளிப்பீர்கள். குருபார்வை உங்களுக்கு சாதகமாக அமைந்துள்ளது. உட்கார்ந்த இடத்திலிருந்தே அடுத்தவர்களை வேலை வாங்கி உங்கள் காரியத்தை சாதித்துக் கொள்வீர்கள். திட்டமிட்டு செயற்படுவதால் வெற்றி கிடைப்பதில் தடையேதும் நேராது. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சகோதரர்களுக்குள் இருந்த மனஸ்தாபம் நீங்கும்.

## மிதுனம்

இந்த வாரத்தில் சாமர்த்தியமாகப் பேசி உங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்வீர்கள். நினைத்த காரியத்தைத் தள்ளிப்போடாமல் உடனுக்குடன் செய்து முடிப்பது நல்லது. குடும்பத்தில் சலசலப்புகள் உருவாகும். அடுத்தவர்களுக்கு சொல்லும் ஆலோசனை வெற்றி பெறும். தனாதிபதியின் சாதகமற்ற நிலை அதிக செலவைத் தரும். தங்கம், வெள்ளி நகைகளைப் பாதுகாப்பதில் அதிக எச்சரிக்கை தேவை. எதிர்பாராத பொருள் இழப்புக்கான வாய்ப்பு உண்டு.

## கடகம்

இந்த வாரத்தில் மறைமுகமாக ஒரு சில தொல்லைகளைச் சந்திக்க நேரிடும். உங்கள் வளர்ச்சி கண்டு பொறாமைப்படுவோர் உங்களுக்கு எதிராக செயற்படலாம். யார் மனதும் புண்படாமல் எல்லோரையும் அனுசரித்துச் செல்வதில் சிரமம் காண்பீர்கள். குடும்பத்தில் சலசலப்பும் கலகலப்பும் கலந்திருக்கும். ஆளுக்கொரு விருப்பத்தைச் சொல்லும் குடும்ப உறுப்பினர்களை திருப்திபடுத்துவதற்குள் போதும் என்றாகிவிடும். சரிசம பலன்களைக் காணும் வாரம் இது. கண்ணனை வழிபடுங்கள்.

## சிம்மம்

இந்த வாரத்தில் உங்கள் வாழ்வியல் தரம் உயரும். உண்மையான உழைப்பின் மூலம் எடுத்த பணியை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். வெற்றியைக் குறிக்கும் 11 ஆம் இடம் வலிமை பெற்றிருப்பதால் நினைத்த காரியங்கள் எளிதாக நடந்தேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வீட்டில் சுபநிகழ்வுகள் நடக்கும் வாய்ப்பு உண்டு. பண வரவு தொடர்வதால் சேமிப்பு உயர்வடையும். உறவினர்கள் இல்ல விசேஷங்களில் முக்கியப் பொறுப்புகளை சுமக்க நேரிடும்.

## கன்னி

இந்த வாரத்தில் உங்கள் மதியூகத்தை வெளிப்படுத்த சரியான வாய்ப்புக் கிட்டும். நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள பிரச்சினை ஒன்றை உங்கள் திறமையின் மூலம் தீர்த்து வைப்பீர்கள். நெருங்கிய உறவினர்களாகிய இரு குடும்பங்களுக்கு இடையே இருந்து வரும் பிரச்சினைக்குரிய விவகாரம் ஒன்று உங்கள் தலையீட்டால் சுபமான முடிவைக் காணும். இனிமையான சங்கீதத்தை ரசித்துக் கேட்பதில் மன நிம்மதி காண்பீர்கள். பெற்றோர் நலனில் அதிக அக்கறை தேவை.

## துலாம்

இந்த வாரத்தில் மனதில் தர்ம சிந்தனைகள் கூடும். உதவி என்று கேட்டு வருவோர்க்குத் தயங்காமல் துணை நிற்பீர்கள். தனக்கு மிஞ்சித்தான் தானமும் தர்மமும் என்பதை உணருங்கள். அடுத்தவர்களுக்காக செய்யும் காரியங்கள் எளிதில் வெற்றி அடைவதாகவும் தனக்கென சொந்த நலத்துக்காகச் செய்யும் பணிகள் தடைபடுவதாகவும் நினைப்பீர்கள். குடும்பத்தில் நிலவும் சலசலப்புகளைக் களைய முற்படுவீர்கள். கறாரான பேச்சுக்கள் உங்களைப் பற்றிய தவறான அபிப்ராயத்தைத் தோற்றுவிக்கலாம்.

## விருச்சிகம்

இந்த வாரத்தில் கடுமையான அலைச்சலைக் காண்பீர்கள். திட்டமிட்டிருந்த செயல்களில் தடைகள் உண்டாகும். எந்தவொரு காரியத்திலும் அவசரப்படாமல் நிதானமாகச் செயற்படுங்கள். பிரச்சினைகளை மதியூகத்துடன் அணுகினால் தீர்வு கிடைக்கும். குடும்பத்தில் சலசலப்புகிடையே கலகலப்பான சூழல் நிலவும். பண வரவு தொடரும். கடன் பிரச்சினைகள் தலையெடுக்கும். நகைச்சுவைக்காக சொல்லும் கருத்துக்கள் அடுத்தவர்கள் மனதை புண்படுத்தக் கூடும்.

## தனுசு

இந்த வாரத்தில் எளிதில் முடிய வேண்டிய காரியம் கூட சற்று இழுபறிக்குப் பின்னரே முடிவுக்கு வரும். எதிர்பார்ப்புக்கு மாறாக நடக்கும் சம்பவங்கள் மன வருத்தம் தரும். உங்கள் வார்த்தைகளுக்கு ஒரு சிலர் தவறான அர்த்தம் காண்பர். நேரத்தை உணர்ந்து கொண்டு அதிகம் பேசாது அமைதி காப்பது நல்லது. புதிய சொத்து வாங்கும் முயற்சியில் உள்ளோர் மூலப்பத்திரம் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

## மகரம்

இந்த வாரத்தில் கிரக நிலை சற்று சிரமத்தைத் தரும். ஏழரைச் சனியின் தாக்கத்தை முழுமையாக உணர்வீர்கள். மனதில் வீண்கலக்கம் தோன்றும். காரியத்தடையால் மனவருத்தம் கொள்வீர்கள். எதிர்பாராத செலவினால் கடன் பிரச்சினைகள் அதிகரிக்கும். பொறுப்புகளைச் செய்து முடிப்பதில் வேகம் காட்டுவீர்கள். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளை உணர்ந்து பூர்த்தி செய்வீர்கள். உண்மைக்குப் புறம்பாக பேசுபவர்களைக் கண்டு அவர்களோடு பழகுவதைத் தவிர்ப்பீர்கள்.

## கும்பம்

இந்த வாரத்தில் முழு உத்வேகத்துடன் செயற்படுவீர்கள். எடுத்த காரியத்தை செய்து முடிப்பதைக் கௌரவமாக எண்ணுவீர்கள். இக்கட்டான சூழலில் சரியான ஆலோசகர் இன்றி தவிக்க நேரலாம். அடுத்தவர்களுக்குச் சொல்லும் ஆலோசனைகள் வெற்றி பெறும். ஆயினும் சொந்த விஷயத்தில் நீங்கள் எடுக்கும் முடிவுகள் வெற்றி பெறாமல் தடைபடுவது கண்டு மனம் வருந்துவீர்கள். தனகாரகன் சுக்ரன் ஆட்சி பலம் பெற்று வசதி வாய்ப்புகளை உருவாக்கித் தருவார்.

## மீனம்

ஜென்ம ராசியின் மீது விழும் குரு பகவானின் பார்வை உங்களைச் சிறப்பாகச் செயற்பட வைக்கும். தடைபட்ட காரியங்கள் விரைவில் முடிவுக்கு வரும். மனதில் தர்ம சிந்தனைகள் கூடும். தான, தர்ம காரியங்களில் முன்னின்று செயற்படுவீர்கள். பிரதி பலன் எதிர்பாராது இயலாதவர்களுக்கு உதவி செய்வதில் மனநிம்மதி அடைவீர்கள். அதிகம் பேசாது அமைதி காப்பது நல்லது. வாய்ருசிக்கு அதிக முக்கியத்துவம் தரும் நீங்கள் உடல் ஆரோக்கியத்தைக் கருத்தில் கொள்ளுங்கள்.




கேள்வி: உன் கல்யாணத் திகதி உனக்கு ஞாபகமிருக்கா கைப்புள்ள?

**பி.இனியவன், உடுப்பிட்டி**

**பதில்** - *என் கல்யாணத் திகதியும் சுனாமி வந்த நாளையும் என்னால் எப்படி மறக்க முடியும்?*

கேள்வி: சினிமாவில் நடிக்கிறதுக்கும், டிவி. சீரியல்ல நடிக்கிறதுக்கும் என்ன வித்தியாசம் கைப்புள்ள?

**வி.மகேஸ்வரி, சுழிபுரம்**

**பதில்** - *சினிமான்னா தயாரிப்பாளரை மட்டும் தான் அழ வைக்க முடியும். சீரியல்னா பார்க்கிற எல்லாரையும் அழ வைக்க முடியும்.*

கேள்வி: கவிஞர்கள் பெண்ணை மீனுக்கு ஒப்பிடுகிறார்களே அது ஏன் கைப்புள்ள?

**கே.சுமன், கனகன்புளியடி**

**பதில்** - *கடல்ல இருக்கிற மீனும் காதலிக்கிற பொண்ணும் ஒன்றுதான் ப்ரோ. கெட்டியா புடிக் காட்டி ரெண்டுமே கை நழுவிப்போயிடும்.*

கேள்வி: லவ் பண்ணலாம்னு நினைக்கிறன். அழகான அம்சமான அதே நேரம் நல்ல வசதியான பிகரை எப்படி செலக்ட் பண்றது கைப்புள்ள?

**எஸ்.நிஷாந்தன், புத்தூர்**

**பதில்** - *எலி வால புடிச்சா நீ கிங்கு. புலி வாலைப் புடிச்சா உனக்கு சங்கு.*

கேள்வி: என் காதலுக்கு அவங்க வீட்டிலதான் எதிர்ப்பு. இதை என் காதலிக்கு ஒரு கவிதையில புரிய வைக்கலாம் என்று நினைக்கிறன். ஹெல்ப் பண்ணுப்பா.

**ஈ.ஈஸ்வரன், சங்கானை**

**பதில்** - *நிலவையும் விண்ணையும் பிரிப்பது அமா வாசை. உன்னையும் என்னையும் பிரிப்பது அம்மா ஆசை.*

கேள்வி: நடந்து முடிந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தல் பற்றி உனது கருத்து என்ன கைப்புள்ள?

**வி.சரவணன், பளை**

**பதில்** - *தாமரை மலரும் அளவுக்கு தமிழ் மண் இன்னும் சேறு ஆகவில்லை.*

கேள்வி: பெண்களுக்கு மாமியார் கொடுமை மாதிரி ஆண் களுக்கு?

**எல்.ரூபன், சுன்னாகம்**

**பதில்** - *ஆண்டவன் ஆண்களுக்கு மாமியார் கொடுமையைக் கொடுப்பதில்லை. பதிலாக மனே ஜரைக் கொடுத்து விடுகிறான்.*

கேள்வி: தலையில சுத்தியல் விழுந்து மூர்ச்சையான நேச மணிக்காக நான் ரொம்பவே ப்ரே பண்ணினேன். நீயும் பிரார்த்தனை பண்ணினாயா?

**கே.நேசமணி, வறணி**

**பதில்** - *உன்னை அடிச்சும் பார்த்தாச்சு. அவுத்தும் பாத்தாச்சு. உன்னை என்னதான்டா பண்றது? என்று கட்டதுரையே பார்த்து கலங்கிய ஆண் சிங்கம், வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் நிரந்தரத் தலைவர் கைப்புள்ள. சண்டை என வந்ததும் சங்கத்து உறுப்பினர்களே அத்துவிட்டு ஓட ஒத்தையில நின்று காலிலேயே அடிவாங்கிய கரிகாலன். அவரின் கால் குணமாக பிரார்த்தியுங்கள். ராங் நம்பரைப் போட்டு அவரின் உதவியாளர்கள் ராங்காகப் பேச, அடி வாங்கியது வட்டச்செயலாளர் வண்டு முருகன். அவரை வயிற்றிலேயே மிதித்து "நண்டு" முருகன் ஆக்கினர். விசம் குடித்த சூனா பானா, பொலிஸிடம் சிக்கிய அலார்ட் அலார்ட் ஆறுமுகம், என்கவுண்டர் ஏகாம்பரம் எல்லாருக்கும் ப்ரே பண்ணுப்பா.*

## சொல்லுங்கோ டொக்டர்




# பித்தவெடிப்புக்கு தீர்வு என்ன?

கேள்வி: எனக்கு 32 வயது. பனி மற்றும் மழைக்காலங்களில் பித்த வெடிப்பு வந்துவிடுகிறது. இதற்கு என்ன தீர்வு?

**கே. நிலானி நல்லூர்**


பதில்:- பித்த வெடிப்புப் பிரச்சினை என்கிறீர்கள். பாதங்களில் அதிலும் முக்கியமாக குதிக்காலிலும் அதன் ஓரங்களிலும் ஏற்படும் தோல் வெடிப்புகளையே பித்த வெடிப்பு என்கிறோம். உண்மையில் இந்த வெடிப்புக்கும் பித்தத்துக்கும் (bile) எந்தவித தொடர்பும் கிடையாது. எனவே பித்த வெடிப்பு என்பது தவறான சொல்லாகும். குதிக்கால் வெடிப்பு (Heel fissures) என்பதுதான் சரியான பதமாகும். ஆனால் எல்லோருமே பித்த வெடிப்பு என்றே பேச்சுவழக்கில் சொல்லி வருகிறோம். பித்த வெடிப்புகள் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக வரும் என்றில்லை. சிலருக்கு குதிக்காலோர சருமம் சொரசொரப்பாக இருக்கும். அதில் வெடிப்புகள் போன்ற அடையாளங்கள் மட்டுமே இருக்கும். பலருக்கு வெளிப்படையான வெடிப்புகள் இருக்கும். ஒரு கத்தியால் வெட்டியது போன்ற ஆழமான வெடிப்புகள் வேறு சிலருக்கு ஏற்படுவதுண்டு. இது பெரும்பாலும் ஒரு அழகியல் பிரச்சினை தான். பார்க்கும்போது கால்கள் அசிங்கமாக இருப்பதை மட்டுமே பாதிப்பாகச் சொல்லலாம். மாறாக ஆழமான வெடிப்புகள் சற்று வேதனையை அளிப்பதுடன் நடப்பதற்கு சிரமத்தையும் தரலாம். மிக அரிதாக அதில் கிருமித்தொற்று ஏற்பட்டு வேதனை அளிப்பதுடன் புண் போலவும் தோன்றலாம்.

### இது ஏன் வருகிறது?

முக்கிய காரணம் சரும வரட்சி தான். மழை மற்றும் பனி காலங்களில் சூழலின் ஈரப்பதத்தன்மை மாற்றங்களால் கால் கைகளிலுள்ள சருமங்கள் வரண்டு சொரப்பாக இருப்பதை பார்த்திருப்பீர்கள். பழைய காலங்களில் இதைத் தடுக்க இலுப் பெண்ணை பூசுவார்கள். இப்பொழுது பலவகையான ஈரலிப்பை ஏற்படுத்தும் கிறீம் வகைகளை (Moisturizing cream) பூசுகிறார்கள். இதைப் போன்றதுதான் குதிக்காலில் ஏற்படும் பித்த வெடிப்பும். மழை மற்றும் பனி காலங்களில் ஏற்படும் சரும வரட்சியால்தான் ஏற்படுகிறது. சருமம் வரட்சியாக இருக்கும்போது வெடிப்புகள் தோன்றுகின்றன. அதீத எடை மற்றும் நீண்ட நேரம் நிற்பதால் அல்லது நடப்பதால் குதிக்கால் சருமத்துக்கு ஏற்படுகிற அழுத்தமும் காரணம் என்று சொல்லப்படுகிறது. வெறும் காலுடன் நடப்பது மற்றும் பாதத்தை மூடாது அப்பகுதியை மறைக்காத செருப்பை மட்டும் அணிவதும் இதை மோசமாக்கும் எனகி[illegible]ர்கள்.

### எவ்வா[illegible] தடுப்பது?

இதற்கு என்ன தீர்வு என்பது உங்கள் கேள்வி. இப்பொழுது உள்ளதைக் குணப்படுத்த வேண்டும். மீண்டும் வராமல் தடுக்கவும் வேண்டும். முக்கிய விடயம் குதிக்கால் சருமத்தை வரட்சி இன்றி குளிர்மையாக வைத்திருப்பதே ஆகும். குளிர்மையாக வைத்திருப்பது என்பது தண்ணீருக்குள் காலை வைப்பது என அர்த்தப்படாது. ஈரப்பதமளிக்கும் (Moisturizing) வகைக் கிறீம்களைப் பூச வேண்டும். அவ்வாறு பூசும்போது வெடிப்புகளின் இடைவெளிகளுக்குள் அவை புகுமாறு சற்று அழுத்திப் பூசுவது நல்லது. லோசன்களை பூசுவதை விட கிறீம் அல்லது ஒயின்மென்டாக உபயோகிப்பது கூடிய பலனைத் தரும். காலையில் எழுந்தவுடனேயே பூசிவிடுங்கள். இரவு படுக்கப் போகும் போதும் பூசுங்கள். தேவை ஏற்பட்டால் மதியமும் பூசலாம். சாதாரண குளிர்மையூட்டும் கிறீம்களை விட குதிக்கால் வெடிப்பிற்கு என விசேடமாக தயாரிக்கப்பட்ட கிறீம்கள் உள்ளன. அவற்றில் யூறியா, சலிசிலிக் அமிலம் போன்றவையும் கலந்திருக்கும். இவை சருமத்தைக் குளிர்மையாகவைத்திருப்பதுடன் படைபோல ஒட்டிக்கொண்டிருக்கும் இறந்த சருமப் படிவுகளை அகற்றி சொரசொரப்பின்றி மிருதுவாக்க உதவும். படிகக் கல் கொண்டு மென்மையாகத் தேய்ப்பது தடித்த சொரசொரப்பான குதிக்கால் சருமத்தை மிருதுவாக்க உதவும். அப்படித் தேய்க்கும் போது தோல் சருமம் ஈரலிப்பாக இருக்க வேண்டும். குளித்தபின் அல்லது கால்களைக் கழுவிய பின்னர் தேய்க்கலாம். ஆயினும் நீரிழிவு நோயுள்ளவர்கள் படிகக் கல்லால் தேய்ப்பது நல்லதல்ல. பிளேட், கத்தி போன்றவற்றால் சுரண்டுவது எவருக்கும் உகந்ததல்ல.



வெறும் காலுடன் நடக்காதீர்கள். எப்போதும் பாதணி அணிந்திருங்கள். செருப்பு, சண்டல்ஸ் போன்ற திறந்த பாதணிகள் நல்லதல்ல. குதிக்காலை மூடும்படியான சப்பாத்து போன்ற பாதணிகளே உகந்தது. காலுறை (சொக்ஸ்) அணிபவராயின் அது காற்றோட்டமுள்ளதாகவும் ஈரலிப்பைப் பேணுவதுமான பருத்தியிலான காலுறைகளான இருக்க வேண்டும். எடை அதிகமானால் அதைக் குறைப்பது அவசியம். அத்துடன் நீண்ட நேரம் ஓரிடத்தில் நிற்பதையும் தவிர்க்க வேண்டும். நீரிழிவு இருந்தால் குருதிப் பரிசோதனைகள் செய்து அது கட்டுப்பாட்டில் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். எக்ஸிமா, சொரசிஸ் போன்ற சரும நோய்கள் இருந்தால் அதற்கான சிகிச்சைகளைச் சரியாகச் செய்ய வேண்டும். நீண்ட நேரம் கால்கள் தண்ணீருக்குள் ஊறுவதைத் தவிர்க்க வேண்டும். கால்களைக் கழுவினால் ஈரத்தை உடனடியாக துணியால் ஒற்றி அகற்றவும். வாசனைகள் மற்றும் மருந்துகள் கலந்த சவர்க்காரங்களை உபயோகிக்க வேண்டாம். பேபி சோப் அல்லது ஈரப்பதமளிக்கும்சோப் (moisturizing soap) போன்றவையே நல்லது.

**மருத்துவ ரீதியாக உங்களுக்கு எழும் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். அவை தொடர்பில் உரிய மருத்துவர்களின் பதில்கள் எதிரொலியில் பிரசுரமாகும். உங்கள் சுய விபரம் இரகசியமாகப் பேணப்பட வேண்டுமாயின் அதனை மறக்காமல் குறிப்பிடுங்கள். நோயற்ற வாழ்வுக்கு கேளுங்கள். பதிலோடு பயனும் பெறுங்கள்.**



# அழகியல் அழகாக்கிய வாழ்க்கை!

கண்களுக்குப் பூசும் மை தொடங்கி கால் விரல் நகங்களுக்குத் தீட்டும் வர்ணம் வரை அழகு சாதனைப் பொருட்களை உபயோகிக்காத பெண்கள் உலகில் எங்காவது இருக்கிறார்களா? படித்தவர்கள், பாமரர்கள், பள்ளி மாணவியர், சிறுமியர் அனைவருமே அழகுக்கு அடிமைகள் தான். அதனால்தான் அழகு சாதனப் பொருட்களுக்கு எப்பவுமே மவுசு. ஆனாலும், அந்தப் பொருட்களில் எவ்வளவு இரசாயனப் பொருட்கள் கலந்துள்ளன, அவை எமது உடலுக்கு, சருமத்துக்கு எத்தனை பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடியன என்பன பற்றி யாரும் பெரிதாக அறிந்து கொள்வதில்லை. தெரிந்து கொள்ள முயற்சிப்பதுமில்லை.

சுமார் நாற்பத்தெட்டு வருடங்களுக்கு முன்னால் நடந்த சம்பவம் இது. அப்போது லண்டனில் பிரபலமாகிக் கொண்டிருந்த மொடலிங் செய்யும் பெண் ஒருவர் கண் இமைகளுக்குக் கூடுதல் அழகையும், அடர்த்தியையும் தர உதவும் 'மஸ்காரா' என்கிற சாதனத்தைத் தன் கண் இமைகளில் தடவியிருக்கிறார். கெமிக்கல் சேர்க்கப்பட்ட அந்த மஸ்காரா அவரது கண்களைப் பதம் பார்த்துவிட அவரது பார்வையே பறிபோய்விட்டது. பார்வை போன பின் வாழ்வு எதற்கு என்று எண்ணிய அந்தப் பெண் மொடல் யாரும் எதிர்பார்க்காத விதமாக தற்கொலைசெய்துகொண்டார்.

செய்தித்தாளில் இதைப் படித்த ஷானாஸ் ஹூசைன் அதிர்ச்சியில் உறைந்துபோனாள். என்ன கொடுமை இது. பணத்தையும் கொடுத்து பாதிப்பை வாங்கி உயிரையும் விட வேண்டியதாயிற்றே. கெமிக்கல் இல்லாத இயற்கையில் கிடைக்கும் ஆயுர்வேத மூலிகைகளைக் கொண்டு அழகு சாதனப் பொருட்களை நான் ஏன் தயாரிக்கக் கூடாது? என்று யோசித்தாள். கணவரிடம் சொல்லிப் பார்த்தாள். ஆணாதிக்கத்தின் ஒட்டுமொத்த உருவமான அவரிடமிருந்து ஏச்சும், பேச்சும்தான் பதிலாக வந்து வியாபாரம் பண்ணக் கூடாது" என்று சொலிவிட்டார்.

ஆனாலும் தன் எண்ணத்தை ஷானாஸ் விடுவதாயில்லை. தன் அப்பாவிடம் 35,000 ரூபா கடனாக வாங்கி வீட்டின் வராண்டாவை ஒரு பியூட்டி கிளினிக்காக மாற்றி ஆயுர்வேத அழகு சாதனைப் பொருட்களைத் தயாரிக்கத்தொடங்கினாள். இன்றைக்கு உலகம் முழுவதும் சுமார் 400 இடங்களில் பியூட்டி கிளினிக்குள் வைத்து நடத்திக்கொண்டு ஓர் அழகு சாம்ராஜ்யத்தையே




ஆளும் இந்த 68 வயதுப் பெண்ணின் பிஸினஸ் மதிப்பு இன்று இலங்கைப் பணத்தில் 260 கோடிக்கும் மேல்.

செல்வாக்குமிக்க இஸ்லாமியக் குடும்பத்தில் பிறந்தவள் ஷானாஸ் ஹூசைன். தந்தை உத்தரப் பிரதேஸ் மாகாணத்தில் அலஹபாத் நகரில் உயர் நீதிமன்ற நீதிபதியாக இருந்த நசீர் உல்லாபெக். தாயார் சயீதா பேகம். ஷானாஸ் அலஹாபாத்தில் உள்ள ருயீன்ஸ் மேரி கான்வென்டில் கல்வி கற்றாள். கல்வி மேல் காதலோடிருந்தவளுக்கு பதினான்கு வயதிலேயே திருணம் செய்து வைத்து விட்டார்கள். பதினைந்து வயதில் குழந்தையும் பிறந்துவிட்டது. உலகமே என்னவென்று தெரியாத வயதில் குடும்பம் பிள்ளை குட்டி என்றானது. ஆனாலும் தொடர்ந்து படிக்க வேண்டுமென்ற ஆசை மட்டும் மனதுக்குள் கனன்று கொண்டேயிருந்தது. கொஞ்சம் வசதியான குடும்பத்தில் பிறந்ததால் என்னவோ தன்னை அழகாக வைத்துக்கொள்வதில் ரொம்பவே மெனக்கெடுவாள். அதனால் குழந்தை பெற்றுக்கொண்ட பின்னர் பியூட்டி சம்பந்தமான புத்தகங்களை நிறையவே படிக்க ஆரம்பித்தாள்.

அப்போதெல்லாம் வெளிநாடுகளில்தான் பியூட்டி கோர்ஸ் சம்பந்தப்பட்ட படிப்புகள் பிரபலமாக இருந்தன. தன்தொழில் காரணமாக ஷானாயின் கணவர் லண்டன், பரீஸ், நியூயோர்க், ஜேர்மனி போன்ற உலகத்தின் பல இடங்களுக்கும் செல்ல ஆரம்பிக்கவே இதுதான் நல்ல வாய்ப்பு என்று நினைத்தவர், அவருடன் கூடப் பயணம் செய்யத் தொடங்கினாள். அங்கு சென்றவள் சும்மா பொழுதைக் கழிக்காமல் அப்போது புழக்கத்தில் இருந்த நிறைய பியூட்டி கோர்ஸ்களைப் படித்துத் தன் ஆசையைத் தீர்த்துக் கொண்டாள். அப்போதுதான் அவள் கணவருக்கு ஈரான் நாட்டில் உள்ள டெஹ்ரான் நகரத்தில் பணிபுரிய வேண்டிய சூழல் உருவானது. அவரோடு அங்கு சென்ற பிறகும் அவளின் படிக்கும் ஆசை தணியசில்லை. காஸ்மெட்டாலஜி மற்றும் ட்ரைக்காலஜி சம்பந்தமாக இரண்டு வருட உயர் படிப்பைப் படிக்க ஆசைப்பட்டு கணவரிடம் அனுமதி கேட்டாள். ஆனால் அதைப் படிக்க கணவரிடமிருந்து இந்த முறை பெரிதாகச் 'சர்போர்ட்' கிடைக்கவில்லை. இதெல்லாம் வெறும் கண்டச் செலவு என்று கூறிவிட்டார்.

ஆனாலும் அவளது ஆசை அவளை விடவில்லை. நீங்கள் தராவிட்டால் என்ன நானே பணத்தைத் தேடிப் படிக்கிறேன் என்று கூறியவள், முன்னப் பின்ன வேலைக்குப் போகாதவள், அங்கு ஒரு தொழில் தேடத்தொடங்கினாள். அவள் சற்றும் எதிர்பாராத விதமாக ஈரானில் பிரபலமாக இருந்த பத்திரிகை ஒன்றில் அழகுக் ' குறிப்பு எழுதும் வாய்ப்புக் கிடைத்தது. இது போதாதா அவளுக்கு, பிடித்தமான அந்த வேலையைச் செய்து கொண்டு கிடைத்த வருமானத்தில் தான் விரும்பிய படிப்பையும் நிறைவு செய்தாள்.

(தொடரும்)

**கவிஞர் பிரேம்ராஜ்,**
**கொழும்பு**




# இலினா எனும் மேதமை!

பெண்களின் உடல் மீதான வன்முறைகள், அடக்குமுறைகள் காலம் காலமாகத் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனாலும் அவற்றை எல்லாம் அடித்து துவம்சம் செய்து விட்டு சாதனை படைத்துக்கொண்டே தான் பெண்கள் இருக்கின்றார்கள். பெண் என்பவள் மிகப்பெரிய சக்தி. பல அசாத்தியங்களைச் சாத்தியமாக்கிக் கொண்டிருப்பவள். பெண்ணாக வாழ்வதே பெருமிதம் தான். இத்தகைய பெண்கள் தங்களின் உழைப்பு, விடாமுயற்சி, சாதனை மற்றும் போராட்டங்களால் உலகெங்கும் உள்ள பலருக்கும் ஆதர்ச வழிகாட்டியாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவ்வாறு பல் துறைகளிலும் 'முதல் பெண்'களாக சாதனை படைத்தவர்கள் பற்றிய தொகுப்பு இனி ஒவ்வொரு வாரமும் எதிரொலியை அலங்கரிக்கப்போகின்றது.

மனித மனத்தின் அனைத்து சூட்சுமங்களையும் அறிந்து தேர்ந்த மாபெரும் சிந்தனாவாதி இலினா. இன்றுவரை அவரே மிகப்பெரும் தத்துவஞானியாகக் கருதப்படுகின்றார். உலகிலே முனைவர் பட்டம் பெற்ற முதல் பெண் இலியானா இத்தாலியில் உள்ள வெனிஸ் நகரில் 1646 இல் பிறந்தார். ஏழு வயதாக இருந்தபோதே அவருள் இருந்த மேதமையை அவருடைய பெற்றோர் கண்டுகொண்டனர். கிரேக்கமும் இலத்தீனும் அவருக்குப் போதிக்கப்பட்டன. தனது சுயமுனைப்பால் ஹிப்ரூ, ஸ்பானிஷ், பிரெஞ், அரபி ஆகிய மொழிகளைக் கற்றுத்தேர்ந்தார். வயலின் வாசிப்பதிலும் ஈடுபாடு உடையவராக இருந்தார்.

கணிதம், வானியல் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டவராக இருந்த போதும் அவருடைய ஈர்ப்பு தத்துவவியல், இறையியல் மீதே இருந்தது. இறையியலில் முனைவர் பட்டம் பெற முயன்றபோது தேவாலயங்களின் எதிர்ப்பால் அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. அதனால், தத்துவவியலில் முனைவர் பட்டம் படிக்க அனுமதி பெற்றார். 1678 இல் முனைவர் பட்டத்துக்கான வாய்மொழித் தேர்வின்போது, அவரைக் கேள்வி கேட்பதற்காக, இத்தாலியின் புகழ் பெற்ற பல்கலைக்கழகங்களின் ஆசிரியர்களும் மாணவர்களும் ஒருங்கே கூடியமை இலினாவின் மேதமைக்கு சான்று . இலினா 32 வயதில் முனைவர் பட்டம் பெற்றுப் பெண்களுக்கு வழிகாட்டினார்.

## பட்டுப் போன்ற பாதங்கள் வேண்டுமா?

வெடிப்பு நிறைந்த பாதம், பழுப்பேறிய நகங்கள், செருப்பு அணிவதால் உண்டான கருமை போன்ற பிரச்சனைகளைத் தீர்த்துப் பட்டு போன்ற மிருதுவான பாதங்களைப் பெறுவதற்கான இயற்கை முறையை அறிந்து கொள்ளலாம்.

- ❒ பாதம் வறண்டிருந்தால் எலுமிச்சைச்சாறைக் கலந்து உறங்கச் செல்லும்போது நக விரல்கள், பாதம் முழுவதிலும் தடவிக் காய்ந்தவுடன் உறங்கவும்.
- ❒ பாலில் தோய்த்தெடுத்த பஞ்சு கொண்டு நகங்களில் தேய்த்து வந்தால் நகம் உடையாமலும் மினுமினுப்பாகவும் இருக்கும்.
- ❒ குளிப்பதற்கு முன் கஸ்தூரி மஞ்சளுடன் வெண்ணெயைக் கலந்து நன்றாகத் தேய்த்து வந்தால் பாதங்கள் மிருதுவாகிவிடும்.
- ❒ வெதுவெதுப்பான நீர் நிறைந்த பெரிய பாத்திரத்தில் ஷாம்பூ, உப்பு மற்றும் ஒரு எலுமிச்சம்பழத்தின் சாறை விட்டு அந்த தண்ணீரில் சில நிமிடங்கள் பாதங்களை அமிழ்த்தி வைத்துக் கல்லால் தேய்க்க வேண்டும். பிறகு குளிர்ந்த நீரால் கழுவி நன்றாகத் துடைத்து விடவும்.
- ❒ சிறிது கற்றாழை ஜெல்லுடன் கடலை மாவைக் கலந்து மிக்ஸியில் அரைத்து 2 நாட்களுக்கு ஒருமுறை உள்ளங்கால், பாதம், கணுக்கால் முழுவதும் தேய்த்துக் கழுவக் காயத்தால் ஏற்பட்ட தழும்புகள் கருமை மறைந்து சருமம் இயல்பான நிறத்துக்கு மாறும்.
- ❒ மாதம் இருமுறை வெள்ளை எள்ளை அரைத்துப் பாதம், நகங்கள் ஆகியவற்றில் போட்டுக் கழுவவும். இது நகத்தின் இடுக்குகளில் படிந்துள்ள மண் அழுக்குகளை அகற்றி நல்ல பளபளப்பைக் கொடுப்பதுடன் வெடிப்பு வராமலும் பாதுகாக்கும்.

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீடு வந்து துயில்கொண்ட பின்னர் நண்பர்களைப் பார்க்கச் செல்லும்போது, அவர்கள் இவரை ஆச்சரியமாகப் பார்த்து எப்படி வந்தாய் என்று கேட்கிறார்கள்.

அப்போது தான் யாழையும் தெற்கையும் இணைக்கும் ஏ-9 பாதை மூடப்பட்டது தெரிய வருகிறது. அது பிரச்சினை இல்லை, இரண்டு நாளில் திறந்து விடுவார்கள் என்று நம்புகிறார்கள். ஆனால், மாலை ஆறு மணி போல யாழ் கோட்டை பகுதியிலிருந்து பூத்திரி போல தீப்பிளம்புகள் கிளம்பிச் செல்கின்றன. மல்லரி பரல்கள் பூநகரியை நோக்கிப் பாய்கிறன. அன்று தான் நான்காவது ஈழப் போர் ஆரம்பித்த ஆவணி11 இரண்டாயிரத்தியாறு. அன்று பூட்டிய பாதை 2009 இன் பின்னரே மீண்டும் திறந்தது.

மண் வாசம் என்று நினைத்தாலே அதன் வாசம் பலருக்கு மழை பெய்த பின்னர் எழும் நுகர்விலிருந்து வரலாம். ஆனால், ஈழத் தமிழர்கள் பலருக்கு பங்கர் நினைவுகளே உடனே வரும். விமானக் குண்டு வீச்சுக்கு பயந்து பங்கருக்குள் நெருக்கியடித்து பதுங்கியிருக்கும் போது அந்த வாசத்தை நுகர்ந்து இருப்பார்கள். உமாஜியின் மண் வாசம் அவ்வாறே ஆரம்பிக்கிறது. வெவ்வேறு வகையான விமானங்கள் குண்டு வீச ஆரம்பித்த காலம். சில விமானங்கள் மிகத் தாழ்வாகப் பறந்து வந்து பாரிய இரைச்சலுடன் குண்டு வீசிவிட்டு தப்பிச் செல்கின்றன. புலிகளின் ராடர்களில் இருந்து தப்பிக்கவே அந்த உத்தி என்று அறிகிறார்கள்.

ஆரம்பத்தில் சகடை என்ற பழைய சரக்கு விமானத்திலிருந்து மலத்தை பரலுக்கு டன் கணக்காக அடைத்து வெடிபொருட்களுடன் மக்களின் மீது வீசுகிறார்கள். யாழ்ப்பாணமே கொடிய நாற்றத்தில் பல நாட்கள் மிதந்தது. பலருக்கு தொற்று வியாதிகள் உட்பட பல தோல் வியாதிகளும் வந்தன. ஜேகேயும் தன் 'கொல்லைப்புறத்து காதலிகள்' புத்தகத்தில் இதனை ஆவணப்படுத்தி அதன் வடுக்களை குறிப்பிட்டு இருப்பார். இவையெல்லாம் இன்று ஓர் வேடிக்கையாக மாறி விட்டிருந்தாலும் கொடுத்த இழப்புகள் துயருக்குள் புதைக்கத்தக்கவை. யுத்தம் என்ற பெயரில் நகரம் முழுவதும் விமானத்தில் மலம் வீசிய அவமானத்தை அந்தத் தலைமுறை ஒருபோதும் மறக்காது. மறக்கவும் முடியாது.

பங்கர் வெட்டுவது கூட பெரிய சடங்காகவே இருக்கிறது. பங்கர் வெட்ட வேண்டுமா இல்லையா, இப்போது எங்கே சண்டை, விமானம் இங்கே வருமா என்று கலந்து ஆலோசித்து இறுதியில் தீர்வு எட்டப்படுகிறது. அதற்காக சில சிறப்பு திறனாய்வாளர்கள் இருக்கிறார்கள். அவர்களே எந்த வடிவத்தில் பங்கர் வெட்ட வேண்டும் எத்தகைய வாசல் வைக்க வேண்டும் என்றெல்லாம் குடும்ப உறுப்பினர்களுக்கு ஏற்ற வகையில் முடிவு எடுக்கிறார்கள். பின்னர் பங்கர் வெட்டப்படுவது திருவிழாவாகவே நிகழ்கிறது. சில தன்னார்வ இளைஞர்கள் கலந்து கொள்வார்கள். அவர்களுக்கு தேநீர் பலகாரம் வழங்குதல், கிண்டல், சிரிப்பு என்று அந்தச் சடங்கு இனிதே நிறைவேறுகிறது. ஜாம் போர்தலில் விளக்குச் செய்து பாதுகாப்புக்கு உள்ளே வைக்கிறார்கள்.

பெரியவர்களுக்கு எப்படியோ, இப்படியெல்லாம் அளவெடுத்து கட்டப்பட்ட பங்கரில் எப்போது சென்று தங்க நேரும் என்ற கவலை உமாஜி வயதிலுள்ள சிறுவர்களுக்கு வருகிறது. அதற்கு ரகசியமாக ஏங்கவும் செய்கிறார்கள். இறுதியில் அந்தத் 'திரில்' அனுபவம் கிடைக்கிறது. இவையெல்லாம் எளிமையான நகைச்சுவை நடையால் சொல்லப்பட்டு இருந்தாலும் இதற்குப் பின் இருக்கும் நுட்பமான அவதானங்களும் சொல்முறையும் சிறந்த புனைவு எழுத்தாளனுக்கு இருக்க வேண்டிய ஆற்றலை ஒப்புவிக்கிறது. எத்தனை தாக்குதல்கள், உயிரிழப்புகள் ஏற்பட்டாலும் அவையெல்லாம் சாதரண பொதுசனங்களுக்கு ஏற்பட்ட இழப்பாகவே இருகின்றன. அரசாங்க வானொலிகள் தாக்குதல்களில் இறந்தவர்களை பொத்தம் பொதுவாக புலிப் பயங்கரவாதிகள் என்று தங்கள் தரப்பில் சொல்கின்றன.

ஆனால், அதற்குள்ளிருந்தவன் என்கிற முறையில் உமாஜி சொல்கிறார், விமானக் குண்டு வீச்சில்லிருந்து சேதாரம் துளியுமில்லாமல் தப்ப ஒரேயொரு முறைதான் உள்ளது, 'அருகிலுள்ள புலிகளின் காவலரண்களுக்கு சென்று விடுவதுதான். அதைத் தவிர மிச்ச எல்லா இடங்களிலும் இராணுவம் குண்டு போடுவார்கள்.' குறிபார்த்து அடிப்பதில் இராணுவத்தினர் அவ்வளவு கெட்டிக்காரர்கள் என்பது தான் அது. வேடிக்கையாக இருந்தாலும் கசப்பான உண்மை தான். விமானத் தாக்குதலில் உயிரிழந்த புலிகள் என்று சொல்வதற்கு அநேகமாக பலர் இருப்பதில்லை. குத்துமதிப்பான தாக்குதல்களால் உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் பொதுசனம் தான். இன்று அவயங்கள் இன்றி இருப்பவர்களைச் சந்திக்கும்போது அவர்கள் சொல்லும் பதில் விமானத் தாக்குதல் என்பது.

தொலைக்காட்சி என்றாலே வடபகுதி யுவன் யுவதிகளுக்கு உடனே நினைவுக்கு வருவது தூர்தர்ஷன். தூர்தஷன் பார்த்து வளர்ந்த தலைமுறை நாம். தமிழ்நாட்டில் இருப்பவர்களுக்கு எது எப்படியோ, நமக்கு தூர்தர்ஷன் பெரிய வரமாக இருந்தது. காரணம் அதுவொன்றே தமிழில் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்த தொலைக்காட்சியாக இருந்தது. அடிக்கடி ஹிந்தி மொழிக்கு மாறி இம்சையும் கொடுக்கும். இருந்த போதிலும் சக்திமான் போன்ற தொடர்கள் மிகப் பிரபலமாக இருந்தன. கிடைக்கும் சொற்ப கால மின்சார நேரத்தில் இவற்றைப் பார்ப்பதே பெரிய இலட்சியம். உமாஜிக்கு மகாபாரதம் பார்ப்பதிலிருந்து இந்த நினைவுகள் ஆரம்பிக்கின்றன.

அப்போதிருந்த இந்திய இராணுவமும் இவர்களுடன் சேர்ந்து மகாபாரதம் பார்த்துவிட்டு சப்பாத்தியும் சமைத்து சாப்பிட்டு விட்டுச் சென்ற அனுபவத்திலிருந்து நீள்கிறத்து ஞாபக அடுக்கு. யுத்த காலத்தில் ஜெனரேட்டர் வைத்து மின்சாரம் பெற்று தொலைக்காட்சியை இயக்கி திரைப்படங்கள் பார்ப்பது அலாதியான அனுபவம். ஜெனரேட்டர் சத்தம் வெளியே கேட்டு விடக்கூடாது என்று கிடங்குவெட்டி அதற்குள் புதைத்து இயக்கி, படம் பார்த்தவர்களும் இருக்கிறார்கள். சைக்கிளை தலைகீழாகக் கிடத்திவிட்டு படலைச்

# 'காக்கா கொத்திய காயம்': மெல்லத் திறந்த டயரி

சுற்றி சைக்கிள் டைனமோவை இயக்கி வானொலிப் பெட்டியில் பாடல்கள் கேட்பது மிகப்பெரிய உத்தியாக இருந்தது.

ஜேகே தன் புத்தகத்தில் இவற்றையும் எழுதியிருப்பார். கொடிகாமத்தில் இடம் பெயர்ந்திருந்த போது, கூட இருந்த அண்ணாமார்கள் இவ்வாறான அதிரடிக் கண்டுபிடிப்புகள் நிகழ்த்தி, தங்கள் பதின்ம வயதைக் கொண்டாடிக் கொண்டிருந்ததை இன்று மீட்டிப் பார்க்க முடிகிறது. யுத்த அவலத்துக்குள் இருந்த சின்னச் சின்ன மீட்புகள் இவ்வாறே இருந்திருக்கின்றன. இன்று தொலைக்காட்சி பார்ப்பதின் மீதான ஆர்வம் குன்றி இணையத்தில் தேவையானதை தேவையான பொழுது பார்த்துவிட முடிகிறது. இருந்தும், அன்றைய நாட்கள் கசப்பின் மீதான கரும்புச்சாற்றாக இனிக்கிறது உமாஜிக்கு. ஓர் தலைமுறையின் ஞாபகச் சித்திரங்கள் அவை.

ஊரடங்குக்குள் சிக்கி அவதிப்படாதவர்கள் வடக்குப் பகுதி மக்கள் என்று சொல்லிக் கொள்ளவே முடியாது. எப்படியும் ஊரடங்குக்குள் சிக்குண்டே இருக்க வேண்டும் என்பது விதிக்கபட்ட வரம். ஒவ்வொரு காலப்பகுதியிலும் ஒவ்வொரு வகையான ஊரடங்கு அனுபவங்கள் வாய்க்கும். ஆனால், இரண்டாயிரத்தியாறாமாண்டு ஒக்டோபர் மாதத்தின் பின்னர் ஏற்பட்ட ஊரடங்கு என்பது மிக வித்தியாசமானது. விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டவர்கள் பலர் தேடித் தேடி சுட்டுக் கொல்லப்பட்டார்கள். மாவீரர் தினத்துக்கு கொடி கட்டியவர்கள், நோட்டீஸ் ஒட்டியவர்கள், வாகனம் ஓட்டியவர்கள் என்று பலர் கொல்லப்பட்டார்கள். புதிதாக பிஸ்டல் கலாச்சாரம் முளைத்திருந்தது. மோட்டார் சைக்கிளில் நிதானமாக வந்து மண்டை அருகிலேயே துப்பாக்கியை வைத்து நிதானமாகச் சுட்டார்கள். சுட்டவர்களும் அருகில் நிற்பவர்களிடம் "தம்பி இங்கால நிக்காத பேசாமல் போ"என்று தமிழிலே பேசினார்கள். தினமும் உடல்கள் வீதியெங்கும் நிறைந்திருந்தன.

வெள்ளை வான்கள் நடு இரவில் ஊரடங்கு நேரம் வீடுகளுக்குள் புகுந்து இளைஞர்களைக் கடத்தின. மறு நாள் கழுத்துடன் துண்டிக்கப்பட்டு வளவுகளுக்குள் சடலமாக துண்டு துண்டாக வீசப்பட்டார்கள். அவற்றை உமாஜி இவ்வாறு எழுதுகிறார். "மயான அமைதியில் ஊரே உறைந்திருக்க, தூரத்தில் கேட்கும் நாய்க்குரைப்பும், மிக மெல்லிய லாம்பு வெளிச்சத்தில் அச்சத்தோடு கடந்து போகும் கலவர ராத்திரிகளைக் கொண்ட இந்திய இராணுவ கால ஊரடங்கு உங்களுக்கு இன்னும் ஞாபகமிருக்கலாம். கொக்குவில், பிரம்படியில் வீதியில் வரிசையாகப் பலரைப் படுக்கவைத்து யுத்த டாங்கியினால் ஏற்றிக்கொல்லப்பட்ட அன்றைய ஊரடங்கை நீங்கள் கடந்திருக்கலாம். வெளிநாட்டிலிருந்து ஊருக்கு வந்திருந்த மகனை ஒரு இராணுவ வீரன் நெஞ்சில் கத்தி சொருகி அடிவயிறு வரை இழுக்க, சகோதரர்கள் கதற கண்முன்னால் துடித்து அடங்கிய அவன் உடலை வீட்டு முற்றத்திலேயே எரித்துவிட்டுக் கோவிலில் சென்று கழித்த ஊரடங்கு இரவைப் பற்றி எங்களுக்கு யாரேனும் விவரித்திருக்கலாம். கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் வடக்கு பக்கமாக இருக்கும் வேப்ப மரத்திற்கு கீழ் ஐம்பதிற்கு மேற்பட்ட உடல்களை புதைத்த அந்த ஊரடங்கு இரவை நீங்கள் இன்னும் மறக்காதிருக்கலாம். அந்த மாதிரியான ஊரடங்கு போலிருக்கவில்லை அது."

இந்த ஊரடங்கும் இறப்புகளும் கொலைகளும் நிகழ்ந்த காலப்பகுதியைச் சுற்றியே என்னுடைய படைப்புலகமும் இயங்குகிறதாக நினைக்கிறேன். அன்று பார்த்த கொலைகள் இன்றும் தூக்கத்தை கெடுக்கத்தான் செய்கின்றன. உமாஜி இந்த ஊரடங்கு காலத்தில் நிகழந்த துன்பத்தை மெலிதான நகைச்சுவை ஊர்ந்து பரவிச் செல்வதன் மொழியில் சொல்கிறார்.

ஊரடங்கு நேரத்தில் வீட்டுக்குள்ளே முடங்கியிருக்க வேண்டும். எவ்வளவு நேரம் தான் இதனைச் செய்ய இயலும்? அதனால் இளைஞர்கள் மெல்ல மெல்ல வெளியே வருகிறார்கள். இராணுவம் இல்லை என்று ஊர்ஜினப்படுத்திவிட்டு கதைக்க ஆரம்பிக்கிறார்கள். பின் தயக்கம் பயம் கலைய பரஸ்பரம் தினமும் சந்தித்து அரட்டையடிக்க ஆரம்பிக்கிறார்கள். சந்தியில் நிக்கும் இராணுவத்திற்கு இதெல்லாம் தெரியாது என்று நினைக்கிறார்கள். ஆனால் சிப்பாயொருவர் "நேற்று இரவு பத்துமணிக்கு இதே டி ஷேர்ட் போட ரோட் க்ரொஸ் பண்ணிப் போறே என்ன? நான் அங்கயிருந்து பாத்துக் கொண்டிருந்தனான்" என்கிறார். எல்லாம் இராணுவத்துக்குத் தெரிந்து தான் இருக்கிறது. இராணுவம் நினைத்தால் எந்தக் கேள்வியும் இன்றிச் சுடவே முடியும்.

ஆனாலும், தெரிந்த பொடியன்கள் பிரச்சினை இல்லை என்று கனிவும் காட்டுகிறார்கள். இந்தக் கனிவை பயன்படுத்தி ஊரடங்கு நேரத்தில் குமிந்த யுவன்கள் பேணிப்பந்தும் விளையாடுகிறார்கள். இராணுவம் ஒன்றும் செய்யவில்லை என்று அறிய மேலும் மேலும் கூட்டம் கூடுகிறது. வெவ்வேறு ஏரியா யுவன்களும் குதூகலத்துடன் வந்து விடுகிறார்கள். திடீரென்று இராணுவம் வருகிறது. எல்லோரும் உறைந்து நிக்கிறார்கள். அவர்கள் பேசாமல் கடந்து செல்கிறார்கள். பின்னர் இராணுவ லீடர் சொல்கிறார் "நாங்க ஒண்ணும் செய்ய மாட்டம் - கேஃபியூ டைம்ல வேற ஆமி வந்தா.. ஃபீல்ட் பைக் ஆளுங்க வந்தா சுடும். நாங்க ஒண்டும் செய்ய ஏலாது".

'ஃபீல்ட் பைக்' இராணுவ குழுமம் மிகவும் பெயர் பெற்றது. பச்சை யமகா மோட்டார் சைக்கிளில் மிக வேகமாக கும்பலாக ரோந்து வருவார்கள். ஊரடங்கு நேரத்தில் எவராவது வெளியே நின்றால் அடி பின்னி எடுத்துவிட்டுச் செல்வார்கள். அவர்களிடம் மிச்ச இராணுவத்தினர் பயன்படுத்தும் ஏகே-47 துப்பாக்கி இருப்பதில்லை. பைக் ஓடுவதற்கு வசதியான எம்-16 துப்பாக்கியை வைத்திருப்பார்கள். அது இன்னும் கவர்ச்சிகரமாக இருக்கும். மடிந்திருக்கும் அதன் கைப்பிடியை விரிக்கும்போது பிரத்தியேகமான 'கிளிக்' என்ற ஒலி கேட்கும். அந்த ஒலியே எல்லாவற்றையும் நிறுத்திவிடக்கூடியது. உமாஜியும் நண்பர்களும் வீட்டு முற்றத்தில் நின்று ஊரடங்கு நேரதில் அரட்டை அடித்துக் கொண்டிருக்கும் போது 'ஃபீல்ட் பைக்' குரூப் வந்துவிடுகிறது அரண்டு வீட்டுக்குள் பாய அதற்குள் துப்பாக்கியுடன் சுற்றி வளைத்து எல்லோரையும் பிடித்துவிடுகிறார்கள். பயத்தில் உறைந்து 'சுடப் போகிறார்களா? அடிக்கப் போகிறார்களா?' என்ற வினா கொல்கிறது. இந்த இரண்டு தெரிவையும் விட வேறு தெரிவுகள் இல்லை என்பது சர்வ நிச்சயம்.

ஆனால் மிக மெதுவாக ஃபீல்ட் பைக் டீம் லீடர், 'ஊரடங்கு நேரத்தில் இனி வெளியே உங்களைக் காணக்கூடாது' என ஆங்கிலத்தில் சொல்கிறார். பின்பு எல்லோரும் போய்விட்டார்கள். தமக்கு எந்த சேதாரமும் நடக்கவில்லை என்பதை நம்ப முடியாமல் பார்க்கிறார்கள். உமாஜி இந்த ரணகளத்தை எழுதியிருக்கும் சித்தரிப்புகள் காட்சி பூர்வம் என்பதைத் தாண்டி உணர்வுகளை தட்டி எழுப்பக் கூடியது. ஒவ்வொரு சம்பவத்தையும் நண்பர்களின் அசைவையும் வேடிக்கையாகச் சொல்கிறார். புன்னகை முகிழாமல் வாசிக்க முடியவில்லை. அது எப்படி நம்மை அடிக்காமல் விட்டார்கள் என்று கேள்விக்கான விடையை இறுதியில் கண்டு பிடிக்கிறார்கள். சற்று முன்னர் தான் இன்னுமொரு இளைஞர்கள் குழாமை நொறுக்கி எடுத்துவிட்டு களைத்துப் போய் ஃபீல்ட் பைக் குஷரூப் வந்திருக்கிறது.

உமாஜி இப்புத்தகத்தில் சித்தரிக்கும் வாழ்க்கை என்பது நடுத்தர வர்க்கத்துக்கு உரிய ஆண்களின் அகவுலகத்தை பாங்கு இல்லாமல் சொல்வது. "தம்பி அந்தப்பக்கம் அடி விழுதோ?" சைக்கிளில் செல்லும்போது எதிரே வருபவரை இப்படி நலம் விசாரிப்பது போல் கேட்கும் புதியதொரு பழக்கம் அன்றைய நாட்களில் பரவியிருந்தது. ஆரம்ப நாட்களில் வீதியில் சென்று கொண்டிருப்போம். எங்கேயாவது வெடி குண்டுச் சத்தம் கேட்கும். சத்தம் வந்த திசையில் ஆமிப் பொயிண்ட் இருந்தால் தவிர்த்துச் செல்ல வேண்டும் அல்லது வாங்கிக் கட்டிக் கொள்ள நேரிடும். பின்பு அதுவே பழகிப் போய் எந்தச் சத்தமும் கேட்கவில்லை என்பதே அமைதியே அசாதரணமான ஒரு பயத்தைக் கொடுத்தது" என்று குறிப்பிடும் உமாஜி உலகத்தில் நானும் இருந்திருக்கிறேன். இன்று நினைத்துப் பார்த்தால் ஒரு நீள் மூச்சுதான் வெளியேறுகிறது. இப்போதுதான் யுத்தம் முடிவடைந்தது போல் உள்ளது. ஆனால் ஏறக்குறைய ஒரு தசாப்தம் ஆகப்போகிறது. இப்போதும் தெருவையும் மதவடிகளையும் பார்க்கும் போது பழைய நினைவுகள் சுட்டெரிக்கின்றன.

உமாஜியின் எழுத்து முறை என்பது கூர்மையான சுய எள்ளலுடன் எல்லாவற்றையும் அணுகிச் செல்வது. தன்னையும் தாழ்த்தி எல்லா தர்க்கங்களையும் உடைத்து நையாண்டி செய்யும் எழுத்து முறை. இந்தப் பாணியை வாசிக்கும்போது நம்மையும் ஒருவராக அதற்குள் இனங்காணச் செய்கிறது. அதிகம் அலங்காரம் இன்றி எழுதப்பட்ட நடை. வர்ணனைகள் குறைவாகவே வருகின்றன. வீட்டில் அம்மாவுடன் சண்டை வரும் போது ஓவென்று ஒப்பாரி வைத்து பக்கத்து வீட்டு அக்காமார்களை துணைக்கு அழைப்பது உமாஜிக்கு வழமையான செயலாக இருக்கிறது. அதை இப்படி வர்ணிக்கிறார் 'ஒப்பிரேஷன் லிபரேஷன் நடவடிக்கையில் திடீரென ஒரு நாள் 'மிராஜ்' வந்ததே அதுபோலப் பறந்து வருவார்கள்' அக்காமார்களை மிராஜ் விமானத்துடன் ஒப்பிட்ட உவமையை வாசித்த போது அசந்துவிட்டேன். அதற்குப் பின்னே இருக்கும் கூர்மையான அரசியல் கிண்டல். இப்படி ரசிக்கத்தக்க வரிகள் ஏராளம். பொதுவாக ஈழத்து எழுத்தாளர்களுக்கும் சரி ஈழத்து வாசகர்களுக்கும் சரி நகைச்சுவை அவ்வளவாக கைகூடி வருவதில்லை. கூர்மையான கிண்டல்கள் புரிவதில்லை. உமாஜியின் இப்புத்தகத்தை விளங்கிக்கொள்ள கொஞ்சம் நகைச்சுவை உணர்வு வேண்டும் தான்.

'காக்கா கொத்திய காயம்' புத்தகத்தை வாசித்து முடித்த பின்னர் ஒரு இளைஞனின் டயரியை திருட்டுத்தனமாகப் படித்ததுபோல அந்தரங்கமாக உணர முடிகிறது. "சிறுவயதில் உடம்பில் ஏற்பட்ட காயங்கள் மட்டும் அப்படியே தழும்புகளாக நிரந்தர அடையாளங்களாக மாறிவிடுவது ஆச்சரியம் தான். ஒருவேளை வளர வளர அவதானமாக இருக்கப் பழகிவிடுவதால் காயங்கள் மனதில் மட்டுமே அதிகமாக ஏற்படுகின்றன. யாருக்கும் தெரியாத, யாருமே கவனிக்காத, எந்தக் கேள்வியும் கேட்காத மனதின் காயங்களை நாமே கேள்வி கேட்டு, அறவிடாது அப்படியே புதிதாகப் பேணிக் கொள்கிறோம். ஏதோவொரு சமயத்தில் அந்த வலியையும், அதன் வீரியத்தையும் முதன்முறையாக ஏற்படுவது போன்றே உணர்ந்து கொள்கிறோம்" என்று எழுதிச்செல்லும் உமாஜி, இது காக்கா கொத்திய காயம் என்று சிறுபிள்ளைகளுக்கு ஏதாவது ஒரு தழும்பைக் காட்டி கதைவிட்டாலும் அதன் பின்னே இருக்கும் உண்மையும் வலியும் பாரியது என்பதை குறிப்புணர்த்துகிறார். எல்லாவற்றையும் சொல்ல முடிவதில்லை, சிலவற்றை மட்டுமே சொல்ல முடிகிறது.

வெளியீடு : 4தமிழ்மீடியா

விலை : 500 ரூபாய் (இலங்கை), 300 இ.ரூபாய் (இந்தியா), யூரோ 10.00 (ஐரோப்பா)

# மன்னகுளம்: மறமும் மறத்தலும்

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாயக விடுதலை வேண்டும் என்று போராடியவர்கள் மன்னகுளத்தில் நின்றிருக்கிறார்கள். நின்று போரிட்டிருக்கிறார்கள். அங்கே விடுதலைக் குருதி சிந்தப்பட்டிருக்கிறது. அந்தக் களத்திலே போராடி வீரச்சாவடைந்திருக்கிறார்கள். அதை விடுதலைப்போராட்ட வரலாற்றிலே முக்கியமான சமர்க்களமாக்கியிருக்கிறார்கள்.

இப்படி வாழ்ந்தவர்களும் வீழ்ந்தவர்களும் சொன்ன சேதியென்ன? இன்று நாம் சொல்லிக் கொண்டிருக்கின்ற நியாயங்கள் என்ன?

மன்னகுளத்தைப்போல வன்னியெங்கும் பல வரலாற்றுக் கிராமங்களுள்ளன. பத்தாண்டுகளுக்கு முன்பு அவை வரலாற்றுச் சிறப்புக்குரியனவாக இருந்தன. விடுதலையின் முகங்களாக இருந்தன. போராளிகளால் நிரம்பியிருந்தன. போர்க்களங்களாக இருந்தன.

இன்று அவையெல்லாம். கவனிக்கப்படாத கைவிடப்பட்டவையாகி விட்டன. கைவிடப்பட்டவையாகி விட்டன. மறக்கப்பட்டவையாகி விட்டன.

இதெல்லாம் வேறு யாராலும் நடந்ததல்ல. நம்மால்தான் நடந்திருக்கிறது. அதுவும் ஒரு பத்தாண்டுகளுக்குள் மிகச் சுலமாக வரலாற்றைச் சுருட்டிப் புதைத்து விட்டோம். எல்லாவற்றையும் சுலபமாக மறந்து விட்டோம். நமக்குத் தோதுப்படாததையெல்லாம் தந்திரமாகக் கைவிடப்பழகி விட்டோம். கண்ணை மூடிக் கொண்டு எல்லாவற்றையும் கடந்து சென்று விட்டோம்.

இப்போது மன்னகுளத்துக்கு நீங்கள் போனால், அங்கே உள்ள சனங்கள் உங்களை விநோதமாகவே பார்ப்பார்கள். அப்படித்தான் அந்தச் சனங்களை நீங்களும் பார்ப்பீர்கள். அந்தளவுக்கு அந்நியத்தன்மை நமக்கிடையில் குடியேறி விட்டது. உணர்வும் உறவும் அறுந்து போகும்போது அங்கே அந்நியம் குடியேறி விடும்.

இந்த அந்நியம் பொல்லாத ஒரு நோய். வெளியே அரசியல் ஒற்றுமையைப் பற்றி, கட்சிகளுக்கிடையிலான ஒற்றுமையைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்ற நாம் மன்னகுளங்களைப் போன்ற கிராமங்களைத் தள்ளி வைத்திருக்கிறோம். அங்கே அந்நியத்தை விதைத்திருக்கிறோம்.

இப்படி நடைமுறையில் அந்நியத்தைப் பேணிக் கொண்டு அரசியலில் ஒற்றுமையை வலியுறுத்துவது எந்தளவுக்குச் சரியானது? இந்தப் பொய்மையும் போலியும் நம்மை எப்படி ஈடேற்றும்? மன்னகுளத்திலிருந்து நாம் எதைப் படிக்கப் போகிறோம்? ■

# அகதிகளும் ஆளுநரும்....

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ராகவன் பின்பற்றிய தந்திரம், நாஜி இரகசியப் பொலிஸார் பின்பற்றிய ஒரு தந்திரமாகவே இருந்தது என்பது தெளிவாகும். எமது பொலிஸாரும், இராணுவத்தினரும் இந்தத் தந்திரத்தை சிறப்பான விதத்தில் கற்றுக் கொண்டிருப்பதுடன், எம்மைப் பயமுறுத்தும் நோக் கத்துடன் வழமையாக இரவிலேயே எம்மைத் தேடி வருவார்கள். ராகவன் எத்தகைய கூச்சமும் இல்லாமல் தனது வாக்குறுதியை மீறியதுடன், அஹமதியாக்களை தப்பி ஓடவைக்கும் பொருட்டு நாஜி பொலிஸ் தந்திரோபாயங்களைப் பயன்படுத்தியிருந்தார். நெஞ்சில் ஈரமற்ற விதத்தில் சிறு பிள்ளைகளை வதைமுகாமொன்றில் அடைத்து வைக்க அவர் விரும்பினார்.

### அயோக்கியர்களுக்கு மரியாதை

அயோக்கியர்கள் எப்பொழுதும் தமக்கு மரியாதையை எதிர்பார்க்கிறார்கள். அது ஒரு மானிடத் தேவையாகும். அயோக்கியர்கள் உயர் பதவிகளை வகிக்கும் பொழுது, பொது மக்களும் மரியாதையை எதிர்பார்த்து, அத்தகைய அயோக்கியர்களை வைபவங்களுக்கு அழைக்கின்றார்கள். இந்தச் செயலின் தார்மீகத் தன்மை குறித்து எவரும் பேசுவதில்லை. ஏனெனில், தம்மை முக்கியஸ்தர்கள் எனக் காட்டிக் கொள்ளும் பொருட்டு பெருந்தொகையான ஆட்கள் வெவ்வேறு அளவுகளில் இந்த விளையாட்டில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

ஏழை பாடசாலை மாணவிகளுக்கான ஒரு ஞாபகார்த்த விடுதி திறந்து வைக்கப்பட்ட நிகழ்வில் எனது குடும்பத்தினருடன் பங்கேற்றேன். பெருந்தன்மையுடன் மக்களால் வழங்கப்பட்ட நன்கொடைகள் காரணமாக வறிய பிள்ளைகளுக்கு இலவச தங்குமிட வசதி, பாடசாலைக் கட்டணங்கள் மற்றும் போக்குவரத்துச் செலவு என்பவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. எமது கொழும்பு பேராயர் இதற்கு வருகை தந்திருந்ததுடன், ஆசீர்வாத ஆராதனைகளில் அவருடன் யாழ்ப்பாண ஆயரும், யாழ் ஆயரின் பிரதம பிரதிநிதியும் பங்கேற்றார்கள். யாழ்ப்பாணத்தின் பெரும் புள்ளிகள் பலர் இந்நிகழ்வில் சமூகமளித்திருந்தனர்.

சரியாக காலை 8.00 மணிக்கு பாதுகாப்பு சைரன் ஒலித்ததுடன், வாகனத் தொடரணி அங்கு வந்தது. தலைமை நிலைய பொலிஸ் பரிசோதகர் பெர்ணான்டோ மற்றும் ஆளுநர் ராகவன் ஆகியோர் வாகனத்திலிருந்து இறங்குவதைப் பார்த்து நான் பேரதிர்ச்சியடைந்தேன். ராகவன் தேசியக் கொடியை ஏற்றி, தேசிய கீதம் இசைக்கப்படும் பொழுது நேராக நிமிர்ந்து நின்றார்.

இங்குள்ள எதிர்முரண் நிலை, தஞ்சம் கோருவதற்கான தகைமையை கொண்டுள்ளவர்கள் என அத்தாட்சிப்படுத்தப்பட்டிருந்த பிள்ளைகளை வதை முகாமிற்கு அனுப்புவதற்கு முன்வந்த செயலுடன் சம்பந்தப்பட்டிருந்த இந்த இரு நபர்களும், இந்த விடுதியில் தங்க வைக்கப்படும் பெண் பிள்ளைகளின் நலன் குறித்து கரிசனை கொண்டுள்ளார்கள் என நாடகமாடுவதாகும். மேலும், இவர்களின் அடுத்த எதிர்முரண் நிலை குறித்த விரிவான தகவல்கள் எனக்குப் பின்னர் தெரிய வந்தன. இராணுவத்தினால் சட்ட விரோதமான விதத்தில் கையகப்படுத்தப்பட்டு (இப்பொழுது அதன் உண்மையான உரிமையாளர்களுக்கு திருப்பி ஒப்படைக்கப்படுவதற்கு தயார் நிலையில் இருந்து வரும்) வீடுகளை பூந்தோட்ட முகாமின் விரிவாக்கல் செயற்பாடுகளுக்கென கையகப்படுத்திக் கொள்ள வேண்டுமென ராகவன் நிர்ப்பந்தித்து வருவதாக அங்கிருந்த ஏனையவர்கள் என்னிடம் சொன்னார்கள். அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து, மற்றவர்களுக்குச் சொந்தமான சொத்துக்களை அபகரித்துக் கொள்ளும் ஒரு மனப்பாங்கினை அது எடுத்துக் காட்டுகின்றது. மேலும், ஏனையவர்களினால் தீர்த்து வைக்க முடியாத பிரச்சினைகளை தான் தீர்த்து வைத்திருப்பதாக ஜனாதிபதியிடம் காட்டிக் கொள்ளும் ஒரு பயனற்ற முயற்சியாகவும் அது இருந்து வருகின்றது.

தமது சொந்த அரசியல் மற்றும் தொழில் ஆதாயங்களை கருத்தில் கொண்டு யாழ்ப்பாணத்தின் நற்பெயருக்கு களங்கம் கற்பிக்கக் கூடிய விதத்திலான கதைகளை பரப்பி வரும் ஆளுநர் மற்றும் அவரது அடிவருடியான தலைமை நிலைய பொலிஸ் பரிசோதகர் ஆகியோரின் பகட்டு ஆரவாரத்தையும், போலிப் பெருமிதத்தையும் பார்த்த போது எனக்கு கடுங்கோபம் ஏற்பட்டது. நாஜி பொலிஸார் சல்யூட் அடிக்கும் விதத்தில் இவர்களுக்கு ஒரு சல்யூட் அடிப்போமா என்று எனக்குத் தோன்றியது. என்னுடைய உறவினர்கள் இது குறித்து பெருமளவுக்கு கவலைப்பட முடியும் என்ற காரணத்தினால் நான் அதனைச் செய்யவில்லை. துரதிர்ஷ்டவசமாக 'பகலில் பொலிஸ், இரவில் திருடன்' சோடி தேசிய கீதம் முடிவடைந்த உடனேயே அந்த இடத்திலிருந்து வெளியேறிச் சென்றது. அநேகமாக, தமக்கு மரியாதை கிடைக்கக் கூடிய வேறொரு இடத்துக்கு அவர்கள் சென்றிருக்கக் கூடும்.

### காடையர்கள் தாக்குதல்

அஹமதியாக்கள் கடந்த 21ஆம் திகதி காலை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறிச் சென்று, மூன்று நாட்களுக்கென தற்காலிக தங்குமிட வசதியை தேடிக் கொண்டார்கள். கடவுளுக்கு நன்றி. வவுனியாவில் இருக்கும் (19 பாகிஸ்தானியர்களையும், 16 ஆப்கன் இளைஞர்களையும் கொண்ட) பூந்தோட்ட முகாம் பிற்பகல் 2.00 மணியளவில் இரும்புக் கம்பிகள் மற்றும் பொல்லுகள் என்பவற்றை ஏந்திய சிங்கள காடையர்களினால் தாக்கப்பட்டதுடன், புத்தபிக்குகள் மற்றும் வவுனியா சிங்கள பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோரின் தலைமையில் இந்தக் கும்பல் வந்தது. இந்தக் குண்டர் படையில் தமிழர்கள் எவரும் இருக்கவில்லை எனத் தெரிய வருகிறது.

தாக்குதல் நடத்திய சிங்களவர்கள் மீது - குறிப்பாக புத்த பிக்குகள் மீது - பொலிஸாரால் துப்பாக்கிச் சூடு நடத்த முடியாதிருந்தது. அதிர்ஷ்டவசமாக, அந்தக் காவல் அணியின் ஒரு பாகமாக சுமார் 10 இராணுவ சிப்பாய்களும் இருந்துள்ளார்கள் என களத்தில் இருந்த பத்திரிகை நிருபர்கள் எனக்கு அறிவித்தார்கள். அவர்கள் மேலும் அதிக எண்ணிக்கையிலான இராணுவச் சிப்பாய்களை அழைத்திருப்பதுடன், அந்தக் கும்பலை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்வதாக சூளுரைத்து, அதன் மூலம் அவர்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்கள்.

பெர்ணான்டோ - ராகவன் சோடி அஹமதியா பிள்ளைகளை இந்த முகாமுக்கு அனுப்பி வைத்து, அவர்கள் இந்தக் கும்பலை எதிர்கொள்ள நேரிட்டிருந்தால், அந்தப் பிள்ளைகளுக்கு ஏற்படக்கூடிய அதிர்ச்சியை கற்பனை செய்து பாருங்கள். அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளர் அலுவலகம் இந்த அகதிகளை வேறு நாடொன்றில் மீள் குடியேற்றும் வரையில், அவர்கள் யாழ்ப்பாணத்தில் அமைதியாக வாழ்ந்து வருவதற்கு இடமளிக்கும் பொருட்டு நீதிமன்றத் தலையீட்டை நாடுவதே எங்களுக்கு இருக்கும் ஒரேயொரு மாற்று வழியாக இருந்து வருகின்றது.

தென்னிலங்கை இப்பொழுது தறிகெட்டுப் போயிருக்கும் ஒரு சூழ்நிலையில், அதிகாரிகள் தமிழ் மக்கள் மீது களங்கம் கற்பிப்பதற்கு முயற்சித்து வந்தாலும் கூட, அகதிகள் மீது தாக்குதல் தொடுத்த இந்தச் சம்பவத்தில் தமிழர்கள் எவரும் சம்பந்தப்பட்டிருக்கவில்லை.

### அரசாங்கத்தின் பிரசார இயந்திரங்கள்

அரசாங்கத்தின் பிரசார இயந்திரத்தின் ஒரு பாகம், வேலைப் பளு மிக்கதாக இப்பொழுது இருந்து வருகின்றது. அஹமதியாக்கள் சட்டவிரோதமாக இருந்து வருகின்றார்கள் என ராகவன் பொய்யாகக் கூறி வருகின்றார். அதன் காரணமாக மாகாண சபைத் தேர்தல்களைத் தடுக்கும் விதத்தில் அதிகாரிகள் எல்லை நிர்ணயக் கமிட்டியின் அறிக்கையை கிடப்பில் போட்டிருக்கின்றார்கள். இது ஆளுநர்கள் மாகாண சபையின் அதிகாரங்களை அபகரித்துக் கொள்வதற்கு வாய்ப்பளித்திருப்பதுடன், தமது சலுகைகளுக்கு பகரமாக அவர்கள் எஜமானர்களுக்கு விசுவாசமாக இருந்து வருகின்றார்கள். நான் இந்த அகதிகளை சட்டவிரோதமான விதத்தில் தங்க வைத்திருப்பதாக தமிழ் காங்கிரஸ் சட்டத்தரணி சுகாஸ் என்னிடம் சொன்னார். ஒரு நல்ல சிங்கள நண்பர் இரவு 10.20 மணிக்கு என்னுடன் தொடர்பு கொண்டு, சிரச தொலைக்காட்சியும் இதே மாதிரியான ஒரு கருத்தைக் கூறியதாகவும், அது உண்மையானதா எனவும் கேட்டார்.

அதனை அடுத்து, இது அகதிகளின் நல் வாழ்வுக்கான ஒரு போராட்டமாக மட்டும் இருந்து வரவில்லை. எமது வீடுகளில் நாங்கள் விருந்தினர்களாக வைத்துக் கொள்வதற்கு தெரிவு செய்து கொள்ளும், சட்டத்தை மதிக்கும் மக்களை தங்க வைத்துக் கொள்வதற்கான எமது அடிப்படை உரிமைக்கான ஒரு போராட்டமாக அது மாற்றமடைந்தது. அது உண்மைக்கான ஒரு போராட்டமாகவும், சட்டத்தை மதித்து நடக்கும் தமிழர்கள் மற்றும் சிங்களவர்கள் ஆகியோரின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் அரசியல்வாதிகளிலிருந்து விடுதலை பெறுவதற்கான ஒரு போராட்டமாகவும் .மாறியது. இந்த தமிழர்களும், சிங்களவர்களும் எமது ஜனநாயகத்தை மதிப்பதுடன், அதனை தக்கவைத்துக் கொள்வதற்கும் முயற்சித்து வருகின்றார்கள். இந்தப் பின்புலத்திலேயே, அநேகமாக ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவதற்கான ஒரு உத்தியாக நாட்டில் பெரும் குழப்ப நிலை நிலவி வருகின்றது என்ற விதத்தில் பொய்யான கருத்துக்கள் பரப்பப்பட்டு வருகின்றன.

இந்த 'அரசியல் இரகசியங்கள்' என்ற போர்வைக்குள் பதுங்கிக் கொள்வதனை நிறுத்துமாறு நான் இந்தக் கும்பலுக்கு சவால் விடுவதுடன், தமது அரசியல் அபிலாசைகளை சாதித்துக் கொள்வதற்காக வடக்கில் அகதிகள் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டு வருகின்றது என்ற இந்தக் கதையை தாம் உருவாக்கவில்லை என்பதனை நிரூபிப்பதற்கு ஆதாரம் காட்டுமாறும் அவர்களுக்கு நான் சவால் விடுகின்றேன். அரசியல்வாதிகள் இந்த பயங்கர சூழ்நிலை குறித்த கருத்தை எழுப்பிய பொழுது, எமது சுதந்திரங்களை பறித்துக் கொள்ளும் ஒரு வழமையான செயற்பாடாகவே அது இருந்து வருகின்றது என நான் ராகவனிடம் சொன்னேன். அனைத்து அதிகாரங்களும் நுண்மையங்களுக்கு பகிர்ந்தளிக்கும் செயற்பாட்டை சிவிலியன்களாகிய நாங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். எமது வீட்டில் தங்கியிருக்கும் விருந்தாளிகளை வெளியேற்ற வேண்டும் என பொலிஸார் எம்மிடம் கூறி, நாங்கள் அதற்குப் பணிந்து நடக்கும் பொழுது எமது உரிமைகளை இழந்து விடுகின்றோம். பொலிஸாரை எமது எஜமானர்களாக ஆக்குகின்றோம். எமது நாடு ஒரு ஜனநாயக நாடு. பொலிஸ் ஆட்சி நடைபெறும் ஒரு நாடாக இருந்துவரவில்லை. ■

**“தன்னை முதன்மையாக ஒரு மேடை நாடக கர்த்தாவாகவே மோகன் கருதினார். சில ஆண்டுகளுக்கு முன் இரண்டு பிரபலங்கள் சந்தித்து உரையாடும் வகையிலான தொலைக்காட்சி நிகழ்ச்சியில் அவர் பங்கேற்றார். கேள்வி கேட்ட வேகத்தில் பட்டென்று பதில் சொல்ல வேண்டிய ‘ரேபிட் ஃபயர்’ கேள்விகளைக் கேட்டார் தொகுப்பாளர். “உங்கள் மனதுக்கு மிகவும் பிடித்தது சினிமாவா, எழுத்தா, மேடை நாடகங்களா?” என்ற கேள்வி கேட்கப்பட்டபோது, உடனடியாக இரண்டு கைகளையும் உயர்த்தி ‘மேடை நாடகம்’ என்று அழுத்திச் சொன்னார் மோகன்.**



# சிரிப்பினில் வாழ்தல்

■ ச.கோபாலகிருஷ்ணன்

**கிரேசி மோகன் குறித்த அஞ்சலிக் குறிப்பு**

சிலரைப் பார்த்தால் இவர்கள் எப்போதும் தன்னை மகிழ்ச்சியாக வைத்துக்கொண்டு மற்றவர்களையும் மகிழ்வித்துக்கொண்டே இருப்பார்களோ என்று தோன்றும். நகைச்சுவை ஒரு கலையாகக் கைவரப்பெற்றவர்களுக்குக் கிடைக்கும் வரம் அது. கிரேசி மோகன் அரிதான சிலரில் ஒருவர். ஜூன் 10 அன்று மதியம் மோகன் மறைந்துவிட்டார் என்ற செய்தி வந்தபோது அவருடைய மரணத்தைச் சட்டென்று ஏற்றுக்கொள்ள முடியாமல் பலரும் தவித்ததற்கு அதுவே முக்கியமான காரணம்.

இரு நாட்கள் சமூக வலைத்தளங்களில் அவருடைய பெயரை உச்சரித்தபடி இருந்தது தமிழ்ச் சமூகம். பலரும் ‘கிரேசி மோகன்’ என்ற பெயரைத் தமிழ் சினிமா வசனகர்த்தவாகவே மனதில் பதித்து வைத்திருக்கிறார்கள் என்பது அஞ்சலிக் குறிப்புகளையும் நினைவோடைகளையும் பார்த்தபோது தெரிந்தது. குறிப்பாக பலருடைய பதிவுகளில் கமல் ஹாசனோடு அவர் பணியாற்றிய சினிமாக்கள் பெரும் செல்வாக்கு செலுத்தின. மோகனின் உண்மையான சாதனையும் தமிழுக்கான அவருடைய பங்களிப்பும் சினிமாவுக்கு வெளியே அவர் தன் வாழ்வையே அர்ப்பணித்துக்கொண்ட நாடகத் துறையிலேயே இருக்கிறது் சினிமா அதனுடைய நீட்சிதான்.

**மேடை நாடகத்தில் ஆழங்கால்**

தமிழ் சினிமாவின் வரலாறே மேடை நாடகத்தின் நீட்சிதானே! அந்தத் தொடர் பயணத்தில் தன்னையும் பொருத்திக்கொண்டவர்தான் மோகன். தமிழில் மேடை நாடகங்களின் பொற்காலத்தில் வரலாற்று நாடகங்களும், புராண நாடகங்களும் கோலோச்சின அதன் உச்சக்கட்டத்தில் சமூக நாடகங்கள் மேல் நோக்கி வந்தன. சினிமாவின் எழுச்சிக்குப் பிறகு மேடை நாடகங்கள் தங்கள் செல்வாக்கை இழந்தன. பழைய பாணி வரலாற்று, புராண நாடகங்களுக்கான இடம் ஆவியானபோது, சமூக நாடகங்கள் நவீன நாடக வடிவம் நோக்கி நகர்ந்தன.

வெகுஜன தமிழ் நாடக மேடைகள் கிட்டத்தட்ட ஆளரவமற்றுப்போய்க்கொண்டிருந்த நாட்களில்தான் நகைச்சுவை நாடகங்கள் அந்த இடத்தை நிரப்பத் தொடங்கின. நாடகங்களின் வீழ்ச்சிக் காலத்தில் தன்னுடைய பணியைத் தொடங்கியவர் மோகன். கிட்டத்தட்ட நாற்பதாண்டு காலம் நாடக உலகில் அவர் பணியாற்றினார். 1970-களில் மேடை நாடகங்கள் மூலம் தன் பயணத்தைத் தொடங்கியவர் 1990களில் ‘தூர்தர்ஷன்’ நாடகங்களைக் கையில் எடுத்தபோது தொலைக்காட்சியைத் தன் தளமாக மாற்றிக்கொண்டார். தொடர்ந்து தனியார் தொலைக்காட்சிகளின் எழுச்சிக் காலத்தில் அங்கும் தன் கொடியைப் பறக்கவிட்டார். இதனூடாகவே அவருடைய சினிமா பிரவேசமும் நடந்தது. 2000-க்குப் பிறகு புதிய ஊடக வடிவமாக உருவெடுத்த யூடியூப் சனல்களிலும் அவர் தலைகாட்டத் தவறவில்லை. முக்கியமாக நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது எந்தத் தளத்துக்குச் சென்றாலும் நாடகத்திலேயே மோகனின் மனம் நிலைத்திருந்தது.

**தமிழ், தமிழ், தமிழ்!**

தன்னை முதன்மையாக ஒரு மேடை நாடக கர்த்தாவாகவே மோகன் கருதினார். சில ஆண்டுகளுக்கு முன் இரண்டு பிரபலங்கள் சந்தித்து உரையாடும் வகையிலான தொலைக்காட்சி நிகழ்ச்சியில் அவர் பங்கேற்றார். கேள்வி கேட்ட வேகத்தில் பட்டென்று பதில் சொல்ல வேண்டிய ‘ரேபிட் ஃபயர்’ கேள்விகளைக் கேட்டார் தொகுப்பாளர். “உங்கள் மனதுக்கு மிகவுப் பிடித்தது சினிமாவா, எழுத்தா, மேடை நாடகங்களா?” என்ற கேள்வி கேட்கப்பட்டபோது, உடனடியாக இரண்டு கைகளையும் உயர்த்தி ‘மேடை நாடகம்’ என்று அழுத்திச் சொன்னார் மோகன். நாடகத்தின் மீதான இத்தகைய அவருடைய நாட்டம் அவர் கொண்டிருந்த நகைச்சுவைத் திறன் மீதான பிடிப்பு மட்டும் அல்ல தமிழின்பால் அவர் கொண்டிருந்த காதலும்தான்.

மோகனின் திரைப்பட நகைச்சுவைகள் பலவும் தமிழ்ப் பேச்சுமொழியின் சிறப்புத்தன்மையிலிருந்து முகிழ்ந்தவை. ‘சதிலீலாவதி’ படத்தில் “பிரேக்கு பிடிக்கலடி” என்று கமல் சொல்ல அவரது மனைவியாக நடித்த கோவை சரளா, “என்னையே பிடிக்கலையாம். பிரேக்கு பிடிக்கலன்னா என்ன?” என்று சொல்வார். பிடிக்கவில்லை என்ற சொல்லுக்கு இருக்கும் இரு வேறு பொருள்களை வைத்து நகைச்சுவையை உருவாக்கி இருப்பார். ‘மைக்கேல் மதன காமராஜன்’ படத்தில் தந்தையான டெல்லி கணேஷ் மகன் கமலிடம் “அப்பன் குதிருக்குள்ள இல்லைன்னு அப்பன்கிட்டயே சொல்லிண்டிருக்காய் நீ” என்பார். ‘அப்பன் குதிருக்குள்ள இல்ல’ என்கிற தமிழ் சொலவடையை அறிந்தவர்கள்தாம் இந்த நகைச்சுவையைப் புரிந்துகொள்ள முடியும். தமிழைத் தவிர வேறு மொழிகளுக்கு இதில் உள்ள நகைச்சுவையைக் கடத்த முடியாது.

மோகன் கையாண்ட தமிழ் வார்த்தை விளையாட்டு தமிழ் மொழி மீது அவர் கொண்டிருந்த ஆழமான நேசத்தின் வெளிப்பாடுகளில் ஒன்று. பலருக்கும் தெரியாத ஒரு விஷயம் ஆயிரக்கணக்கான வெண்பாக்களை எழுதியவர் அவர் என்பது. மிக ஆழமான தமிழ் வாசிப்பு மோகனுக்கு உண்டு. எழுத்தாளரும் கிரேசி மோகனின் நண்பருமான இரா. முருகனிடம் பேசிக்கொண்டிருந்தபோது சொன்னார், “மோகன் மரபுக் கவிதைகளில் ஆழமான அறிவைக் கொண்டிருந்தார். எனக்கு அவரைப் 10 வருடங்களுக்கு மேலாகத் தெரியும். தினமும் குறைந்தது ஐந்து வெண்பாக்களை எழுதிவிடுவார். என் கணக்குப்படி குறைந்தபட்சம் 20,000 வெண்பாக்களை யாவது எழுதியிருப்பார். காளிதாசனின் ‘குமார சம்பவ’த்தை முழுமையாக வெண்பாக்களாக இயற்றியிருக்கிறார். அருணகிரிநாதர் திருப்புகழில் 30 சந்தங்களை பயன்படுத்தியிருக்கிறார். இவர் அத்தனை சந்தங்களையும் எடுத்து பெருமாள் மீது திருப்புகழ் எழுதியிருக்கிறார்!”



**திரைப்படங்களில் தனித்துவம்**

தமிழ் நகைச்சுவை உலகில் கிரேசி மோகனின் முக்கியமான பங்களிப்பு என்று சொல்ல வேண்டுமென்றால் நகைச்சுவை என்ற பெயரில் நிறம், சாதி, மதம், இனம், பாலினத்தை வைத்து ஒருவரை இழிவுபடுத்தும் வசனங்களை அவர் அறவே தவிர்த்தமைதான். அவருடைய ஒரு நாடகத்தில் - பிற்பாடு அது சில திரைப்படங்களிலும் அது பிரதிபலித்தது - செவித்திறன் குறைந்த கதாபாத்திரத்தைக் கேலி செய்யும் வசனங்கள் இடம்பெற்றிருந்தன. பிற்காலத்தில் இதற்காக வருத்தம் தெரிவித்ததோடு, அதன் பிறகு உடல் குறைபாடுகளைக் கேலிசெய்யும் வசனங்களையும் முற்றிலுமாகத் தவிர்த்தார் மோகன். தமிழ் நாடகங்கள் ஏதோ ஒரு வடிவில் தொடர்ந்து நீடிக்கவேண்டும் என்று உழைத் துவரும் அர்ப்பணிப்பு மிக்கோர் பட்டியலில் தன்னையும் இணைத்துக்கொண்டவர் கிரேசி மோகன். அந்தப் பணி என்றும் நினைவுகூரப்படும்! ■




(1505 முதல் 1948 வரையான யாழ்ப் பாணத்தின் வரலாற்றைக் கட்டுரையாளர் இங்கு தொடராகப் பதிவு செய்கின்றார். இங்கு கூறப்பட்டுள்ள தகவல்கள் பெரும்பாலும் ஆங்கில மூலங்களில் இருந்து பெறப்பட்டவை. தகவல்களில் வேறுபாடு காணப்படும் சந்தர்ப்பங்களில் இரண்டு தகவல்களையும் இங்கு தரவுள்ளதாகவும், அவை தொடர்பில் தான் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை எனவும் கட்டுரையாளர் தெரிவித்துள்ளார்.)

# பால்டயஸ் பாதிரியாரின் டயறி

யாழ்ப்பாணப்பட்டினத்தின் கடைசி மாகாணம் பச்சிலைப்பள்ளி. இந்த இடம் மணற்பாங்கான பிரதேசம்.(கிளிநொச்சி, முல்லைத்தீவு இருமாவட்டங்களையும் பச்சிலைப் பள்ளி என்ற பெயரில் ஒல்லாந்தர் நிர்வாகம் செய்துள்ளனர்). இங்கு நான்கு தேவாலயங்களும் பல பாடசாலைகளும் உள்ளன. இங்குள்ள நெடிதுயர்ந்த பனைமரங்கள் இங்குள்ள வறியமக்களுக்கு உணவை வழங்குகின்றன. இங்கு யானைகளின் தொல்லை அதிகமாகக் காணப்படுகிறது. இவ்வூர் பெண்கள் யானைகளைத் துரத்துவதற்கு சங்கை எடுத்து ஊதுகின்றனர். யானைகளிடம் இருந்து பாதுகாக்கும் நோக்குடன் எமது தேவாலயத்தை சுற்றி உயரமான மதில் அமைத்துள்ளோம். இங்கு 300 மாணவர்களும் 600 நற்செய்தியாளர்களும் உள்ளனர்.பச்சிலைப் பள்ளியில் இருந்து 2 மணி நேரத்தில் முகமாலையை அடைந்து விடலாம் முகமாலையில் மரத்தினால் ஒரு தேவாலயத்தை அமைத்துள்ளோம்.

தர்மபுரம் தேவாலயம் இந்த மாகாணத்தின் பெரிய தேவாலயமாகக் காணப்படுகிறது. இங்கு 500 மாணவர்களும் 900 நற்செய்தியாளர்களும் உள்ளனர். முள்ளிப்பற்று தேவாலயம் இந்த மாகாணத்தின் கடைசி தேவாலயமாக காணப்படுகிறது. இங்கு 215 மானவர்களும் 350 நற் செய்தியாளர்களும் உள்ளனர். (முள்ளிப்பற்று என்பது முள்ளியவளையாக இருக்கலாம்) இங்கு எமது பாதுகாப்பு கருதி இங்குள்ள ஆற்றுக்கு அருகில் (பாலியாறு ஆக இருக்கலாம்.) தேவாலயத்துடன் இணைந்ததாக ஒரு கோட்டையை அமைத்துள்ளோம்.

அடுத்ததாக நாங்கள் யாழ்ப்பாணத்தின் தீவுகளுக்கு செல்வோம். இங்கு ஆறு தீவுகள் காணப்படுகின்றன. ஊர்காவற்றுறை, அல்லைப்பிட்டி, வேலணை போன்ற இடங்களில் மூன்று தேவாலயங்களை அமைத்துள்ளோம். இவற்றுள் ஊர்காவற்றுறை சென்ஜோன்ஸ் தேவாலயம் பெரியது. இங்கு 800 மாணவர்களும் 200 நற்செய்தியாளர்களும் உள்ளனர். போர்த்துக்கேசரால் தீக்கிரையாக்கப்பட்ட தேவாலயத்தை புது மெருகுடன் புனரமைத்து கற்தேவாலயமாக மாற்றியுள்ளோம். 1658 இல் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக மரங்கள் வேருடன் பாறின, கூரைகள் பிடுங்கி எறியப்பட்டன. மக்கள் மரங்களின் மேல் ஏறி அமர்ந்திருந்தனர். இங்கு தரமான வெண்ணெய் உற்பத்தியாகிறது. அத்துடன் சாய வேரும் இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது.இங்கு மான்களும், வானம்பாடிகளும். காணப்படுகின்றன. காரைதீவையும் ஊர்காவற்றுறையையும் Hamenheel கோட்டை பிரிக்கிறது. வன்னியிலிருந்து கொண்டு வரும் யானைகளை நாங்கள் ஊர்காவற்றுறையில் இருந்து தமிழ் நாட்டிற்கும் வங்க தேசத்துக்கும் ஏற்றுமதி செய்கின்றோம். இங்கு 490 மாணவர்களும் 1000-1100 நற் செய்தியாளர்களும் உள்ளனர்.


கிளிநொச்சி யானைகள்

(வரும்)

# தஞ்சைப் பெரிய கோயில்: மலைக்க வைக்கும் உழைப்பு



(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோவில் கட்டியாகி விட்டது. நிர்வகிக்க யார் யார். அவருக்கென்று வீடு ஒதுக்கி, வீட்டு இலக்கம் சொல்லி, பெயர் எழுதி, கல்வெட்டாய் வெட்டியிருக்கிறது. இடது சிறகு மூன்றாம் வீடு, நக்கன் பரமிக்கு பங்கு ஒன்றும், இடது சிறகு நான்காம் வீட்டு எச்சுமண்டைக்கு பங்கு ஒன்றும் என்று பல நூறு பெயர்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. வீணை வாசிக்கும் ஆதிச்சன் இறந்தமையால், அவன் மகனுக்குப் பங்கு அரையும் என்று சம்பளம் குறைக்கப்பட்டிருக்கிறது. கோவில் பணியில் உள்ள எல்லா தொழிலாளர்கள் பெயரும், தொழிலும் எழுதப்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்ல, கோவிலுக்கு யார் தானம் தந்தனரோ, அவர்கள் தந்தது சிறு தொகையானாலும், பெரிய தொகையானாலும், தங்க ஆபரணமானாலும், கல்லில் வெட்டப்பட்டிருக்கிறது. முதல் தானம் ராஜராஜனுடையது. “நாங்கொடுத்தனவும், நம் அக்கன் கொடுத்தனவும், நம் பெண்டுகள் கொடுத்தனவும்' என்று கல்வெட்டு துவங்குகிறது. தான் மட்டும் இக்கோவிலைக் கட்டியதாய் ஒரு சிறு நினைப்பு கூட அந்த மாமனிதனுக்கு இல்லை. கோவில் கட்டிய இந்த மனிதர்கள் எப்படி இருப்பர். கொஞ்சம் தெரிய வருகிறது.

விமானத்தினுள்ளே உயிர் ஓவியங்கள் உள்ளன. சட்டை அணிந்த தளபதிகள், பூணூல் அணிந்த அந்தணர்கள், இடுப்பில் பாவாடையும், மேல் போர்வையும் அணிந்த அரசிகள், இடதுபக்க பெரிய கொண்டையோடு, தாடியோடு மாமன்னர் ராஜராஜன், அலங்காரமான, மிக அழகான கறுப்பு, சிவப்பு, மாநிறம் கொண்ட தேவரடியார்கள் என்று அழைக்கப்பட்ட நடன மாதர்கள், சிதம்பரம் கோவில் நடராஜர், விதவிதமான முகங்கள் ஒன்று போல் ஒன்று இல்லை. உயிர் ததும்பும் முகபாவங்கள். தட்டை ஓவியங்கள். ஆனால், தெளிவாகத் தெரியும் ஒரு உலகம். மாமன்னர் ராஜராஜனைக் கோவில் கட்டத் தூண்டியது எது? போரா? கலைஞர்கள் செய்திறனா? இல்லை. பெரிய புராணம் என்ற திருத்தொண்டர் புராணம் முக்கிய தூண்டுதல். கோபுர வாசலில் உள்ள சுவர்களில், சிறிய சிறிய சிற்பங்கள் தெரிகின்றன. கண்ணப்ப நாயனார், பூசலார், கண்டேஸ்வரர் மன்மத தகனம் என்று, முக்கால் அடி உயர பதுமைகளைச் செதுக்கி வித்தை காட்டியிருக்கின்றனர். அடுத்த விநாடி குழந்தை பிறக்கும் என்ற தாயின் உருவம், மன்னர் முகங்கள், புராண காட்சிகள் எல்லாம், கோவில் கோபுரங்களில் உண்டு.

இது என்னவித கோவில்- விமானம் உயரம். மிக உயரம். கோபுரங்கள் சிறியவை. இது ஆகம விதியா? புதிய சிற்ப சாஸ்திரமா? உள்ளே நுழைந்ததும் நந்தியை மனதால் அகற்றிவிடுங்கள். எதிரே உள்ள விமானம் தான் சிவலிங்கம். வானம் ஒரு சிவலிங்கம். விமானத்திற்குள் உள்ள வெளி ஒரு சிவலிங்கம். வெளிக்கு நடுவே கருவறையில் கருங்கல் சிவலிங்கம். எல்லாம் சிவமயம். இந்த விமானத்திற்கு மாமன்னர் ராஜராஜன் வைத்த பெயர், “தென்திசை மேரு!' உள்ளே கடவுள் பெயர் பிரகதீஸ்வரர். தமிழில் பெரு உடையார். வடக்கே உள்ள கைலாயத்தின் மீது காதல். கைலாயம் போகவில்லை. கைலாயத்தை இங்கே கொண்டுவந்துவிட்ட உடையார் பெரிய உடையார், இது போதுமா கடவுளைச் சொல்ல. ரொம்ப பெரிசு ஐயா கடவுள். கருவறைக்கு அருகே உள்ள துவார பாலகர் கட்டுகிறார். பதினேழு அடி உயரம். அவர் கால், கதை, கதையைச் சுற்றி மலைப்பாம்பு. மலைப்பாம்பு வாயில் பெரிய யானை. அதாவது, யானையை விழுங்கும் பாம்பு. பாம்பு சுற்றிய கதை. கதையில் கால் வைத்த துவாரபாலகர், அவர் கை விஸ்மயம் என்ற முத்திரை காட்டுகிறது. உள்ளே இருப்பதை விவரிக்க முடியாது என்று கை விரிக்கிறது. விவரிக்கவே முடியாத சக்திக்கு, கடவுளுக்கு, தன்னாலான அடையாளம் காட்டியிருக்கிறார் மாமன்னர் ராஜராஜன்.

அதுவே பிரகதீஸ்வரம். அதுவும் விஸ்வரூபம், இன்றளவும்.

■

# மழையின் நடுவே...



ஆடுகளன்

உலகக் கிண்ணத் தொடர் என்பது பெரியளவில் ஒழுங்கமைப்புகள் மற்றும் ஏனைய சாதக - பாதக நிலைகள் குறித்து ஆராயப்பட்டு நடத்தப்படும் தொடராகும். ஆனால், இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இம்முறை அனைத்துமே தலைகீழாகியுள்ளன. அந்தளவுக்கு அங்கு போட்டிகள் பல நடத்தமுடியாமல் போயுள்ளன.

உலகம் முழுவதும் - வருடம் முழுவதும் கிரிக்கெட் போட்டிகள் பல நடைபெற்றாலும், அவற்றில் அணிகள் வெற்றிபெற்றாலும் கிடைக்கின்ற விருந்துகளைவிட அதிகபடியான விருந்து, உலகக் கிண்ணத் தொடர்களில் கிடைக்கும். இந்தத் தொடரில் ஒவ்வொரு அணியும் பெறும் ஒவ்வொரு வெற்றியும் அந்தந்த அணிகளின் ரசிகர்களுக்குக் கிண்ணத்தை வென்ற கொண்டாட்டமாகத்தான் அமையும்.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த - நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்தத் தொடரின், ஆட்டங்களில் குழப்பங்கள் ஏற்படும்போது அது பெரும் ஏமாற்றமாகத்தான் அமையும்.

இத்தகைய போட்டிகள் சிலவேளைகளில் சில இடையூறுகள் காரணமாக நிறுத்தப்படுவதுண்டு. ஆனால், இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உலகக் கிண்ணத் தொடரில், கிரிக்கெட் வரலாற்றில் இல்லாத அளவுக்கு போட்டிகள் மழை காரணமாக கைவிடப்பட்டும், டக்வேர்த் லூவிஸ் முறைப்படியும் முடிவுகள் வழங்கப்பட்டவண்ணம் உள்ளன.

அவ்வகையில் அமைந்த - நடந்து முடிந்த போட்டிகள் குறித்து சிறிது இங்கு ஆராயலாம்.

இலங்கை - ஆப்கானிஸ்தான் அணிகள் ஆடிய ஆட்டத்தில்தான் மழையின் ஆட்டமும் ஆரம்பித்தது. 41 ஓவர்களாகக் குறைக்கப்பட்ட இந்த ஆட்டத்தில் முதலில் ஆடிய இலங்கை 36.5 ஓவர்களில் 201 ஓட்டங்களுள் சுருள, பின்னர் ஆடிய ஆப்கானிஸ்தானுக்கு டக்வேர்த் லூவிஸ் முறைப்படி 187 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக்கப்பட்டது. எனினும், அந்த அணி 32.4 ஓவர்களில் 152 ஓட்டங்களுள் சுருண்டதால் இலங்கை வெற்றிபெற்றது.

இரண்டாவதாகவும், கடந்த 7ஆம் திகதி இலங்கை விளையாடிய ஆட்டத்தில்தான் மழை குறுக்கிட்டது. இம்முறை பாகிஸ்தானுக்கு எதிரானதாக அமைந்தமையால் இலங்கைக்கு ஓரளவு ஆறுதலாகத்தான் அமைந்திருக்கும். இந்த ஆட்டம் கைவிடப்பட்டதால் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது.

இதற்கடுத்ததாக, கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. அந்த அணி, 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 29 ஓட்டங்களைச் சேர்த்து 7 ஓவர்களை ஆடி முடித்து, அடுத்த ஓவரின் 3ஆவது பந்தை ஆடி முடித்தபோது மழை குறுக்கிட, ஆட்டம்தடைப்பட்டது. இதனால் இந்த ஆட்டம் முடிவற்றதாகவே முடிந்தது. இந்த ஆட்டத்தின் எதிரணியாக மேற்கிந்தியத் தீவுகள் களமிறங்கியிருந்தது. இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது. நிச்சயமாக இந்த ஆட்டத்தின் முடிவால் மேற்கிந்தியர்கள் கவலைப்பட்டிருப்பார்கள்.

இந்தப் போட்டி நடைபெற்ற அடுத்த நாள், ஏற்கனவே இலங்கையுடன் நெருங்கிவிட்ட மழை, இந்த ஆட்டத்திலும் தனது விளையாட்டைக் காட்டத்தவறவில்லை. பங்களாதேஷ் - இலங்கை அணிகள் கிட்டத்தட்ட சம பலமாக இருந்தமையால், இரு அணிகளுக்கும் இந்த ஆட்டத்தில் வெற்றி - தோல்வி சம அளவில் இருந்தது. இதனால் இரு அணிகளும் தமக்குக் கிடைக்கவேண்டிய வெற்றி பறிபோய்விட்டதாகவே எண்ணியிருக்கக்கூடும்.

அடுத்ததாக நல்லதோர் விருந்தைப் பார்க்கலாம் என்று காத்திருந்த ரசிகர்களின் எதிர்பார்ப்பையும் மழை கெடுத்தது. கடந்த 13ஆம் திகதி நடைபெறவிருந்த இந்திய - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான ஆட்டம் அது. இந்த ஆட்டத்தைக் காண ஆவலோடு காத்திருந்த ரசிகர்களுக்கு மழை நீரை வாரி இறைத்துக் கெடுத்தது.

அதேவேளை, ஏற்கனவே தோல்விகளால் துவண்டுபோய்க் கிடந்த தென்னாபிரிக்காவுக்குக் கிடைத்த சிறந்த வாய்ப்பைக் கெடுக்கப் பார்த்தது மழை. ஆனாலும், அந்த ஆட்டம் சிறு தடங்கலுடன் நடைபெற்றமையால் அந்த அணிக்கு வெற்றி கிடைத்தது.

கடந்த 15ஆம் திகதி நடைபெற்ற ஆப்கானிஸ்தானுக்கு எதிரான இந்த ஆட்   ின் ஆரம்பத்தில் மழை குறுக்கிட்டது. என   , 48 ஓவர்களாகக் குறைக்கப்பட்டு ஆரம்பித்த இந்த ஆட்டத்தில் முதலில் ஆடிய ஆப்கானிஸ்தான் 34.1 ஓவர்களில் 125 ஓட்டங்களில் சுருண்டது.

பின்னர் டக்வேர்த் லூவிஸ் முறைப்படி 127 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடிய தென்னாபிரிக்கா 28.4 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 131 ஓட்டங்களைச் சேர்த்து வெற்றியைத் தனதாக்கியது.

இதற்கடுத்த நாள் இரு அணிகளுக்கிடையிலான ஆட்டம் என்பதைக் கடந்து, இரு நாடுகளுக்கிடையிலான போராகவே பார்க்கக்கூடிய இந்த ஆட்டத்திலும், இறுதி நேரத்தில் மழை பொழிந்து தள்ளியது.

கடந்த 16ஆம் திகதி நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் ஆடிய இந்தியா, 50 ஓவர்கள் நிறைவில், 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 336 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் வெற்றியிலக்கு நோக்கிய ஆடிய பாகிஸ்தான் அணி, 40 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 212 ஓட்டங்களைச் சேர்த்திருந்தபோது மழை பொழிந்தது. இதனால், அத்துடன் ஆட்டம் தடைப்பட, டக்வேர்த் லூவிஸ் முறைப்படி வெற்றிக்கான அணி தெரிவானது. அதன்படி ஆட்டம் தடைப்பட்ட 40 ஓவர்களில் பாகிஸ்தான் அணி, 302 ஓட்டங்களைப் பெற்றிருந்தால் அந்த அணி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டிருக்கும். ஆனால் அந்த அணி 212 ஓட்டங்களை மாத்திரமே சேர்த்திருந்தமையால், இந்திய அணி 89 ஓட்டங்களால் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இவை கடந்த 16ஆம் திகதி வரையான ஆட்டங்களின் அடிப்படையில் சேகரிக்கப்பட்ட விபரங்களின் அடிப்படையிலானவை. இங்கிலாந்தின் கால நிலைப்படி இனியும் மழையின் வருகை தொடரும் என்றே எதிர்பார்க்கலாம்.

இந்த மழைக்குழப்பம் கிரிக்கெட் ரசிகர்களுக்கு விரும்பத்தகாததாக அமைந்தாலும், மீம்ஸ் போடுபவர்களுக்கு சிறந்த விருந்தாகவே அமைந்துள்ளது என்பது சமூக ஊடகங்களில் பார்க்கக் கிடைக்கின்றது.







இப்பத்திரிகை மானிப்பாய் வீதி, உடுவில் என்ற முகவரியிலுள்ள அம்பலம் பதிப்பகத்தால், 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 19.06.2019 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.